பக்கங்கள்: இருபது + IV = 24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 11 ஞாயிற்றுக்கிழமை (27.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 305

# வவுனியா அகதி முகாம் பகுதியில் படையினர் - அகதிகள் நேற்று மோதல்!

## துப்பாக்கிச் சூட்டில் சிறுமியும் மற்றும் இருவரும் காயம்

கொழும்பு,செப்ரெம்பர் 27

வவுனியா முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று மாலை 5.30 மணியளவில் மோதல்கள் நடைபெற்றன. அதன் காரணமாக பொதுமக்கள் மூவர் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதி மக்கள் ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமுக்கு விறகு எடுக்கச் சென்றபோதே அவர்களுக்கும் படையினருக்கும் இடையில் மோதல்கள் உண்டாகின என்று சொல்லப்படுகின்றது.

இந்த மோதல்களில் எட்டு வயதுச் சிறுமி ஒருத்தியும் மற்றும் இருவரும் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து செட்டிக்குளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா இராமநாதன் முகாமிலிருந்து சிலர் அடுத்துள்ள ஆனந்தகுமாரசாமி முகாமுக்குச் செல்ல முற்பட்ட போது அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய தாகச் சில தகவல்கள் தெரிவித்தன.

ஒரு முகாமிலிருந்து மற்றொரு முகாமுக்குச் செல்ல முயன்றவர்களை பாதுகாப்புப் படையினர் தடுத்த(20 ஆம் பக்கம் பார்க்க)

## 334 பேர் நேற்று காரைநகர் வந்தனர்

யாழ்ப்பாணம், செப். 27

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து 334 பேர் நேற்று மாலை காரைநகருக்கு அழைத்து (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினரைத் தேடி யாலவில் வேட்டை

கொழும்பு, செப். 27


கதிர்காமத்தை அண்டிய யால காட்டுப் பகுதியில் மறைந்திருப்பதாகக் கருதப்படும் விடுதலைப்புலி உறுப்பினர்களைத் தேடிப் பெரும் தேடுதல்(20 ஆம் பக்கம் பார்க்க)

# வங்கிகளில் உரிமை கோரப்படாத பல மில்லியன் ரூபா சொத்தை வடக்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த ஜனாதிபதியுடன் ஆலோசனை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தகவல்

யாழ்ப்பாணம்.செப்.27

வடமாகாணத்தில் உள்ள அரசவங்கிகளில் மிகநீண்ட காலமாக உரிமை கோரப்படாத நிலையில் உள்ள சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபா வைப்புக்களை வடக்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்கு ஆவனசெய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளேன்.



சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் மற்றும் அரச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அபிப்பிராயங்களைப் பெறுவதற்காக ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமாகாணத்தில் உள்ள அரச வங்கிகளில் வடமாகாண மக்களின் பல மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் மில்லியன் ரூபா பணமாகவும், இரண்டாயிரம்(20 ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் குறித்த விசாரணையை புலனாய்வுப் பிரிவினர் தொடர்வர்

கொழும்பு, செப்.27

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் தயா மாஸ்டர், ஜோர்ச் மாஸ்டர் ஆகியோரின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்டார்களா என்பது குறித்தும் தொடர்ந்து விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## போரினால் கை, கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்கள் பொருத்த இந்தியா உதவும்

### தூதுவர் அலோக் பிரசாத் அறிவிப்பு



வவுனியா, செப். 27

போரினால் பாதிக்கப்பட்டு கால், கைகளை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்தும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இந்தியா முன்வந்துள்ளது.

இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் இத்தகவலைத் தெரிவித்தார்.

வவுனியா மனிக் முகாம் பிரதேசத்துக்கு நேற்றுக்காலை விஜயம் மேற்கொண்ட போது இந்தியத் தூதுவர் இத்தகவலை வெளியிட்டார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஸ்ரீரஞ்சனை வெள்ளை வானில் வந்தோர் இரவில் கடத்தினர்

வவுனியா.செப்.27

தேசநிர்மாண அமைச்சர் சுஸந்த புஞ்சிநிலமேயின் இணைப்புச் செயலாளர் ஆறுமுகம் ஸ்ரீரஞ்சன் வவுனியாவில் வைத்து வெள்ளை வானில்வந்த இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார்.

அமைச்சரின் திருகோணமலை அலுவலகத்தில் அமைச்சரின் இணைப்புச் செயலாளராகப் பணி யாற்றிவரும் ஸ்ரீரஞ்சன் வவுனியாவில் தங்கியுள்ள தனது மனைவியைச் சந்திப்பதற்காக வந்திருந்தார்.

வவுனியா நகரசபை விடுதியில் அவர் தங்கியிருந்த போது அங்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் வெள்ளை வானில் அவரைக்கடத்திச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. ரெலோ அமைப்பில் நீண்டகாலம் அங்கம் வகித்து வந்த ஸ்ரீரஞ்சன் சமீபத்தில் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்தார். அதன் பின்னர் அமைச்சரின் இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். (அ-1)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தென்மராட்சி பிரதேச மாணவர்களின் நன்மை கருதி...

**யாழ்.,பேராதனை பல்கலைக்கழக**

**G.A.Q, B.A.Part -1, B.A.Final**

வெளிவாரி பரீட்சைகளுக்கான வழிகாட்டல்கள், விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

புதிய பட்டப்படிப்புகள் கல்லூரி
**NEW DEGREE COLLEGE**
N.D.C சங்கத்தானை சாவகச்சேரி

- விஜயதசமி தினத்தன்று நாள் வகுப்புகள் பி.ப 4 மணிக்கு ஆரம்பமாகின்றன.
- தொடர்புகளுக்கு :சனி,ஞாயிறு தினங்களில் காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை

தொலைபேசி -0776179040/021 3734426



ஒற்றுமை காண்போம்

காலம் :- 27.09.2009
நேரம் :- மு.ப 10.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்

**விருந்தினர்கள்**

திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்
பிரதேச செயலர் - பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்
திரு.S.பரராஜசேகரம்
RDO - பிரதேச செயலகம் சாவகச்சேரி
திரு.T.உமாபாலன்
RDO - பிரதேச செயலகம் கரவெட்டி

**நிகழ்வுகள்** மங்கள விளக்கேற்றல்
வரவேற்புரை
தலைமையுரை
விருந்தினர்கள் உரை
நிகழ்வுகள்
நன்றியுரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
நன்றி

60, அரசடி வீதி, யாழ்ப்பாணம் 0212226700 SOND


# மரண அறிவித்தல்

## திருமதி பரிமளம் முத்துக்குமாரு



பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் முத்துக்குமாரு 23.09.2009 புதன் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முத்துக்குமாருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - இளையபிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் இளைய மருமகளும் இரஞ்சிதமலர், அற்புதமலர் (தேவா-ஜேர்மனி), யோகமலர் (மாலா), தவயோகராசா (சுகந்தன்-பிரான்ஸ்), சுகுணராசா (சுகுணன் - இந்தியா ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் எஸ். கே.ஏ.ஆனந்தன் நாகேஸ்வரன் (நாகேஸ் - ஜேர்மனி), ஸ்ரீவிஜயநாதன் (உதயன் பப்ளிக்கேசன்ஸ்), யசோதா (பிரான்ஸ்) பத்மசுமா (சுமா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன் (புளோறிடா), நவஜீவன், தர்சன், அரவிந்தன், பிரதாபன், கேகயன், சதீஸ் (ஜேர்மனி), சங்கீதா (ஜேர்மனி), கஜானி, உஷா யினி, திலக்ஷன், நிருசன், அம்சாயினி, ஆகாஸ் (பிரான்ஸ்), அனிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தேவகி, நர்மிதா ஆகியோரின் ஆசைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
ம.ஸ்ரீவிஜயநாதன்
(உதயன் பப்ளிக்கேசன்ஸ்).


## விற்பனைக்கு

ஒரு கை பாவனையில் உள்ள Honda 125 Benly (NPJS xxxx) மோட்டார் சைக்கிளும், Top Field சற்றலைற் ரிசீவரும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 27/11, புங்கன்குளம் வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். Tel. 021 3211636

## திருமண சேவை

மணமக்களே! www. thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய முழு மையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவனசெய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619. Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15

## T.V.S மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள T.V.S victor இலக்கம் N.P.J.F XXXX மோட்டார் சைக்கிள் அரச உத்தியோகத்தரின் பாவனையில் இருந்தது விற்பனைக்குண்டு.

தொடர்பு : சிவலிங்கம் ரீச்சர், ஆறுகால் மடத்தடி.
T.P - 0774825587

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## தேவை

லான்ட் மாஸ்டர் சாரதி உடன் தேவை.
தங்கராசா கடை,
36, பாரதி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கெங்காதரன் வசந்தமல்லிகா



லெ.கெங்காதரன் ஆச்சாரியாரின் பாரியார் திருமதி கெங்காதரன் வசந்தமல்லிகா நேற்று (26.09.2009) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

316, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: கணவர்
லெ.கெங்காதரன் ஆச்சாரியார்.

## பொன்னுத்துரை மங்கையர்க்கரசி



26A, அன்னசத்திர லேன், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் 18, ராஜசிங்கா வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மங்கையர்க்கரசி நேற்று (26.09.2009) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26A, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம்.
T.P.: 021 222 7857

தகவல்:
பொ.தனபாலசந்திரன்
(சோதி, மகன்).


## தேவை

யாழ். நகர எல்லைகளுக்குள்,பிரதான வீதிகளில் அமைந்துள்ள,ஆகக் குறைந்தது 2000 சதுர அடிபரப்பளவு உள்ள வீடு கட்டிடம் வாடகைக்கு /சொந்தமாக வாங்குவதற்கு உடனடியாகத் தேவை. அல்லது ஆகக் குறைந்தது 2 பரப்புள்ள காணி விற்பனைக்கு உள்ளதாயின் உடனடியாகத்தொடர்புகொள்ளவும்.

*T.P: 0773952949*



## கலைமகள் அழகு நிலா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்

3 மாதகால பயிற்சிபெற்று சான்றிதழ் பெற விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**பயிற்சிகள்**

- Bridal dressing
- Facial
- Threading
- Hair Colouring
- Hair Stretching
- Hair Dye
- Hair Perming
- Hair Cutting
- Pimple Treatment
- Pedeicure Manicure
- Wedding Cake Icing

பயிற்சி ஆரம்பம் :- 1ஆம் பிரிவு - 28.09.2009, 2ஆம் பிரிவு - 01.10.2009 } காலை 10 மணி

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல:- 0779860506.
390,பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி,யாழ்ப்பாணம்
(பஸ்தரிப்புக்கு அருகாமையில் உள்ளதால் போக்குவரத்து வசதியாகும்)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி மாசிலாமணி

(இளைப்பாறிய ஆசிரியர்)



கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், Wentworthville Sydney ஐ வசிப்பிடமாகக் கொண்டவரும் யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முன்னாள் ஆசிரியருமான சின்னத்தம்பி மாசிலாமணி 22.09.2009 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர்களாகிய சின்னத்தம்பி - செல்லம் தம்பதியினரின் அன்பு மகனும் சிவகாமிப்பிள்ளையின் அன்புத் துணைவரும், கந்தர்மடம் மங்கையர்க்கரசி இளையதம்பி, அமரர்கள் கதிரவேற்பிள்ளை, குமாரசாமி, சச்சிதானந்தம், சண்முகம், பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தில்லைப்பிள்ளை, கனகசபை, சதாசிவம் ஆகியோரின் மைத்துனரும் பாலசௌந்தரி (அவுஸ்ரேலியா), பாலகுமாரன் (அவுஸ்திரேலியா), நந்தகுமாரன் (அவுஸ்திரேலியா), நந்தினி (U.K), தர்மினி (அவுஸ்திரேலியா), நிர்த்தனகுமாரன் (அவுஸ்திரேலியா), மகிந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராஜமூர்த்தி (அவுஸ்திரேலியா), ராஜி (அவுஸ்திரேலியா), ஸ்ரீதரன் (U.K) கேதீஸ்வரராஜா, (அவுஸ்திரேலியா), ராஜ ஈஸ்வரி (அவுஸ்திரேலியா), சுட்டி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெய்சங்கர், கௌரி, நிமலன், Tracey, ராகவன், செந்தூரன், பவ்யா, பிரதீபன், அனுசா, வினோதன், சஞ்சீவ், ஹரி, பிரசன்னா,ராம், தினேஷ், லக்ஷ்மன்,தேவராஜன், துர்க்கா, பிருந்தா, வருண் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், Lachlan, Caitlan, Lauren, Owen ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் எதிர்வரும் (30.09.2009) புதன்கிழமை அன்று NORTH RYDE மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ம.நிர்த்தனகுமாரன்
2/7, FEDERAL ROAD, WEST RYOE N.S.W 2114
T.P.: 0061298740903

## கந்தையா கனகராசா

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், இல215/01, ஆலடி வீதி (பொதுக்கிணறு வீதி), தோணிக்கல், வவுனியா எனும் முகவரியில் தற்போது வசித்து வந்தவரும், யா/யூனியன் கல்லூரி பழைய மாணவருமான கந்தையா கனகராசா 25.09.2009 வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தருமலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ரமேஷ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுரேஷ் மற்றும் சுதாகரன் (லண்டன்), சுபேதரன் (பிரான்ஸ்), சுமணன் (பிரான்ஸ்), விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சித்திரா (பிரான்ஸ்), விஜயா (லண்டன்), விஜயகுமாரி (பிரான்ஸ்), சுகிர்தா (பிரான்ஸ்), சிவசுதன் ஆகி யோரின் அன்பு மாமனாரும், தனுஷன், லோஜன், கிரிஜா, கஜன் (பிரான்ஸ்), சுகன்ஜன், அகல்ஜன், நிருஜா (லண்டன்), சுரோ ஜன், சுரேகன், சுரோமியா (பிரான்ஸ்), சமரன், சோழன் (பிரான்ஸ்), சுஜாந், றஜாந்தி (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை நாளை (28.09.2009) திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் வவுனியா தோணிக்கல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*215/01, ஆலடி வீதி,*
*தோணிக்கல், வவுனியா.*

தகவல்:
ச.சிவசுதன்.


## தேவை

**கிளை அலுவலகங்கள்**

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை

மேற் குறிப்பிட்ட இடங்களில் DFCC வங்கியின் கிளை அலுவலகங்களைத் திறப்பதற்கு, கீழ்க் குறிப்பிடும் வசதிகளுடன் கூடிய இடம் தேவை.

1. ஆகக் குறைந்த நில அளவு 3500 ச.அடி.
2. குறைந்தது 5 வாகனங்களை நிறுத்தக்கூடிய வாகனத் தரிப்பிடம்.
3. கட்டிட முன் பகுதியிலிருந்து வீதிக்கு இடையிலான பகுதி 30 - 40 அடி விஸ்தீரனம்.
4. 3- Phase மின் வலு கூடிய 60 amp மின்சாரம்

தொடர்புகளுக்கு
Vice President, (Services & Procurement)
DFCC Bank, No. 73/5 Galle Road, Colombo-03.
தொலைபேசி இலக்கங்கள் : 0777 798098 அல்லது 0112442442 ext 2222


## மானிய உரம் வழங்கல்

மல்லாகம் விவசாய சம்மேளப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கைக்கான உரம் மானிய அடிப்படையில் நாளையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் சண்டிலிப்பாயில் அமைந்துள்ள கீரிமலை கமநல சேவை நிலையத்தில் காலை 8 மணி தொடக்கம் விநியோகம் செய்யப்படவுள்ளது.

எனவே, பயனாளிகள் தேசிய அடையாள அட்டையைப் பதிவு செய்து முதலாம் கட்ட உரத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு மல்லாகம் விவசாய சம்மேளத்தினர் அறிவித்துள்ளனர். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவிலும் தண்ணீர் என்ற சந்திராயனின் கண்டுபிடிப்பு நீண்டகாலக் கேள்விக்கு விடைதந்தது

நிலவில் தண்ணீர் இருப்பதாக இந்தியா அனுப்பிய ஆளில்லாத செயற்கைக்கோள் சந்திராயன் -1 கண்டுபிடித்துள்ளது. விண்வெளி ஆராய்ச்சி மற்றும் நிலவு ஆராய்ச்சியில் மிக முக்கியமான கண்டுபிடிப்பாகவும் சாதனையாகவும் இது கருதப்படுகிறது.

இதற்கு முன் எத்தனையோ செயற்கைக் கோள்களை உலக நாடுகள் அனுப்பியும்,



அவற்றால் சாதிக்க முடியாத இந்த மாபெரும் கண்டுபிடிப்பை இந்தியாவின் சந்திராயன் -1 சாதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதா

புகைப்படம் எடுத்துள்ளது.

சந்திராயன் -1 விண்கலத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று தண்ணீர் இருப்பதைக் கண்டறிவது. அது நிறைவேறியுள்ளது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

'மூன் மேப்பர்' மூலம் தெரிய வந்துள்ள இன்னொரு முக்கிய கண்டுபிடிப்பு என்னவென்றால், நிலவில் தொடர்ந்து தண்ணீர்

உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதுதான்.

சந்திராயன்-1 ஐ வடிவமைத்து அனுப்ப இந்தியாவுக்கு ஆயிரத்து 200 கோடி இந்திய ரூபா செலவானது. ஆனால் குறித்த காலத்

கனிமங்களில் தண்ணீர் படிந்துள்ளது. நீரோடை தண்ணீர் போல இல்லாவிட்டாலும் குறிப்பட்ட அளவு தண்ணீர் அங்கு உள்ளது.

சூரியனிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சுக்கள் மற்றும் வெப்பக் காற்றின் தாக்கம் நிலவின் கனிமங்களின் மீது பட்டு, அந்த உருக்குக் கனிமம் ஒட்சிசனாகவும் தண்ணீர் மூலக்கூறுகளான $H_2O$ உருவாகி யுள்ளது. நிலவி ன் பாறை மீதுள்ள ஒட்சிசனாலும் மண்ணில் உள்ள ஐதரசனாலும் தண்ணீர் உருவாகி இருக்கலாம்- என்று கூறப்படுகின்றது

இந்தத் தண்ணீர் ஆதாரங்களைச் சந்திராயன் செயற்கைக்கோளில் பொருத்தப்பட்டிருந்த நாசாவின் 'மூன்மினரலெஜி மேப்பர்' கருவியைவிட இந்தியாவின் 'மூன் இம்பேக்ட் புரோப்' கருவிதான் துல்லியமாகக் கண்டுபிடித்துள்ளது; திரட்டியுள்ளது. அதேசமயம் நாசாவின் கருவியும் தடயங்களைக் கண்டுபிடித்துள்ளது.

இந்தக் கண்டுபிடிப்புகளை அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான 'நாசா' உறுதி செய்துள்ளது. சந்திராயன் செயற்கைக் கோளில் இருந்து நிலவுக்கு இறங்கிச் சென்ற 'மூன் இம்பேக்ட் புரோப்' கருவி தண்ணீர் மூலக்கூறுகள் இருப்பதற்கான உறுதியான தடயங்களைச் சேகரித்துள்ளது.

நிலவில் கடல், ஏரியில் இருப்பதுபோல தண்ணீர் இல்லை. சொட்டு, சொட்டாகக் கூட அங்கு தண்ணீர் சேர்ந்து இருக்கவில்லை. மேற்பரப்புக் கனிமங்களில் மிகவும் சிறிய

பினும், சந்திராயன் 95 சதவீத வேலைகளை முடித்து விட்டதாக 'இஸ்ரோ' விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

சந்திராயன் விண்கலம் மூலம் கிடைத்த தகவல் குறித்து அகமதாபாத்தில் உள்ள விண்வெளி ஆய்வு மையக் கிளையிலும், 'இஸ்ரோ' மையத்திலும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். இதுவரை சந்திரனுக்கு அனுப்பப்பட்ட எந்த விண்கலமும் தண்ணீர் இருந்ததை உறுதி செய்யவில்லை, ஆனால், சந்திராயன், நிலவில் தண்ணீர் இருப்பதை உறுதி செய்துள்ளது. 'இஸ்ரோ'வின் சார்பில் சந்திராயன் 'பே லோடில்' வைக்கப்பட்ட, 'மூன் மினராலொஜி மேப்பர் (எம்3)' என்ற கருவி நிலவில் தண்ணீர் இருப்பதைப் தெரிவித்துள்ளது.

பிரவுன் பல்கலைக்கழக விஞ்ஞானி கார்லி பீட்டர்ஸ் குறிப்பிடுகையில், 'சந்திரனில் தண்ணீர் உள்ளது. ஆனால், அங்கு கடல் உள்ளது; ஏரி உள்ளது; குட்டை உள்ளது என நாங்கள் கூறவில்லை. தண்ணீருக்குரிய மூலக்கூறுகள் சந்திரனில் உள்ளது உறுதியாகியுள்ளது' என்றார். மற்றொரு விஞ்ஞானி, 'சந்திரனில் உள்ள ஒரு தொன் மணலில் ஒரு லீற்றர் தண்ணீர் இருக்கும்' என்றார்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன், அப்பலோ விண்கலம் சந்திரனுக்குச் சென்று விட்டுத் திரும்பய போது எடுத்து வந்த மணலில், தண்ணீர் இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், விண்கலம் பூமிக்குள் நுழைந்த போது, சந்திரனிலிருந்து எடுத்து வந்த மண் மாசுபட்டு விட்டதால், தண்ணீர் இருப்பதை அப்போது உறுதியாகக் கூற முடியாமல் போனது. தற்போது தண்ணீர் இருப்பது உறுதியானதால், இது குறித்து

## இனி மனிதன் நிலவிலும் உயிர்வாழமுடியுமா என்ற ஆராய்ச்சிக்கு பல நாடுகள் முண்டியடிக்கப்போகின்றன

ரங்களுடன் கூடிய படங்களையும் செயலிழப்பதற்கு சில தினங்களுக்கு முன்பு அனுப்பியுள்ளது சந்திராயன்.



கடந்த ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் திகதி சந்திராயன் 1 ஆளில்லாத விண்கலம் நிலவுக்கு அனுப்பப்பட்டது. நிலவுக்கு மனிதனை அனுப்பும் இந்தியாவின் முயற்சியில் முதற்கட்டமாக இந்த விண்கலம் ஏவப்பட்டது.

வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கிய சந்திராயன் பல்வேறு படங்களை எடுத்து அனுப்பியது. இதுவரை 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படங்களை அது அனுப்பியுள்ளது. இதன் மூலம் நிலவின் தரை அமைப்பு, அங்குள்ள தட்ப வெப்ப சூழல் என பல விஷயங்கள் இந்திய விஞ்ஞானிகளுக்குப் பிடிபட்டன.

சந்திராயன் வடிவமைக்கப்பட்ட போது, அமெரிக்காவின் நாசா மையம் தனது கமரா ஒன்றையும் இதில் பொருத்தி அனுப்பியது. இந்தக் கமரா நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களை சேகரித்துள்ளது. எனவே இந்த மாபெரும் சாதனையில் நாசாவுக்கும் பங்கிருப்பதை மறுப்பதற்கில்லை.

இதுகுறித்து சந்திராயன் -1 திட்ட இயக்குநர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை கூறுகையில், மிகமிக திருப்தியாக உள்ளது. நிலவில் தண்ணீர்ப் படலம் இருப்பதை சந்திராயனில் இடம் பெற்றிருந்த நாசாவின் எம்3

துக்கு முன்பாகவே எதிர்பாராதவிதமாக சந்திராயன் செயலிழந்துவிட்டது. எனவே பல்வேறு விமர்சனங்களை இஸ்ரோ சந்தித்தது.

ஆனால் சந்திராயன் திட்டம் பெரும் வெற்றி என இந்திய முன்னாள் குடியரசுத் தலைவரும், விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் தெரிவித்தார்.

இப்போது அதை மெய்ப்பிக்கும் வகையில் சந்திராயன் சாதனை அமைந்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள நாசா, சந்திராயன் மூலம் நிலவு ஆராய்ச்சி மற்றும் ஒட்டுமொத்த விண்வெளி ஆராய்ச்சியே புதிய பரிமாணத்தில் புத்துணர்ச்சி பெற்றுள்ளது என்றால் மிகையல்ல. இது மிகப் பெரிய சாதனை. இதுபற்றி சாதாரணமாக கூறிவிட்டுப் போக முடியாது எனக் கூறியுள்ளது.

இந்தச் சாதனை தந்த தெம்பில் சந்திராயன் -2 மற்றும் நிலவுக்கு மனிதனை அனுப்பும் சந்திராயன் -3 திட்டங்களை முன்னெடுக்கிறது இந்தியா.

செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்காக தனி செயற்கைக்கோள் அனுப்பும் திட்டத்திலும் 'இஸ்ரோ' தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

### உயிர்கள் உள்ளனவா?

நிலவில் தண்ணீர் இருப்பது உறுதியாகி விட்டதால், அங்கு உயிரினங்கள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் நாசா இறங்கவுள்ளது.

கடந்த ஆண்டு முதல் நிலவை ஆராய்ந்து இவ்வாண்டு ஓகஸ்டில்செயல் இழந்த இந்தியாவின் சந்திராயன் செயற்கைக்கோள் நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்திருப்பது உண்மையிலேயே மிகப்பெரிய சாதனையாகும். சந்திராயன் இந்தியாவுக்கு உலக அரங்கில் பெருமையைத் தேடிக்கொடுத்துள்ளது.

பூமிக்கு சந்திராயன் அனுப்பிய நிலவின் அரிய புகைப்படங்கள் தகவல்களை தீவிரமாக விஞ்ஞானிகள் ஆராய்ந்தபோது நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்கள் தெரியவந்தன.

நிலவின் மேற்[illegible] மலைப் பாறைகளின் அடுக்குகள், மண்

அளவாக தண்ணீர் படிந்துள்ளது. சில மில்லிமீற்றர்கள் அளவு ஹைட்ரொக்சைலும் உள்ளது. எதிர்பார்த்ததை விட அதிக அளவு தண்ணீர் நிலவில் உள்ளது.

சந்திராயன் தனது 95 சதவீத பணிகளைக் கச்சிதமாக செய்து முடித்தது என முன்பு கூறினோம். ஆனால் அது 110 சதவீத வெற்றியைத் தந்துள்ளது - என இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத் தலைவர் ஜி. மாதவன் நாயர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்

நிலவில் உள்ள தண்ணீரைப் பிரித்தெடுக்க நம்மிடம் தொழில்நுட்பங்கள் உள்ளன ஒரு தொன் மண்ணிலிருந்து அரை லீற்றர் தண்ணீர் பிரித்து எடுக்க முடியும். அதுவும் சவாலான செயல்.

நிலவில் தண்ணீர் இருப்பதால் அங்கு மனிதர்கள் குடியேறி வாழ்வதற்கு சாத்தியம் உள்ளதா என்று நிருபர்கள் அவரிடம் கேட்ட தற்கு, நிலவில் தண்ணீர் ஆதாரத்தை மட்டும் தான் கண்டுபிடித்துள்ளோம். ஆனால் உயிரினம் இருப்பதற்கான தடயங்கள் கிடைக்கவில்லை.

இது குறித்த ஆராய்ச்சியில் ஒருபடிதான் ஏறியுள்ளோம். நிலவில் மனிதன் குடியேறலாமா என்ற கனவை நோக்கி நமது ஆராய்ச்சியின் உறுதியான முடிவுகளுடன் பயணிக்கிறோம். மேலும் ஏராளமான ஆராய்ச்சிகள் செய்ய வேண்டியிருக்கும்.

சந்திராயன்-1 சாதனையைத் தொடர்ந்து அடுத்தபடியாக நிலவுக்கு இந்தியா ஏவ உள்ள 'சந்திராயன்-2' செயற்கைக்கோளில் தங்களது கருவிகளைப் பொருத்துமாறு உலகநாடுகள் கேட்டவண்ணம் உள்ளன எனவே, செயற்கைக்கோள் திட்டத்தில் சிறிது மாற்றம் செய்ய வேண்டியிருக்கும் என்றார் நாயர்.

சந்திரனைப் பற்றிய ஆய்வு மேற்கொள்வதற்காக, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் சந்திராயன் விண்கலம் செலுத்தப்பட்டது. இரண்டு ஆண்டு காலம் செயல்படும் இந்த விண்கலம், சந்திரனைப் பற்றிய அனைத்துத் [illegible] வெளிப்படுத்தும் எனக் [illegible] ஆனால், கடந்த மாதம் இந்த சந்திராயன் செயலிழந்து விட்டது. இருப்



விரிவான ஆய்வு மேற்கொள்வதற்காக, 'நாசா'வின் சார்பில் அடுத்த மாதம் தொலை உணர்வு செயற்கைக்கோள் ஒன்று செலுத்தப்பட உள்ளது. சந்திரனின் மேற்பரப்பில் ஒரு சில சென்ரிமீற்றர் பரப்பளவின் தன்மை

**தொகுப்பு: அதிரன்**

யைத்தான் 'எம்3' ஆய்வு செய்துள்ளது. நிலவின் தரைப்பரப்புக்குள் தண்ணீர் உள்ளதா? என்பதை இனிமேல், 'நாசா' விஞ்ஞானிகள் முழு மூச்சில் ஆராய உள்ளனர்.


நிலவில் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, இனி நிலவுக்குச் செயற்கைக் கோள்களை அனுப் புவதற்கு பல நாடுகள் முண்டியடிக்கப் போகின்றன. அங்கு தண்ணீர் உள்ளதால் மனிதன் உயிர்வாழ முடியுமா என்ற ஆராய்ச் சிகளும் சூடுபிடிக்கப் போகின்றன.

சந்திராயன் - 1 படங்கள் குறித்து முழுமையான அறிக்கை எதனையும் 'நாசாவோ, இஸ்ரோவோ' இதுவரை வெளியிடவில்லை. அந்த அறிக்கைகளில் இருந்தே மேலதிக விவரங்கள் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் சின்னத்தம்பி செல்வராசா (மாயவன் லொறி உரிமையாளர்)



தோற்றம் 06.07.1951

மறைவு 28.08.2009

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய் பண்புடனே
தந்தை என்ற சொல்லுக்குத் தரணியிலே இலக்கணமாய் வாழ்ந்தீர்!
ஞாயிறு தோறும் மாயவன் காலடி பணிந்து மாண்புடனே
செல்வச் சீலனாய் வாழ்வாங்கு வாழ்ந்து- இவ்வுலகில்
எம்மை எல்லாம் வளர்த்து விருட்சமாக்கிய நீங்கள்
எம் நிழலில் வாழப்பிடிக்காமல் கலங்கவிட்டுச் சென்றதேனோ!
தாளாத் துயரில் தாங்காமல் நாங்கள் எல்லாம் பாரிலே பரிதவிக்க;
மூத்த மகளைத் தேடி தேவர் உலகம் சென்றதேனோ!
மறுபிறப்பிலும் எமக்கெல்லாம் தலைவனாகி- எம்மை
மறக்காமல் வழி நடத்துவீர் என அமைதிகொள்கின்றோம்.
எமக்காக நீங்கள் வகுத்து விட்ட பாதைதனில்- நாம்
தடம்பதித்து உங்கள் கனவுகளை நனவாக்குவோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத்தலைவன் மறைந்த செய்தியறிந்து ஓடோடிவந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (27.09.2009) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கானை வீதி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் கருணாதேவன் ரஜீபன் (ரஜீ)

(வணிக முதற்தேர்வு, வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகு, முதலாம் வருட மாணவன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

தோற்றம் 07.01.1988

மறைவு 28.08.2009

பௌர்ணமி நிலவாய் இன்றும்
ஜொலிக்கின்றாய் -எம்
சோக இரவுகளுக்குள்ளும்- எம்
இதய யன்னலில் இன்றும்
கவலைத் திரைகள் விலகவில்லை
சிந்திய கண்ணீருக்குள் எஞ்சிய
கண்ணீராய் உலர்ந்து போகும்
எமது நிம்மதிகள்.........
எம் உடம்பில் இணைந்திருக்கும்
மச்சம் போல்- எம் இதயவால்புகளில்
மூடப்படாத பம்பியாய் உன் ஞாபகங்கள்....
காரிருள் தூக்கத்தில் கலைந்து
கனவுகள் இல்லாமல் நீ எம்முன்
நியமாக நிற்கின்றாய்
கண்கலங்குகையில் எல்லாம்
ஆறுதல் சொல்லி அணைத்தாயே
அத்தருணங்களில் நீ எமக்குத் தாயடா!
ஆலமரமாய் விழுது விட்டு வளர்கின்றது
உன் நினைவுகள்
மறக்கச் சொல்லாதே- மாறாக மரணத்தை
தந்துவிடு ஏற்கின்றோம் மனமகிழ்வுடன்...
எம் விழிகளில் விம்பமாய்
உருண்டோடும் உன் முகத்திரையே
எம் அன்பிற்குச் சாட்சி
உன் நினைவு எம் சுவாசம்
ஒரு முறை உன் முகத்தைப் பார்ப்பதற்கு
எம் விழி இரண்டும் மூட முடியாமல் துடிக்கின்றது
குளத்திலே ஆயிரம் உறவிருந்தாலும்
தாமரை சூரியனுக்காக
விடியல் வரை காத்திருக்கும்
அதே போல் தாண்டா
உலகத்திலே ஆயிரம் உறவிருந்தாலும்
நாம் உனக்காக உன் நினைவுடன் காத்திருப்போம்...

எமது மகனின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சஜி ஸ்ரோர்ஸ்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணியின் கடாட்சம் எம்மைக் கல்வியிலும் கலைகளிலும் மேம்படுத்தும்



**நவராத்திரியின் கடைசி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை நம் சைவ மக்கள் சரஸ்வதி பூசையை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

இந்துசமய வழிபாட்டில் பல தெய்வ வழிபாடு சிறப்புமிக்கதோர் அம்சமாகும். ஆதிசங்கரர் இவ்வழிபாட்டினை சூரியன், கணபதி, சிவன், முருகன், திருமால் மற்றும் சக்தி ஆகிய தெய்வங்களை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் ஆறு வழிபாட்டு நெறிகளாக வகுத்துள்ளார். இவற்றில் சக்தியை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் நெறி ''சாக்தம்'' எனப்படும். கலைமகள் வழிபாடு இச்சக்தி வழிபாட்டு நெறிக்குள் அடங்குவதொன்றாகும்.

'சரஸ்வதி' என்னும் திருநாமத்தால் விளங்கும் அருளன்னை பொதுவாகப் படைக்கும் தொழிலுக் குரிய பிரம்மாவின் உயிர்ப்பு ஆற்றலாகக் கருதப்படுகிறாள். சாக்தநெறி நூல்கள் தேவி பராசக்தியே சரஸ்வதியாகவும் ஏனைய சக்திகளாகவும் விளங்குகின்றாள் எனக் குறிப்பிடுகின்றன.

சைவசித்தாந்தமும் நாமகளை சிவசக்தியின் ஒரு கூறாகவே குறிப்பிடுகின்றது. வாணி 64 கலைகளுக்கு முக்கிய தெய்வமாகப் போற்றப்படுகிறாள்.

அறிவு, தூய்மை ஆகியவற்றின் இருப்பிடமாகக் கலைமகள் கருதப்படுவதால், வெள்ளாடையும் வெண்தாமரையும் அவளுக்கு உரியவை ஆகின. கலைத் திருமடந்தை வெள்ளைக் கலையுடுத்து வெண்தாமரைமீது வீற்றிருப்பாள். பின் வலக்கரத்தில் அட்ச மாலையும், முன் வலக்கரத்தில் வியாக்கியான முத்திரையும், பின் இடக்கரத்தில் வெண்தாமரையும், முன் இடக்கரத்தில் ஏட்டுச் சுவடியும் தாங்கியிருப்பாள்.

''நவ'' என்பது சிறப்பு வாய்ந்ததொரு சொல்லாகும். இதற்கு இரு பொருள்கள் உள்ளன. 'ஒன்பது' என்பது இவற்றில் ஒன்று. 'புதியது' என்பது மற்றொரு கருத்தாகும். எனவே நவராத்திரி என்பதை ஒன்பது இரவுகள் எனப் பொருள் கொள்வதுபோல புதிய இரவுகள் எனவும் பொருள் கொள்ள இயலும்.

இந்துமதத்தவர்களது வழிபாட்டு முறைகளில் இரண்டு இராத்திரிகள் அமைகின்றன. அவற்றில் ஒன்று சிவராத்திரி. மற்றையது நவராத்திரி. ஒன்பது நாள் வழிபாடு அமைவதன் மூலம் சக்தியின் பெருமை உயர்ந்து அமைகின்றது.

உலகில் உள்ள சகல ஜீவராசிகளுக்கும் சக்தியையும் ஆன்ம ஒளியையும் கொடுக்கும் தாயின் வடிவான ஆதிபராசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி என்பவற்றின் ஆதாரமாக விளங்குகின்றாள். அவள் ஆன்மாவைக் கலந்து ஆதாரத்தில் நிலைத்து நிற்கும் நிலையை மூன்று சக்திகளாகப் பிரித்து அதனை ஒன்பது இரவுகள் வழிபாடு செய்வதையே நவராத்திரி என அழைக்கிறோம்.

அந்தவகையில் ஆதிபராசக்தியை முதல் மூன்று நாள்கள் துர்க்கா வடிவமாகவும், அடுத்த மூன்று நாள்கள் லட்சுமி வடிவமாகவும், கடைசி மூன்று நாள்கள் சரஸ்வதி வடிவமாகவும் வீரம், செல்வம், கல்வி என்பவற்றை அருளும் அம்சங்களாக அவர்களைக் கொண்டு வழிபடுகின்றோம்.

நவராத்திரி விரதம் அனுஷ்டிப்போர் மிகுந்த பக்தி சிரத்தையுடன் இவ் ஒன்பது நாள்களும் தெய்வ சிந்தனையுடன் விரதத்தைக் கடைக்கொண்டால் துன்பதுயரங்கள் நீங்கி வாழ்வில் வளமும் மகிழ்வும் கிட்டப்பெறுவர் என்பது ஆன்றோர் வாக்கு. ஒன்பது தினங்களும் விரதம் அனுஷ்டிக்க இயலாதோர் கடைசி மூன்று நாள்களான புரட்டாதி மாதத்தின் ஸப்தம், அட்டமி, நவமி ஆகிய திதிகள் வரும் நாள்களில் விரதமிருந்து சரஸ்வதியின் அனுக்கிரகத்தைப் பெறுதல் சிறப்பாகும். அந்தவகையில் இன்றைய மகாநவமித் திதியன்று சரஸ்வதி பூசையின் நிறைவு தினமாகும்.

சரஸ்வதி பூசைத் தினமான இன்று என்றும் அழியாத காலத்தால் கூட அழிக்க இயலாத கல்விச் செல்வத்துக்கு அதிபதியாம் - கலைகளுக்கெல்லாம் வித்தகியாம் சரஸ்வதியைத் துதித்து, அவளது அனுக்கிரகம் வேண்டி விரதமிருந்து கல்வியில், கலைகளில் எமக்கெல்லாம் மேன்மையும் வெற்றியும் அருளவேண்டி வழிபடுகிறோம். இது இந்து மதத்தவர் காலாதிகாலமாக கடைக்கொண்டுவரும் ஒரு தூய வழக்கமாகும். அந்தவகையில், குறிப்பாக கல்வி முயற்சியில் ஈடுபட்டு வரும் நமது மாணவச் செல்வங்கள் இன்றைய தினம் சரஸ்வதியின் கடாட்சம் வேண்டி அவளை

**சதரா**

மனதில் இருத்தி வழிபாடு செய்து அவளருள் பெற்றுக் கல்வியில் சிறந்து-உயர்ந்து வாழ்வில் வளமும் புகழும் பெற முயல்தல் சாலச் சிறப்பாகும். குமரகுருபரரின் சகலகலாவல்லி மாலையை நவராத்திரி தினங்களில் பாராயணம் செய்வதால் மாணவச் செல்வங்கள் கல்வியில் மென்மேலும் சிறப்பும் மேன்மையும் ஈட்டிட இயலும்.

சரஸ்வதி பூசை தினங்களில் மாணவச் செல்வங்கள் தமது புத்தகங்களைப் பூசையில் வைத்தும், தொழிலாளர்கள் தமது தொழில்சார் கருவிகளை வைத்தும் வணங்கி நாளையதினம் விஜயதசமியன்று அவற்றை எடுத்துப் பயன்படுத்துவது வழக்கம். அந்தவகையில் விஜயதசமி ஆயுதபூசையெனவும் கொள்ளப்படுகிறது.

விஜயதசமியில் புதிய வேலைகளை ஆரம்பிப்பதும், கல்வியை ஆரம்பிக்கும் சிறுவர், சிறுமியர்களுக்கு முறைப்படி ஏடு தொடக்குதல் என்ற வித்தியாரம்ப நிகழ்வும் சம்பிரதாயபூர்வமாக கடைக்கொள்ளப்பட்டு வரும் ஒரு வழக்கமாகும்.

விஜயம் என்றால் வெற்றி எனப் பொருள்படும். நவராத்திரியின்போது முறைப்படி விரதமிருந்து மூன்று சக்தி வடிவங்களை மனதாரப் பூஜிப்போருக் குத்துணிவும், செல்வமும், கல்வியும் ஒருசேரக் கிட்டும் என்பது இந்துமதத் தத்துவமாகும்.

எனவே, ''அகிலமதில் நோயின்மை, கல்வி, தனதானியம், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு ,சந்தானம் வலிதுணிவுவாழ்நாள் வெற்றி ஆகு நல்லூழ் நுகர்ச்சி தொகைதரும் பதினாறு பேறும் தந்தருளி நீ சுகானந்த வாழ்வளிப்பாய்'' என்ற அபிராமிப்பட்டரின் வேண்டுதலுக்கேற்ப இந்நவராத்திரி நாள்களில் சக்தியின் வடிவமாம் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகியோரை மனதாரத் துதித்து அவர்களது அருள்பெற்று உய்வோமாக! ★

# சர்வதேச தரத்தில் வீரர்கள் பிரகாசிப்பதற்கு போதிய வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படுமா?

மக்கள் நடமாட்டம் குறைவான முனியப்பர் வீதியில் அரச, இராணுவ வாகனங்கள் விரைந்தோடின. நீண்ட நாள்களாய் சீரமைக்கப்படாத துரையப்பா மைதானம் விரைவாக சீரமைக்கப்பட ஆரம்பித்தன. வீதியால் சென்ற மக்கள் யாராவது முக்கிய பிரமுகர்கள் வரப்போகிறார்களா எனப் பேசிக் கொண்டிருந்தனர்.

ஆனால் இவ்வளவு பரபரப்புக்கும் காரணம் 15 வருடங்களுக்கும் மேலாக யாழ். நகரில் நடத்தப்படாது இருந்த வடமாகாண விளையாட்டுப்போட்டிதான். கடந்த 18 ஆம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் நடைபெற்றன. மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் மாகாண மட்டப் போட்டிக்காக வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், வவுனியா , கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த மூவின வீரர்களும் ஒன்றாகக் கூடினர்.

18 ஆம் திகதி காலை முதல் மைதானத்துக்குள் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் 5 மாவட்ட வீரர்களும் கூடத்தொடங்கினர். பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த போட்டிகள் பிரதமவிருந்தினர்களின் வருகையை அடுத்து உற்சாகமாக ஆரம்பித்தன.

பிரதம விருந்தினர்கள் சம்பிரதாய பூர்வமாக அழைத்து வரப்பட 5 மாவட்டங்களின் அணி வீரர்களும் அணி வகுத்து மரியாதை செலுத்தினர். சமாதானப் புறாக்கள் பறக்க விடப்பட்ட வேளை மைதானத்தை சூழநின்ற மழலைகளின் கையில் இருந்தும் வண்ண வண்ணப் பலூன்களும் பறக்க விடப்பட்டன.

இதேவேளை மைதானத்துக்குள் வருகை தந்துகொண்டிருந்த பார்வையாளர்கள் நுழைவாயிலில் நின்றிருந்த பொலிஸாரால் பரிசோதனை செய்து அனுப்பப்பட்டார்கள். பெரும்பாலானவர்கள் மைதானத்தின் வெளியே நின்று போட்டியைக் கண்டு ரசித்தார்கள்.

யாழ். மண் விளையாட்டுத்துறைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைப் போன்றே பாரம்பரியக் கலைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது என்பதைப் பறைசாற்றும் முகமாக போட்டியின் ஆரம்ப நிகழ்வுகள் அமைந்தன.

முதல் நாள் நிகழ்வுகளாக 1500 மீற்றர் ஆண், பெண்களுக்கான ஓட்டப்போட்டியும், மன்னார்- யாழ்ப்பாணம் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றன. ஓட்டப் போட்டியில் வவுனியாவின் வீரர்களான சிவநேசன், பன்னவெல ஆகியோர் முதலிரண்டு இடங்களையும் பெற மூன்றாமிடத்தை யாழ். வீரர் நேசரூபன் பெற்றார். பெண்களுக்கான ஓட்டத்தில் வவுனியாவின் வீராங்கனைகளான ஹேரத், எழிலரசி ஆகியோர் முதலிடங்களைப்பெற மூன்றாம் இடத்தை யாழ். வீராங்கனை மேர்ஷி தட்டிச் சென்றார்.

இறுதியாட்டமாக மன்னார்-யாழ்ப்பாணம் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம் நடைபெற்றது. நேரம் போதாமையினால் ஆட்டத்தின் மொத்த நேரம் 40 நிமிடங்களாக குறைக்கப்பட்டன. ஆனால் இருஅணியின் வீரர்களிடமும் 'குழு மனப்பாங்கு' என்பது குறைந்தளவாகவே காணப்பட்டது. மன்னார் அணியின் டினேஸ் ஒரு கோலைப் பெற யாழ். அணியால் எவ்வளவு முயன்றும் கோல் பெற முடியாததால் 1:0 எனும் கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியது. மொத்தத்தில் இது ரசிகர்களுக்கு ஒரு காட்சி உதைபந்தாட்டமாகவே அமைந்ததே தவிர போட்டியாக இருக்கவில்லை.

உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடிய யாழ். மாவட்ட அணியில் குறித்த ஒரு கழகத்தின் வீரர்களே பெரும்பான்மையாக இடம் பெற்றிருந்தனர். யாழ். மாவட்டங்களில் உள்ள உதை பந்தாட்ட அணிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணியாக யாழ். அணி இருக்கவில்லை . இது ரசிகர்கள் மத்தியில் பல் வேறு விமர்சனங்களை உண்டு பண்ணியது.

## முடிவடைந்த மாகாண மட்ட விளையாட்டு விழா வடக்கு வீரர்களுக்கு சிறந்த ஆரம்பமாக அமையட்டும்

முதல் நாள் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக முடிவடைந்தன. வெளிமாவட்ட வீரர்களிடம் நாம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தபோது அவர்கள் அனைவரும் பொதுவாகக் கூறியது போக்குவரத்து தொடர்பானதாகவே அமைந்தது.

மன்னார் வீரர் சதீஸ் என்பவர் கூறுகையில் 'நாங்கள் நேற்று மாலைதான் (17.09.2009) யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். அதனால் எங்களால் சரியாக விளையாட முடியவில்லை' என்றார். ஏனெனில் நீண்டதூரப் பயணமும் சீரற்ற பாதையும் தம்மைக் களைப்படைய வைத்து விட்டதாகவும் எனினும் யாழ்.அதிகாரிகள் தம்மைச் சிறந்தமுறையில் உபசரித்ததாகக் கூறினார்.

முதல்நாள் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் 2 ஆம் நாள் போட்டிகள் மறுநாள் சனிக்கிழமை ஆரம்பமாகின. ஆனால் வீரர்களையும் போட்டி நடுவர்களையும் தவிர வேறு எவரையும் மைதானத்தில் காணமுடியவில்லை. பல கட்டங்களாகப் போட்டிகள் நடைபெற்றன. வீரர்கள் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்தி விளையாடியபோதும் அவர்களை உற்சாகப்படுத்துவதற்குப் பார்வையாளர்கள் எவருமே இருக்கவில்லை என்பதே வேதனைக்குரிய விடயங்களாகும்.

இரண்டாம் நாளில் தடகளப் போட்டிகள் பலவும் நடைபெற்றன. மைதானத்தின் பல பகுதிகளிலும் கபடி, வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், ஓட்டப்பந்தயம், தட்டெறிதல், குண்டெறிதல் என்பன நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதேவேளை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆண், பெண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

சொந்த மைதானங்களில் யாழ்.வீரர்கள் பிரகாசிப்பார்கள் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர்கள் பெரிதளவில் ஜொலிக்கவில்லை என்றே கூறலாம். ஆனாலும் குழுநிலைப் போட்டிகளில் யாழ்.மாவட்டப் பெண்கள் சிறப்பாகவே செயற்பட்டனர். அஞ்சல் ஓட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பவற்றில் முதலிடத்தைப் பெற்றதுடன் கிரிக்கெட்டிலும் அவர்கள் விறுவிறுப்பான ஆட்டத்தை வழங்கினர்.

பெண்கள் அணியின் பந்துவீச்சாளர்கள் அதிகளவான உதிரிகளை வழங்கியபோதும் இறுதிப் பந்துவரை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தனர். சிறப்பான துடுப்பாட்டத்தையும், களத்தடுப்பையும் வெளிப்படுத்தியிருந்தனர். இருந்தபோதும் வவுனியா அணி வெற்றி பெற்றதால் அரையிறுதியுடன் வெளியேறியது.

10000 மீற்றர் ஓட்டப் போட்டியில் யாழ். வீராங்கனை மேர்ஷி ஒரு செக்கனில் முதலிடத்தைத் தவறவிட்டது பலரையும் ஏமாற்றமடைய வைத்தது. இதில் வவுனியா வீராங்கனை ஹேரத் 47 நிமிடங்கள் 40 செக்கன்களில் ஓடித் தங்கம் வெல்ல மேர்ஷி 47 நிமிடங்கள் 41 செக்கன்களில் ஓடி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

**தமிழரசன்**

மூன்றாம் நாள் ஆட்டங்கள் 19 ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பித்தன. இப்போட்டிகளிலேயே யாழ்.வீர வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தினர். இதனால் யாழ்.மாவட்டம் முன்னிலை பெற்றது.

பிற்பகல் 3 மணிக்கு பிரதம விருந்தினர்கள் வருகைதர பாரம்பரிய கலைகள் காட்சிகளாய் விரிந்தன. ஆனால் திட்டமிடப்பட்ட நேரங்களில் போட்டிகள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதனால் போட்டிகளை நடத்துவதில் காணப்பட்ட இழுபறி நிலைகள் வெளிப்படையாகத் தெரிந்தன.

மாலை 6 மணியளவில் மீண்டும் அணி வீரர்கள் ஒன்றிணைய பரிசு வழங்கும் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் முதலிடம் வென்ற யாழ் மாவட்டத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்கிவிட்டு விடைபெற்றனர்.

தொடர்ந்து அரச அதிபர் கே.கணேஸ், மாகாண அமைச்சின் செயலாளர் இளங்கோவன் ஆகியோர் தொடர்ந்து கேடயங்கைள வழங்கினர். பின்னர் இளங்கோவன் அடுத்த வருட மாகாண விளையாட்டு விழா கிளிநொச்சியில் நடைபெறும் என அறிவித்தார். பின்னர் தேசிய, மாவட்டக் கொடிகள் இறக்கப்பட 3 நாள் திருவிழா நிறைவடைந்தது.

வடமாகாண விளையாட்டு விழாவில் பல விளையாட்டுகள் இடம்பெற்றபோதும் பலரும் எதிர்பார்த்த சில விளையாட்டுக்கள் இடம்பெறாதது வீரர்களுக்கும் ரசிகர்களுக்கும் ஏமாற்றத்தையே வழங்கியது. இவ்வகையில் கூடைப்பந்தாட்டம், நீச்சல், படகோட்டும் போட்டி, மரதன் ஓட்டம், ஹொக்கி, கடினபந்து துடுப்பாட்டம், சைக்கிள் ஓட்டம், ரென்னிஸ் என்பவற்றுடன் வேறு சில போட்டிகளும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினர்கள் சர்வதேச தரத்திலான போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இவ்வீரர்களுக்கு வாய்ப்புகளும், பயிற்சிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனக் கூறியிருந்தனர். ஆனால் இப்போட்டிகளில் சில நடைபெறாததற்கான காரணங்களில் ஒன்றான அவற்றுக்குப் பொருத்தமான ஆடுகளங்களோ வசதிகளோ இல்லையே என்பதாகும். எனவே இவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே சம்பந்தப்பட்டவர்களின் வேண்டுகோளாக உள்ளது.

வடமாகாண விளையாட்டு விழாவில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் அணிகள் முதல் மூன்று இடங்களைப் பெற்றிருந்தன. ஆனால் இவ்விழாவில் பங்குகொண்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட வீரர்களினதும் பார்வையாளர்களினதும் கேள்வியாக அமைவது வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த வீரர்கள் ஏன் வரவில்லை? என்பதே.

யாழ்ப்பாணத்தின் நலன்புரி முகாம்களில் இருந்து வருகை தந்த வீரர்கள் தமக்குப் போதியளவு பயிற்சிகள் கிடைக்கவில்லையென்று கூறியதுடன் தமது சக வீரர்கள் கலந்துகொண்டிருந்தால் தாமும் ஏனைய அணிகளுக்கு சளைக்காது போட்டியிட்டிருப்போம் - என்றனர்.

ஆனால் இன்று எழுந்துள்ள கேள்வி தேசியமட்டப் போட்டிகளில் இவர்கள் கலந்துகொள்வார்களா? என்பதுடன் அடுத்தவருடம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளதாகக் கூறப்படும் விளையாட்டு விழா சாத்தியமானதா? என்பதுமே. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அணி அனைத்துப் போட்டிகளிலும் தோல்வி



இந்தியாவில் நடைபெற்றுவரும் 23 ஆவது ஆசிய மகளிர் கூடைப்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை விளையாடிய கடைசி லீக் ஆட்டத்திலும் தோல்வி அடைந்து வெளியேறியுள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டியில் இலங்கை மகளிர் கூடைப்பந்து அணி கடந்த 21ஆம் திகதி பிலிப்பைன்ஸ் அணியைச் சந்தித்தது. இதில் தொடர்ந்தும் சோபிக்கத் தவறிய இலங்கை அணி 55:70 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வி அடைந்தது. இலங்கை அணி சார்பாக பிரெமிலா பேருவலகே மற்றும் இனோகா ஜூவான் ஆகியோர் அதிகபட்சமாக தலா 12 புள்ளிகளைப் பெற்றனர்.

இதன்மூலம் இலங்கை அணி இம்முறை ஆசிய மகளிர் கூடைப்பந்து போட்டியில் விளையாடிய 5 லீக் ஆட்டங்களிலும் தோல்வியைச் சந்தித்து தொடரில் இருந்து வெளியேறியது. 'பி' பிரிவில் விளையாடிய இலங்கை அணி இதற்கு முன்னர் மலேசியா (45:81), கஸகஸ்தான் (40:94), லீபயா (54:96) மற்றும் உஸ்பெஸ்கிஸ்தான் (48:89) அணிகளுடனான போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்தது.

இதன்படி இம்முறை 12 நாடுகள் பங்கேற்றுள்ள ஆசிய மகளிர் கூடைப்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை அணி கடைசி இடத்திலுள்ளது.

## றோஜர் பெடரருக்கு அபராதம்



அண்மையில் நியூயோர்க்கில் நடந்து முடிந்த அமெரிக்க ஓபன் ரென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் முதல் நிலை வீரர் சுவிற்சர்லாந்தின் றோஜர் பெடரர், ஆர்ஜென்ரீனாவின் மார்ட்டின் டெல் போட்ரோவிடம் போராடித் தோல்வி அடைந்தார். இந்த ஆட்டத்தின்போது ஒரு கட்டத்தில் பெடரர் நடுவருடன் வாக்குவாதம் செய்தார். டெல் போட்ரோ 10 வினாடிகள் கழித்து மேல்முறையீடு செய்தாலும் ஏற்கப்படுகிறது.

ஆனால் எனக்கு 2 வினாடிகள் கழித்து கூட மேல்முறையீட்டிற்கு அனுமதிப்பதில்லை என்று குற்றஞ்சாட்டி நடுவரிடம் காரசாரமான வாதத்தில் ஈடுபட்டார். இதற்காக அவருக்கு ரூ.72 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு இருப்பதாக அமெரிக்க ஓபன் செய்தி தொடர்பாளர் கிறிஸ் விட்மேயர் தெரிவித்துள்ளார்.

இதேபோல் ஆட்டத்தின்போது அசிங்கமாகத் திட்டியதாக ரஷியாவின் வீரா ஸ்வோனரிவா, டேனியல் கோயல்லரர் ஆகியோருக்கும் இதே தொகை அபராதமாக விதிக்கப்பட்டு இருக்கிறது. நடுவரை கொன்று விடுவதாக மிரட்டிய அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஏற்கனவே ரூ.5 லட்சத்தை அபராதமாக இழந்துள்ளார். ஒரு ரசிகரிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக கனடா வீரர் டேனியல் நெஸ்டருக்கு ரூ.2 லட்சத்து 40 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த அமெரிக்க ஓபன் தொடரின் மூலம் மொத்தம் 15 லட்சம் ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டு இருப்பதாக விட்மேயர் குறிப்பிட்டார்.

## திருட்டுப்போன ஒலிம்பிக் பதக்கம் 25 ஆண்டுகளுக்குப் பின் மீட்பு




அவுஸ்திரேலிய நீச்சல் வீரர் ஜோன் கோன்ராட்ஸ் 1960ஆம் ஆண்டுஉரோமில்நடந்த ஒலிம்பிக் போட்டியில் 1500 மீற்றர் பிரீஸ்டைல் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். மெல்போர்னில் உள்ள இவரது வீட்டில் நுழைந்த திருடர்கள் (1984), ஒலிம்பிக் பதக்கம் உட்பட மொத்தம் 15 பதக்கங்களை அள்ளிச் சென்றனர்.

அந்தப் பதக்கங்கள் இணையத்தள விற்பனைக்கு வருவதாக கடந்த வாரம் விளம்பரம் செய்யப்பட்டது. வாங்க விரும்பிய ஒரு ரசிகர், கோன்ராட்ஸுக்கு தொலைபேசியில் அழைத்து விசாரித்துள்ளார்.

அவர் உடனடியாக பொலிஸை உஷார் செய்ய, விளம்பரம் கொடுத்த பெண்ணை கைது செய்து பதக்கங்களை மீட்டனர். சில ஆண்டுக்கு முன் அவற்றை ஒரு கடையில் சொற்ப தொகைக்கு வாங்கியதாகவும் அவற்றின் மதிப்பு தனக்குத் தெரியாது என்றும் அந்தப் பெண் கூறியுள்ளார்.

## மரடோனாவின் காது வளையங்கள் பறிமுதல்



ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் முன்னாள் வீரரும் பயிற்சியாளருமான டியாகோ மரடோனாவின் காதுவளையங்களை இத்தாலி வருமானவரித்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

1986ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்ரீனா அணியின் தலைவராக இருந்த மரடோனா 1984ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை இத்தாலியில் தங்கியிருந்தார். அப்போது அங்குள்ள கழககங்களுக்காக அவர் உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடினார். இதற்காக அவர் பெற்ற பணத்தில் இத்தாலி அரசுக்கு வருமானவரி செலுத்தி இருக்க வேண்டும். ஆனால் அவர் செலுத்தவில்லை.

இந்நிலையில் மரடோனா இத்தாலிக்கு




சென்றார். வருமானவரி செலுத்தாததற்காக அவரது வளையங்கள் இரண்டையும் இத்தாலி வருமானவரித்துறை அதிகாரிகள் கைப்பற்றினர். இந்த இரண்டு வளையங்களின் மதிப்பு 5,888 டொலர்களாகும்.

கடந்த 2006ஆம் ஆண்டு மரடோனா இத்தாலி சென்றிருந்தபோது வருமான வரிக்காக அவரது பெறுமதிவாய்ந்த கைக் கடிகாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மரடோனா இத்தாலி கழகங்களில் விளையாடியதற்காக மொத்தம் 45 மில்லியன் டொலர்கள் வருமான வரியாக செலுத்த வேண்டியுள்ளது என இத்தாலி வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

## ஆட்டநாயகனுக்கு கடிகாரம் மட்டும்

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஆட்டநாயகன் விருதுக்கு, பணத்துக்கு பதிலாக கடிகாரங்கள் மற்றும் மேலங்கிகள் வழங்கப்படும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது. ''இந்த ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் போட்டியில் சிறப்பாக விளையாடி ஆட்டநாயகன் விருது பெறுபவர்களுக்கு பணம் வழங்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அவர்களுக்கு விலையுயர்ந்த கடிகாரங்கள் மற்றும் மேலங்கிகள் வழங்கப்படும். இது அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்'' என ஐ.சி.சி. நிர்வாகக் குழுவின் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

செலவுகளைக் குறைக்கவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த ஆண்டின் சாதனையாக ரூ. 20 கோடிக்கும் மேல் பரிசுப் பொருள்கள் வழங்கப்பட இருக்கின்றன. மேலும், இத்தொடரில் போட்டியிடும் அனைத்து அணிகளும் ஜெகன்னஸ் பேர்க்கில்தான் தங்கியுள்ளன. இதனால் தேவையற்ற போக்குவரத்துச் செலவுகள் குறைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கரட் 22க்கு ரூபா 22,000 என்பது சாதனை படைத்திடும் தொகை!
மாதத்திற்கு 1.5% அதிகுறைந்த வட்டி!
இவை இரண்டினையுமே வழங்கும் ஸ்ரீலங்காவின் ஒரேயொரு வங்கி
சம்பத் வங்கி
மாத்திரமே
சம்பத்




அடகுச் சேவை
சாதாரண்மாக வியாபாரச்சந்தையில் 24 கரட் தங்கஆபரணங்கள் அதிக இருப்பினும் கரட் 24 ற்கும் ரூபா 24,000/-
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் 1960 துகளின் ஆரம்ப கால கட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்ட நீர்வை பொன்னையன் யாழ்ப்பாணம், நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்கத்தா பல்கலைக்கழகத்தில் கற்று கலைப் பட்டதாரி ஆனவர்.**

**இவரது சிறுகதைகள் ஈழத்தின் பிரபல சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் மட்டுமல்லாது தமிழ் நாட்டின் பல சஞ்சிகைகளிலும் வெளியாகி உள்ளன.**

**மேடும் பள்ளமும் (1961) உதயம் (1970) பாதை (1997) வேட்கை (2000) ஆகியவை இவரது சிறுகதைத் தொகுதிகள் ஆகும். வேறிரு ஈழத்து எழுத்தாளர்களது சிறுகதைகளையும் உள்ளடக்கிய மூவர் சிறுகதைகள்(1971), சிறுகதைத் தொகுதி மற்றும் உலகத்து நாட்டார் கதைகள், முற்போக்கு இலக்கிய முன்னோடிகள், நாம் ஏன் எழுதுகின்றோம் என்ற தலைப்புக்களிலான இவரது நூல்களும் வெளியாகி உள்ளன.**

**தென்னிந்திய சஞ்சிகை 'தாமரை'யில் 1961 ஆம் ஆண்டில் வெளியான இவரது 'சோறு' சிறுகதை இவ்வாரம் பிரசுரமாகிறது.**

**முத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 117**




# சோறு

வானம் நிர்வாணமாக இருந்தது. வானத்தின் மத்தியில் நின்ற காலைச் சூரியன் தனது தீ நாக்குகளால் உலகத்தில் உள்ள சடப்பொருள்கள் எல்லாவற்றையும் எரித்துத் தகித்துக் கொண்டிருந்தான்.

வானம் பார்த்த பூமி; தனது மலட்டுத் தனத்தை எண்ணிப் பெருமூச்சு விடும் பெண்ணைப் போல விம்மிக் கக்கிய செம்புழுதி, காற்றுடன் கலந்து புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. பரந்தவெளி அன்பேயில்லாத நெஞ்சிலுள்ள வரட்சித் தனத்தைப் போல ஈரப்பசுமை அற்ற நிலம் வெடித்துப் பிளந்து போயிருந்தது.

பாழ் வெளியின் ஒரு எல்லைப் புறத்தில் பனங்காடு, பனங்காட்டைத் தாண்டிச் சென்றால் கம்பன் புலம். கம்பன் புலத்தை உங்களுக்குத் தெரியுமா?

கம்பன் புலம் பெயரளவில் செழிப்பான ஊராகத் தோன்றலாம், உண்மை அதுவல்ல. கள்ளிகளும் மூளிப்பற்றைகளும், கல்லும், முற்களும் நிறைந்த பனங்காடுதான் கம்பன்புலம். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆமையோடு கவிழ்த்த மாதிரிச் சிறுசிறு ஓட்டுக் குடிசைகள்.

ஒரு வேப்பமரம்; கம்பன்புலத்து நெஞ்சிலே ஓங்கி வளர்ந்து நின்று கொண்டிருக்கின்றது. அதன் இலைகள் கருகிச் சுருண்டு கிடக்கின்றன.

வேம்பமரத்தின் கீழ் ஐந்தாறு இந் நாட்டு 'மன்னர்கள்' பிறந்த மேனியுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

நாலுதடிகளை நட்டு, அதன் மேல் இரண்டு காவோலைகளைப் போட்டு மூடப்பட்டிக்கின்றன. அது தான் அவர்களுடைய கோவில்.

இரண்டொருவர் பழைய தகரங்களைத் தங்கள் கழுத்துகளில் கட்டி மேளம் அடித்துக் கொண்டிருக்கின்றார்கள். தகரம் அகப்படாத சிலர் தங்கள் தொடைகளை மேளமாகப் பாவிக்கின்றார்கள். வாழை மட்டைகளை வாயில் வைத்து நாதஸ்வரம் வாசித்துக் கொண்டிருக் கின்றார்கள்.

பூசாரிக்குத் தெய்வம் வந்துவிட்டது!

துள்ளித் துள்ளி சன்னதம் ஆடிக் கொண்டு நிற்கின்றான் பூசாரி. அவனுடைய கையிலே ஒரு வாழைமட்டை; அவனுடைய கத்தி!

கழுத்தில் கயிற்றால் கட்டி இழுத்து வரப்படுகின்றான் ஒருவன். தவழ்ந்து கொண்டு வரும் அவன் தான் ஆட்டுக் கடா. பூசாரி, ஓங்கிக் கத்தியால் வெட்டுகின்றான்!

என்ன பக்தி!

கம்பன் புலத்தில் அண்ணமார் வேள்வி நடந்து ஒரு சில நாள்கள் தான்.

அன்று பெரியவர்கள் வேள்வி; இன்று சிறியவர்கள் வேள்வி!

"டேய் ..... ஓடியாருங்கோடா! ஓடியாருங்கோடா!" சத்தம் வரும் திக்கைத் திரும்பிப் பார்க்கின்றனர் எல்லோரும்.

"சோறு கொடுக்கப் போறாங்க ஓடியாருங்கோடா". அவர்களுடைய கண்களிலே ஒளி வீசத் தொடங் கியது. துள்ளிக் குதிக்கின் றார்கள். கூக்குரலிடுகின்றார்கள் . ஒரே ஆனந்தம். அமர்க்களம்!

கட்டையனுக்குப் பெரும் ஆனந்தம். அது சிறிது நேரம் தான்! அவனுடைய அடிவயிறு வலிக்கின்றது. கைகால்கள் நடுங்குகின்றன, தலை சுற்றுகின்றது.

ஏன்?

ஏனா? அவனுக்குப் பசி!

வெறுங்குடல் வலி எடுத்தது. முதல் நாள் மாலை குடித்த கூழ் தான்! அசுரப் பசி கட்டையனுடைய குடலைக் குடைந்து கொண்டிருக்கின்றது. கட்டையனுடைய இடுப்பில் ஒரு பிண்டம்; உயிருள்ள பிண்டம்; அவனுடைய தம்பி முத்தன்! ஒரு கையில் பிய்ந்து போன பழைய ஓலைப்பெட்டி.

கட்டையனை நீங்கள் அனேகமாகப் பார்த்திருப்பீர்கள். உங்கள் ஞாபகத்தில் இருக்கின்றதோ என்னவோ எனக்குத் தெரியாது. அப்படியிருக்க அவன் என்ன 'குளுக்கோஸ்' குழந்தையாகப் பிறந்தவனா என்ன?

பெயர் கட்டையன் என்றாலும் அவன் நெட்டையன். அவனுடைய பெற்றோர் கள் பெயரைப் பொருத்தமாக வைக்க மறந்துவிட்டார்கள் போலும்!

நீண்டு சூம்பின கால்கள், சுரக்காய் போன்ற முட்டி வயிறு, ஒடுங்கி, மிதந்த கோரை நெஞ்சு, முள்முருக்கம் பூக்காடு போன்ற, பரட்டைச் செம்பட்டைத் தலைமயிர், பிறந்த மேனியை மறைக்க, அரையில் ஒரு அழுக்குப்பிடித்த கச்சை. அவன் உயிருடன் உலாவுகின்றான் என்பதை எடுத்துக் காட்டுவது, அவனுடைய ஒளி வீசும் பெரிய கண்கள் தான்!

கட்டையனுடைய வயிற்றில் தீராப் பசி! எந்த நேரமும் அவன் வாய் சப்புக் கொட்டிக் கொண்டே இருக்கும். கட்டையனுக்கு எட்டு வயதிருக்கும். அவனுடைய இடுப்பில் எந்த நேரம் பார்த்தாலும் அந்த உயிர்ப்பிண்டம்- அவனுடைய இரண்டு வயதுத் தம்பி முத்தன் இருந்து கொண்டே இருப்பான். முத்தன் தோற்றத்தில் அண்ணனை வென்றவன். வால்பேத்தை உடல்; எந்த நேரமும் பனம்பழம் தின்ற மாட்டினுடைய மூஞ்சியைப் போல அழுக்குப் படிந்திருக்கும், முத்தனுடைய முகத்தில். 'சுருண்டு சிக்குப்பிடித்த பரட்டை மயிர், அவனுடைய மூக்குத் துவாரங்களில் இருந்து கள்ளுவடிவது போல எந்த நேரமும் சளி வடிந்து கொண்டே இருக்கும். அதனால் மூக்குக்கும் உதட்டுக்கும் உள்ள இடைவெளி வெளிறிவிட்டது. எப்போ பார்த்தாலும் முத்தனுடைய சுட்டுவிரல் அவனுடைய வாய்க்குள் தான் இருக்கும். கடைவாய் வழியே வாய் நீர் வழிந்து கொண்டே இருக்கும்.

கட்டையனுடைய கூக்குரலைக் கேட்ட மற்றவர்கள் எல்லோரும் தங்கள் விளையாட்டை விட்டுவிட்டு தங்கள் தங்கள் குடிசைகளை நோக்கி ஓடுகின்றார்கள்.

அவர்கள் ஒவ்வொருவருடைய கைகளிலும் ஓலைப்பெட்டிகள் இருக்கின்றன. 'மன்னர்' பட்டாளம் காந்தி நகரை நோக்கிப் படை எடுக்கின்றது.

காந்தி நகர் நீர்வேலிக் கிராமத்தில் தென்மேற்கு எல்லைக் கோட்டில் கம்பீரமாக நிமிர்ந்து நின்று கொண்டிருக்கின்றது. அந்த நகர்தான் நீர்வேலிக்குப் பெருமையை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அங்கு தான் நீர்வேலியின் பெரிய பரம்பரையினர் வாழ்கின்றார்கள்.

கம்பன்புலம் 'மன்னர்' படை காந்தி நகர் அருணாசலத்தின் வீட்டை நோக்கிப் பறந்து கொண்டிருக்கின்றது.

அருணாசலத்தின் வீட்டில் பெரிய கொண்டாட்டம், விருந்து!

திவசம்! அதற்கென, விருந்து!

ஏழு எட்டுப் புரோகிதர்கள், அரிசிப் பொட்டலங் களுடன் வெளியேறிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

# துரியோதனனிடம் விரவியிருந்த உலகு வியக்கும் நற்பண்பு

**இலக்கியக் காட்சி 8**

அரசர்கள் சூதாடுவது அன்றைய பொழுது போக்கு. உயிர் நண்பர்களாகிய கர்ணனும் துரியோதனனும் நேரம் கிடைக்கும் போது சூதாடிப் பொழுது போக்கு வதுண்டு. ஒரு நாள் கர்ணன் பொழுது போக்குவதற் தற்காகச் சூதாடத் துரியோதனனிடம் சென்றான். அப்போது துரியோதனன் மாளிகையில் இல்லை. துரியோதனனின் மனைவி மட்டுமே இருந்தாள்.

பிறர் மனைவியரைச் சகோதரிகளாகவே மதிக்கும் கர்ணன் "தங்கையே! துரியோதனன் வரும்வரை நீ என்னுடன் சூதாடு.துரியோதனன் வந்ததும் அவனுடன் சூதாடிப் பொழுதைக் கழிக்கின்றேன்." என்றான்.

கர்ணனின் கொடைச் சிறப்பையும் பிறர் மனைவியரைச் சகோதரியராக நினைக்கும் பண்பையும் தெரிந்திருந்த துரியோதனனின் மனைவி சூதாட உடன்பட்டாள்.

ஆரம்பத்தில் துரியோதனனின் மனைவி சூதாட்டத்தில் வென்று கொண்டிருந்தாள். இது துரியோதனனின் மனைவியை சூதாட்டத்தில் வென்றுவிட வேண்டும் என்ற ஆர்வத்தைக் கர்ணனுக்கு உண்டாக்கியது. கர்ணன் மிகுந்த திறமையுடன் விளையாடி வெல்லத் தொடங்கினான். வெற்றியால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் கர்ணன் குழந்தை உள்ளம் கொண்டவனாகித் தன்னை மறந்து சூதாட்டத்தில் முழுக்கவனத்தையும் செலுத்தினான்.

அப்போது துரியோதனன் மாளிகை வாசலில் வரும் காட்சி துரியோதனனின் மனைவிக்குத் தெரிந்தது. கணவனை உபசரிக்கச் சூதாட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்தாள்.

சூதாட்டத்தில் வெற்றியீட்டிக் கொண்டிருந்த கர்ணனுக்குத் தான் சூதாட்டத்தில் வெற்றியீட்டிக் கொண்டிருக்கும் வேளை சூதாட்டத்தை நிறுத்தித் திடீரெனத் துரியோதனனின் மனைவி எழுந்தது சினமூட்டியது. சூதாட்டத்தில் தன்னை மறந்து ஈடுபட்டுக் கொண்டிருந்த கர்ணன் " நான் வெல்லும் போது சூதாட்டத்தைக் குழப்பாதே!" என்று கூறி அவளது புடைவை முன்தானையைப் பிடித்தான். அவளது மேகலை அறுந்து முத்துக்கள் சிதறின.

அந்நேரம் துரியோதனன் மாளிகையின் உள்ளே வந்து கொண்டிருந்தான். மனத்தில் எவ்வித சலனமுமின்றி "இந்த முத்துக்களை எடுக்கவோ, கோக்கவோ என்றான்.

கொடிய பாத்திரமாகவே காணப்படும் துரியோதனன் "எடுக்கவோ? கோக்கவோ?" என்று கேட்ட நேரத்தில் குணம் என்னும் குன்றை எட்டித் தொட்டு விட்டான்.

தன் மனைவியையும் தன் நண்பனையும் சந்தேகப்படாத துரியோதனனின் இந்த உயர்ந்த குணத்தைக் கர்ணனே கூறுகின்றான்.

கிருஷ்ணபிரான் மூலம் குந்திதேவிக்கு ஒரு உண்மை தெரிய வருகிறது. கர்ணன் குந்திதேவியின் மூத்த புதல்வன் என்பதே அந்த உண்மை.

இதனை அறிந்த குந்திதேவி கர்ணனிடம் செல்கிறாள். தான் கர்ணனின் தாய் என்பதை நிரூபிக்கிறாள். தன் தாயைக் கண்ட கர்ணன் பெருமகிழ்ச்சியடைகின்றான்.

கர்ணனின் மகிழ்ச்சியை அறிந்த குந்திதேவி தன்னுடன் வந்துவிடும்படி கேட்கிறாள். நீஅரசனாக இருக்க உன் தம்பியர் ஐவரும் உனக்கு ஏவல் செய்வர் என்கிறாள்.

கர்ணன் அதற்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு கூறுகிறான்.

"மடந்தை பொன் திருமேகலை மணி உகவே
மாசறத் திகழும் ஏகாந்த
இடந்தனில் புரிந்தேநான் அயர்ந்திருப்ப
எடுக்கவோ? கோக்கவோ? என்றான்
திடம் படுத்திடுவேல் இரச ராசனுக்குச்
செருமுனைச் சென்று செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்கினிப் புகழும்
கருமமும் தருமமும்"

வில்லிபுத்தூரரின் கவிச்சிறப்பை இந்தப் பாட்டில் வரும் "மாசறத்திகழும் ஏகாந்தஇடம்" என்ற தொடரில் அறியலாம்.

கர்ணனும் துரியோதனனின் மனைவியும் இருந்த இடம் தனிமையான இடம். அங்குயாரும் இல்லை. ஆனால் அது மாசறத் திகழும் இடம்.

பிறன் மனைவியைத் தங்கையாக நினைப்பவனின் மனம் மசறத் திகழும் இடம். கணவனின் நண்பனைத் தமையனாக நினைக்கும் பெண்ணின் மனமும் மாசறத் திகழும் இடம்.

இந்த மாசற்ற உள்ளங்களை கண்டு சந்தேகப்படாத துரியோதனின் மனமும் மாசற்ற இடமே!

தீமைகளின் புகலிடமாக விளங்கியவன் துரியோதனன். அந்தத் துரியோதனனிடம் சாதாரண மனிதர் சிலரிடம் காண முடியாத- தன் மனைவியையும் நண்பனையும் சந்தேகப்படாத தெய்வத்தனம் இருந்திருக்கின்றதே! இது வியப்புக்குரிய ஒன்றல்லவா?



புலவர். ம. பார்வதிநாதசிவம்.

# என்கடன் பணி செய்து கிடப்பதே

தன்னுயிர் பெற்றெழும் மேசைகள்
முனகும் காற்றாடியின் கீழே
இரும்பு நெஞ்சங்களாக இறாக்கைகள்
நலிந்த உள்ளங்களோடு பணி செய்வோர்
இயல்பினை உணர்த்தும் மின்குமிழ்கள்
இருக்கைகளின் இறுக்கத்தில் எப்போதும்
எட்டு மணி நேர அவஸ்தை
தம் இருப்பினை உணர்த்தும் கோவைகள்
ஒவ்வொன்றாய் சரிதம் சொல்லும்
கோரிக்கைகளாய், வேண்டுதலாய்
விடய ஏடுகள் புரளும்
கோவைகளின் உயிர் மூச்சில்
உழன்று சோம்பிய முகங்கள்
சேவை ஏற்றமும், விலக்கமும்
கை வழிக் கடிதமாய் உயிர்ப்புறும்
வேதன ஏற்றமும் சீரமைப்பும்
விதிகளுக்கமைவாய் மாறும்
குறிப்புக்கள் வழியே கோவைகள் மீளும்
தினமொன்று அதற்காய் தேயும்
தேய்ந்த இருக்கைகள்
இன்னொருவருக்காய்ச் சேவை செய்ய
இனியும் காத்திருக்கும்.

அரியாலையூர் வே.ஐ.வரதராஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அப்பா ஓநாய்க்கு கோபம் கொப்பளித்தது. அப்படி உரிமையேதும் அவருக்கு கிடையாது. வனவழமைச் சட்டத்தின் படி போதுமான முன்னறிவித்தல் இல்லாமால், அவர் தனது வாழ் விடத்தை மாற்ற உரிமை கிடையாது. 10 மைல் தூரத்திற்குள் எல்லா விலங்குகளையும் அவர் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்.

அம்மா ஓநாய் பேசலானார். அவனை நொண்டி என்று சும்மா அழைக்கவில்லை அவன் அம்மா. "அவன் பிறந்திருந்த பொழுதிலிருந்தே ஒரு கால் அவனுக்கு நொண்டி. அதனால் தான் கால்நடைகளை மட்டும் அவன் அடித்துத் தின்கிறான். ஆற்றுப் பகுதியில் வசிக்கும் சனங்கள் அவனை வெறுக்கிறார்கள். அதனால் இந்தப் பகுதிக்கு மெல்ல நழுவியிருக்கிறான்" என்று தனது எரிச்சலைக் கொட்டினார் அம்மா ஓநாய்.

"கிராமத்துச் சனங்கள் அவனைத் தேடி அழிப்பார்கள். புல்வெளிகளில் நெருப்பு மூட்டப்பட்டதும் நாங்கள் குட்டிகளோடு ஓட்டம் பிடித்து விட வேண்டும்." என்று அவர் மேலும் சொன்னார்.

"இதையெல்லாம் ஷேர்கானிடம் கூறட்டுமா?" என்று கேட்டான் தபாகக்குய் (நரி)

" வெளிக்கிடுடா" கத்தினார் அப்பா ஓநாய்.

" உன் எஜமானோடுசேர்ந்து கொண்டு வேட்டையாடு. எங்களுக்கு நீ செய்துள்ள உதவிகள் போதும். " என்று அவர் கத்தினார்.

"நான் போகிறேன்." அமைதியாகக் கூறினான் தபாகக்குய். "கீழ்ப் பகுதிக் காட்டில் ஷேர்கான் உலாவுவது உங்களுக்குத் தெரியுமா? அவருடைய சத்தம் கேட்கவில்லையா? நான் இதை சொல்லாமலே இருந்திருக்கலாம்."

அப்பா ஓநாய் கவனமாகக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டார். கீழே உள்ள சமவெளிக்கப்பால் அந்த ஆற்றங்கரைப் பக்கமாக புலி ஒன்று உறுமுவது கேட்டது.



எதையோ பிடிக்க முயன்று தோல்வியுற்றதனால்தான் புலியார் இப்படி உறுமியிருக்க வேண்டும். தான் தோல்வியுற்றதை அந்தக்காடு முழுவதும் உள்ளவர்கள் அறிந்து கொண்டால் அவருக்கென்ன? அதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்படுவதில்லை.

"படு முட்டாள்" அப்பா ஓநாய் கூறினார். "இரவு நேரம் ஆரம்பிக்கும் போது இப்படி சத்தம் ஏற்படுத்துவார்களா? அவன் இருக்கும் பகுதியில் உள்ள மாடுகளைப் போல் எங்கள் காட்டில் உள்ள மான்களும் இருக்கும் என்று நினைத்துக் கொண்டானா? "என்று கூறிக் கொண்டார்.

அம்மா ஓநாய் கூறினார், "சத்தம் போடாதீர்கள், அவன் மாடுகளையோ, மான்களையோ வேட்டையாடவில்லை, இன்று மனித வேட்டையில் இறங்கியிருக்கிறான்" என்று. (வளரும்)



## என் அம்மா அப்பா

இறைவன் எனக்குத் தந்த
அன்பான அம்மா அப்பா
ஆசையோடு என்னை வாரி
அணைக்கும் அம்மா அப்பா.

சின்னச் சின்னக் கதைகள்
அழகாய் சொல்லுவார் அம்மா
சின்னச் சின்னக் குறும்பு செய்தால்
அன்பாய் கண்டிப்பார் அப்பா

ஆசையோடு உணவுகள்
அழகாய் ஊட்டுவார் அம்மா
ஆசையோடு கேட்பவை
வாங்கித் தருவார் அப்பா.

**அ.ஆனந்ஜெறோஷன்,**
தரம் -2,
யா/எழுவைதீவுமுருகவேள் வித்தியாலயம்.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -33

01. 2009 ஆம் ஆண்டுக்கான யு.எஸ். ஓப்பன் டென்னிஸ் போட்டியில் கிண்ணம் வென்ற வீரர் யார்?
02. பொய்ப்பித்தல் கோட்பாட்டை முன் வைத்த மெய்யியலாளரின் பெயர் என்ன?
03. 'ஒதெல்லோ' என்ற நாடகத்தை எழுதியவர் யார்?
04. நியூஸிலாந்து கிரிக்கெட் அணியில் விளையாடும் இரட்டையர்களின் பெயர்கள் யாவை?
05. 'ஓநாய்ச் சிறுவன்' தொடரில் வரும் புலியின் பெயர் என்ன?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 03.10.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -31 சரியான விடைகள்

01) பான் கீ மூன்.
02) பஸில் ராஜபக்ஷ.
03) திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
04) ஏ-9 வீதி.
05) றுத்யாட் கிப்லிங்

### பரிசுபெறுவோர்

01. கு.திலக்ஷி, தரம் - 7D, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
02. ஜெ.ஜெயவர்மன், தரம் -9A, யா/மகாஜனக் கல்லூரி.
03. ம.மதுசன், தரம் - 7A, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
04. செ.சசித்தா, தரம் - 9B, யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
05. த.தயூரன், தரம் - 6G, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
06. சி.தனுசிகா, யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்.




# கல்வியும் விளையாட்டும்

மனிதனை வானவெளிக்கு அனுப்பி மண்டலங்களை அளந்துவரும் நூற்றாண்டில் கல்வி கரை காணாத வகையில் உச்ச எல்லையைத் தொட்டு நிற்கின்றது. உயிர்களை உயரவைக்கும் உடற்பயிற்சி உலகின் உன்னத நிலையைப் பெற்றுவிட்டது. மாணவ சமுதாயத்தின் இரு விழிகளாக இவை இரண்டும் விளங்குகின்றன.

"கற்றது கைம் மண்ணளவு
கல்லாதது உலகளவு"



என்ற ஔவையாரின் வாக்குக்கேற்ப கல்வியின் அளவு விரிந்தும் பரந்துமாகும். கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பை அளிப்பது கல்வி. மனிதனை வாழவைப்பதற்கும் வளம் பெற்று வாழ்வதற்கும் உதவி புரியும் ஊன்றுகோலும் இதுவே. இன்றைய சமுதாயத்தில் பணம் பத்தும் செய்தாலும் கூட கல்வி கற்றவர்களே கண்ணுடையவர்களாக கருதப்படுகின்றனர்.

கல்வியை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று ஏட்டுக் கல்வி; மற்றையது தொழிற்கல்வி. பாடசாலை சென்று படிப்பவரின் அறிவுரையைக் கேட்டு நூல்கள் வாசித்து அறிவை வளர்ப்பது ஏட்டுக் கல்வி எனப்படும். உழைக்கும் கரங்களின் உதவியினால் ஒரு தொழிலைக் கற்பது தொழிற்கல்வி ஆகும்.

இந்த இரு கல்வி முறைகளும் மனித வாழ்விற்கு இன்றியமையாதனவாகும். உலக அறிவைப் பெறுவதற்கும் உண்மைகளை தெரிய வைப்பதற்கும் புதியவற்றைக் கண்டு பிடிப்பதற்கும் உதவி புரிகின்றன. தொழில்கல்வி இன்று எம் நாட்டுக்கு அவசியமாகி விட்டது. கைத்தொழில்கள் இன்று எம் நாட்டுக்கு அவசியமாகிவிட்டன. கைத்தொழில்கள் உயர்வுபெற தொழிற்சாலைகள் தோன்ற தொழிற்கல்வி துணையாக நிற்கின்றது.

உள வளர்ச்சிக்கு கல்வி உயிராக இருப்பது போல உடல் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது உடற்பயிற்சி. மனித தேகம் வலுவடையவும், விருப்பப்படி அதனைப் பயன்படுத்தவும் கூடியதாக நமது உடலை நமக்களிப்பது விளையாட்டாகும். விளையாட்டில் விருப்பம் ஏற்பட ஆண்டு தோறும் போட்டிகள் நடத்தி பரிசில்களும் வழங்கப்படுகின்றன. உடற்பயிற்சிகளின் உயர்வை உணர்ந்த அரசாங்கமும் விளையாட்டை ஒரு பாடமாக பாடவிதானத்தில் உள்ளடக்கியமை இதன் எழுச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

இப்பயிற்சிகள் ஒரு மனிதனின் பிற்கால வாழ்விற்குப் பெரிதும் பயன்படுகின்றன. விளையாட்டில் அனுபவம் பெற்றவர்களுக்கு வேலை பெறச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. உடற்பயிற்சியின் உயர்வு கருதி அரச பணிக்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது விளையாட்டு, கல்வி தகைமைச் சான்றிதழ்கள் இதன் பயனை எளிதில் விளங்க வைக்கின்றன.

எனவே கல்வியும் விளையாட்டும் மனிதனுக்கு மாண்பை அளிக்க கூடியன. கல்வி அறியாமையைப் போக்கும் . விளையாட்டு வேதனையைப் போக்கும். இவ்விரு துறைகளிலும் மாணவசமுதாயம் அதிக கவனம் செலுத்தி வருமாயின் நலம்பெறும் காலத்தை நாம் விரைவில் காணலாம்.

**யோ. டன்ஸரன்,** தரம்-9, யா/ சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை



## ஏழு வெற்றிப் படிகள்

01. கோபத்திலும் பொறுமை வேண்டும்.
02. செல்வத்திலும் எழ்மை வேண்டும்.
03. ஏழ்மையிலும் நேர்மை வேண்டும்.
04. தோல்வியிலும் விடாமுயற்சி வேண்டும்.
05. சரித்திரத்திலும் பரிகாரம் வேண்டும்.
06. இளமையிலும் அடக்கம் வேண்டும்.
07 பதவியிலும் பணிவு வேண்டும்.

*சி. அகல்யா, தரம் -8*
யா/ இந்து மகளிர் கல்லூரி.

## தாய்



ஒரு துளி உயிர் அணுவை
உடலாக்கினாள் அவள்
உயிரைத் திரித்து
அவள் இரத்தத்தை
பாலாய் ஊட்டி
உலகம் புகழும் உயர்
திணை ஆக்கினாள்
தியாகத்தில் அவள்
எவரெஸ்டையும் தாண்டிய
போது தான் புரிந்தது
இவள் மனித குலமல்ல
என்பது.

*சு. தூரங்கா, தரம்-9*
யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்



(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-........................................
தரம் :-........................................
பாடசாலை :-........................................
........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

........................ திகதி
........................................ வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவர் தூரிகை



உ.ஜதுசா, தரம் -9, கிளி.வேரவில் இ.ம.வித்தி. (நலன்புரி முகாம் ஒன்றிலிருந்து)



இ.சஜீகரன், தரம் - 7A, யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.



ம.கீதானந், தரம் - 6A, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



ஐ.சுபாசினி, தரம் -5A, யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.




செ.துஷியந்தன், தரம் -6B, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானொரு நுளம்பு என்பதால் என்னை அழிக்கவா பார்க்கிறீர்கள்?

வணக்கம் நீதிபதி அவர்களே!

என்னை ஏன் தண்டிக்கிறீர்கள்? நானும் இந்தச் சூழலுக்கு உரிய அங்கி தானே! இந்தச் சூழலில் வாழ எனக்கும் உரிமை இருக்கின்றது. இது ஒவ்வொருக்கும் உரிய உறுப்புரிமை, நான் மனிதர்கள் எவருடனும் போட்டிக்கு வரவில்லையே. எங்கள் பக்கத்தில் என் உறவுகளுடன் வாழத் தயவு



செய்து வழிவிடுங்களேன்.

மனிதர்களே!

அளவில் சிறியவனாகியதால் உங்கள் இரு கரங்கொண்டு எங்களை நசுக்கப் பார்க்கிறீர்கள். எங்களது வாழ்க்கையும் மிகமிகக் குறுகியதாகும். நீரிலும் நிலத்திலும் வாழும் அவல நிலை எமக்கு. அதிலும் உணவு தான் எமக்குப் பெரிய பிரச்சினை. உங்களை விட்டால் எமக்கு உண்ண உணவு தருபவர்கள் யார்? உங்களது சேமிப்பிலிருந்து ஒரு துளி இரத்தத்தைத் தானே உணவாகக் கேட்கிறோம். அதுவும் உங்கள் உறவுகளுக்கு நீங்கள் தானமாகக் கொடுக்க விரும்பாததிலிருந்து உரிமையுடன் ஒரு துளியை அலைந்து திரிந்து அடிபட்டு எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் எடுத்துக் கொள்கிறோம். இப்போதெல்லாம் உங்கள் உடலிலிருந்து பெறும் இரத்த உணவு சுவையாகவே இல்லை. அதன் நிறமும் சிவப்பாகவும் இல்லை.

கண்ட கண்ட மருந்துகளைக் கணக்கு வழக்கின்றி எதற்காக உண்ணுகிறீர்கள்? நீங்கள் உண்ணும் மருந்துகளெல்லாம் உங்கள் இரத்தத்தில் செறிவடைந்து நாங்கள் மெல்லக் குத்தும் போது எங்களுள்ளும் வந்து விடுகின்றன. இதனால் எங்களில் பலருக்கு இருந்த நீரிழிவு, காசம், இதய அடைப்பு எனப் பல நோய்கள் முற்றிலுமாகவே மாறிவிட்டன. இதனால் எங்கள் சந்ததி உயிர்ப்புப் பெற்று விட்டது. எங்களுக்காக எங்கள் சந்ததி தப்பிப் பிழைக்க நீங்கள் செய்யும் உதவியை என்றுமே மறக்கமாட்டோம். இன்னும் புதிது புதிதாகக் கண்டு பிடியுங்கள். நாங்கள் உங்கள் மூலமாகவே அவற்றைப் பெற்றுக் கொள்கிறோம். அந்தளவில் உங்களுக்கு நன்றி கூறித்தான் ஆகவேண்டும்.

**இரத்ததானம் செய்யவும் தயார்**

பலவகைகளில் இரத்தம் தேவையென அறிவித்தும் பலன் இல்லையென்றால் எங்களுக்குசொல்லியனுப்

## விலங்கிலிருந்து மனிதனுக்கு.... சேதங்களும், தொற்று நோய்களும் 8

புங்கள். விருப்பமின்றி எடுத்ததென்றாலும் அதிலிருந்து நோயளர்களின் உயிர் காக்க நாம் அனைவரும் ஒற்றுமையாக இரத்தம் தருவோம். அளவைப் பார்க்காதீர். சிறுதுளி பெருவெள்ளம் என நீங்கள்தானே கூறுகிறீர்கள்.

**தெரிந்து இதைச் செய்யவில்லை**

செய் நன்றி மறப்பதற்கு நாங்கள் ஒன்றும்மனிதரல்லவே! மிருகக் கூட்டத்தினுள் சிறைவைக்கப்பட்ட சிறிய பூச்சிகள். இறைவனின் கடுஞ்சினத்திற்கு ஆளானது போல எங்கள் ஒரு சோடி இறகுகளும் ஒடிக்கப்பட்டு விட்டனவே. மீதி ஒரு சோடி இறகுகளுடன் பறந்து திரிந்து அனைத்து வேலைகளையுஞ் செய்ய வேண்டியிருக்கின்றது. எங்களுக்குள்ளே போட்டி இருப்பினும் உங்களைப் போல போர் செய்யவில்லை. அந்தளவில் எமக்கிடையே ஒற்றுமையுண்டு. நோயைக் காவுகிறோம் என்றும் அது பெரிய குற்றமென்றும் எங்களைத் தண்டிக்கிறீர்கள். இதை நாங்கள் தெரிந்து செய்யவில்லை. எங்களுக்குத் தேவையான உணவை உங்களைக் குத்தி உறுஞ்சும் போது அதுவாக உங்களுடலில் பரவிவிடுகின்றது. இதற்கு நாம் முழுக்க முழுக்க எவ்வாறு காரணமாக முடியும்? எங்களின் மீது ஏன் இவ்வளவு பொறாமை? கடுஞ்சினம்?

**நீங்கள் அழித்ததை விடவா நாம் அழிவு செய்கிறோம்?**

விதி எங்களுடனும் விளையாடுகின்றது பார்த்தீர்களா?

## உங்களுடன் மோத நான் தயார்,... பார்ப்போமா?

எங்களது அறியாமையை மலேரியா, டெங்கு போன்ற நோய்களை உருவாக்கும் நுண்ணுயிர்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. அவ்வளவு தான். ஆறறிவு படைத்த உங்கள் உறவுகளுக்குள்ளேயே அறியாமை இன்னும் இருக்கும் போது ஐந்தறிவு ஜீவன்களாகிய எங்களிடம் அது இருப்பது தவறில்லையே. எங்களைப் பார்த்தா அழிவு செய்கிறீர்கள் எனச் சுட்டுகின்றீர்கள்? ஒரு கணம் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் உங்களுக்குள் ஏற்படுத்திய அழிவை விடவா நாம் அதிகம் செய்துவிட்டோம். நீங்கள் தெரிந்து செய்த அழிவை நாங்கள் எம்மை அறியாமல் செய்து விடுகின்றோம். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. நீங்கள் தரும் ஒரு துளி இரத்தம் எங்கள் ஒவ்வொருவரினதும் பசியைப் போக்கப் போதுமானது.

இரந்து கேட்டால் மனமிரங்காத உங்களிடம் உரிமையுடன் ஒரு குத்துக் குத்திப் பெற்றுக் கொள்கின்றோம். ஒரு துளி இரத்தத்தைச் சேமிக்கவே எமதுடலில் வசதியுண்டு. ஒரு வேளை குத்தும் போது வலிக்கிறதா? நாமும் பயிற்சி பெற்று அந்த வெள்ளையுடுப்புத் தாதிபோல நோகாமல் இனிக் குத்துகின்றோம். நாடிபார்த்துக் குத்தாததால் அப்படியொரு வலி இருக்குமாம். நாடி தேடி பல இடங்களில் அவர் பெரியஊசியால் குத்துவதை விட நாங்கள் எம்முடனிருக்கும் மிகவும் சிறிய ஊசியினால் உங்களை அறியாமல் குத்துகின்றோம். இதை உணர்ந்தாவது இனியொருமுறை குத்தும் போது ஆடாமல் அசையாமல் இருக்கப் பாருங்கள்.

குத்தும்போது அங்கும் இங்கும் ஆடினால் எங்களது ஊசியும் முறிந்து விடும் அல்லவா! ஊசியும் முறியாமல் குத்துவதும் தெரியாமல் உணவு உண்ண வேண்டிய அவலநிலை எங்களுக்கு. உண்ணும் போது உயிரையும் உங்கள் தாக்குதலால் இழக்க வேண்டிய பரிதாபம் பாரீர்!

**எங்களுக்கும் மருந்து தரலாமே**

எங்களின் மேல் எவ்வளவோ ஆராய்ச்சிகள் செய்கிறீர்கள். அதற்கு உயரிய விருதுகளும் பெறுகிறீர்கள்! மலேரியா, டெங்கு போன்ற நோய்களை நாங்கள் காவுவதாகக் குறைகூறுகிறீர்கள். பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்ல், குரங்குக் காய்ச்சல், எலிக்காய்ச்சல் என அனைத்தையும் பரப்புவதற்குக் காவியாக உங்கள் உறவுகளே இருக்கிறார்கள். மனித அழிவைத் தரும் இக் கொடிய நோய்களைக் காவும் உங்கள் உறவுகளை அழிப்பீர்களா? எம்மை மட்டும் எதற்காக அழிக்க நினைக்கிறீர்கள். எங்கள் குறை களை நிவர்த்தி செய்யாதவரை அடுத்தமுறை தேர்தலில் போட்டியிட எம்மவரையும் களமிறக்க வேண்டி வரும்.தங்களது வாக்குரிமையைச் சரியாக பயன்படுத்தத் தெரியாத மனிதர்களுக்கு நாங்களனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களித்து அதன் வலிமையை, செல்வாக்கை மனிதருக்குக் காட்டவேண்டும். எங்கள் இனத்தை அழிக்க நினைக்காதீர்கள். ஒன்றுக்குப் பத்தாகப் படையெடுத்து வருவோம். எங்களினம் பெருகுவது என்றும் கடினமான காரியமல்லவே. இந்தக் கிருமிகள் எங்களுடலில் பரவாதிருக்க எங்களுக்கும் மருந்து தரலாமே. மாறாக எம்மையே அழிக்கலாமோ?

ஆக்கத்திற்குத் துணைபோக வேண்டிய நீங்கள் அழிவு செய்யக் கங்கணம் கட்டி நிற்பது ஏன்? எப்படி எங்கிருந்து இவ்வளவு வீராப்பு எங்களுக்குவந்தது? இதுவொன்றும் அதிசயமான விடயம் அல்ல.

உண்ண உணவு தருகிறீர்கள். உறங்



கவும் இனம் பெருக்கவும் உறையுளும் தருகிறீர்கள். அத்துடன் குப்பை கூழங்களையும் அப்படியே விட்டு வைத்திருக்கிறீர்கள். சிரட்டைகள், கோம்பைகள், ரயர்கள், ரின்கள் எனப் பலவகையானவற்றைப் பயன்படுத்திய பின் வெற்றுக் காணிகளில் எறிந்து விடுகின்றீர்கள். அதில் தங்கியிருக்கும் நீரினை நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். நாம் வாழும் இடம் கூட எமக்குச் சொந்தமில்லையா?

**அபாயச் சங்கொலியால் அதிர்ந்து போனோம்.**

டெங்கு நோய் தீவிரமாகப் பரவ ஆரம்பித்திருப்பதால் எல்லோரினதும் கவனம் எம்மை நோக்கித் திரும்புவதை எம்மால் அறிய முடிகின்றது. எமது வாழிடங்களை அழித்தொழிப்பதற்கான ஆரம்பக் கட்ட வேலைகளும் துரிதமாக நடக்கின்றன. மனிதருக்குள்ளே ஒற்றுமை வரும் வரை எமக்கு எதுவித பயமும் இல்லை.

எப்படிக் கத்தி அறை கூவினாலும், தண்டித்தாலும் கூட மனிதர்களில் பாரிய மாற்றம் எதுவுமே ஏற்பட்டுவிடாது. தண்டம் ஒரு இலட்சம் என அறிவித்தும் பாதீனியம் அழிந்தா போய்விட்டது. யாழ் நகரின் பல பொதுஇடங்களில் அது சுதந்திரமாகப் பல்கிப் பெருகிவிட்டது. எமக்கெதிராகத் தற்போது எழுப்பப்பட்டுள்ள அபாயச் சங்கொலியால் முதலில் அதிர்ந்து போனாலும் அதை நடைமுறைப்படுத்த மனித மனங்களில் ஒற்றுமை இல்லாத வரை நாங்கள், நுளம்புகள் கொடுத்து வைத்தவர்களே. இது வரைக்கும் எமக்குள்ளே ஏதோவொரு ஆறுதல்.

**நுண்ணுயிர் பூச்சி கொல்லிகள்**


மருந்து அடித்து களைத்து எம்மையும் மயங்கி அவரும் மயங்கியது போக இப்போது பி.ரி.ஐ (Bti) எனும் நுண்ணுயிர் பூச்சி கொல்லியைப் பயன்படுத்தி எம்மையழிக்கத் திட்டமொன்று தீட்டப்படுகின்றது.

பசிலசு துரொன்சியென்சிசு (Bacillus thuringiensis) இன பக்ரிறீயாவின் ஒரு வகையான இஸ்ரேலியென்சிசு வைப் பயன்படுத்த முனைகிறார்கள். இதனைச் சுருக்கி Bti என அழைக்கிறார்கள். உங்களுக்குள் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுண்ணங்கியைக் கட்டுப்படுத்த காவிகளாகத் தொழிற்படும் எமக்கு நோயை ஏற்படுத்த பிறிதொரு நுண்ணங்கியைப் பயன்படுத்த முயற்சிக்கிறீர்கள். இது முள்ளை முள்ளால் எடுக்கும் கதை போன்றதா?

முயற்சித்துப் பாருங்கள். எந்த ரூபத்தில் நீங்கள் எம்மையழிக்க முற்பட்டாலும் அதற்கும் தப்பிப் பிழைத்து, எதிர்ப்பு சக்தியை உருவாக்கி உயிர்ப்புப் பெற்று வருவோம். நீங்கள் அனைவரும் ஒற்றுமைப்படும் வரை எமக்கு இது சாத்தியமே!

பி.ரி.ஐ பக்றீறியாவை உலங்கு வானூர்தி மூலம் தெளிக்க முனைகிறார்களாம். ஆனால் இப் பக்ரிறீயாவினால் நான் அறிந்தளவுக்கு மனிதர்களுக்கும் பாதிப்புக் குறைவு. இருப்பினும் பின்விளைவுகள் இடத்துக்கிடம் வேறு படக்கூடும். அதற்கு நாங்கள் வாழும் சூழலும் ஒரு காரணம். இம் முறையாவது எங்களை அழிக்கும் உங் களது முயற்சி வெற்றிபெறுகின்றதா எனப் பார்ப்போம். எம்மை அழிப்பதாக நினைத்து உங்களை அழித் துக் கொள்ளாதீர் கள். உங்களுக்கும் எமக்குமிடையிலேயுள்ள நீண்ட காலத்து இரத்த உறவு இது. எமக்கு என்றும் நீங்கள் வேண்டும். உண்டி கொடுப்போரை நாம் என்றென்றும் மறந்து விட மாட்டோம்.✱

(வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஒழுங்கான நடைமுறை நம் உடல் நலத்துக்கான மருந்து

நாள்தோறும் பல விதமான வேலைகளில் நாம் ஈடுபடுகிறோம். இதற்கான சக்தியை நாம் எங்கிருந்து பெறுகிறோம் என்று எப்போதாவது நாம் எண்ணிப் பார்த்தது உண்டா?

உணவு சாப்பிட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு பசி எடுக்கிறது. அந்தப் பசியைப் போக்க மீண்டும் உணவைச் சாப்பிடா விட்டால் களைப்பு ஏற்படுகிறது. கை, கால்கள் சோர்ந்து போகின்றன. மறுபடியும் வேலை செய்ய முடிவதில்லை இதற்கு என்ன காரணம்?

சாப்பிட உணவு நாம் வேலை செய்வதற்கான சக்தியாக மாறி பயன்பட்டுவிட்டது. மீண்டும் சக்தியை பெற உணவு தேவைப்படுகிறது. இந்தத் தேவையை அறிவிக்கும் உணர்ச்சி தான் பசி. நாம் சாப்பிட்ட உணவு இரைப்பையிலும் சிறுகுடலிலும் ஜீரணிக்கப்படுகிறது. ஜீரணித்து அதில் உள்ள சக்தியை கிரகித்து அதை இரத்தத்துக்கு அனுப்பி வைக்கிறது. கழிவுப் பொருள்களை பெருங்குடலுக்கு அனுப்பி வெளியேற்றச் செய்கிறது.

கிரகிக்கப்பட்ட சத்துப்பொருள் இரத்தத்தில் கலந்து உடலுக்கு பலத்தை கொடுத்து உடல் வேலை செய்வதற்கான சக்தியும் அளிக்கிறது. இந்த வேலைகளை எல்லாம் நாம் உணருவதில்லை. இந்த மாற்றங்கள் நமது உடலுக்குள்ளேயே நிகழ்ந்தாலும் அது பற்றிய பிரக்ஞை நமக்கு இருப்பதில்லை. இதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் மட்டுமேதான் அதை நம்மால் உணர முடிகிறது.

உணவுத் தேவை என்கின்றபோது பசி உணர்ச்சி அதை நமக்கு உணர்த்துகிறது: கழிவுப் பொருள்கள் சேர்ந்துவிட்ட பிறகு அதை வெளியேற்ற வேண்டும் என்கிற உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. இந்த இரண்டு அடிப்படைத் தேவைகளைத் தான் நாம் உணருகின்றோமே தவிர இந்த இரண்டுக்கும் இடையில் நடைபெறுகின்ற அடிப்படையான மாற்றங்களை நாம் உணருவதற்கு வாய்ப்பே இல்லை.

ஆகவேதான் உடலுக்குத் தேவையான சத்துள்ள பொருள்களை கொடுப்பது நமது கடமையாகிறது. சுவையான பொருள்களை சாப்பிடுவது தவறில்லை. அது சத்துள்ளதாக இருப்பதும் அவசியம். எக்காரணத்தைக் கொண்டும் உடலுக்கு தீமை செய்யும் பொருள்களை அருந்தக்கூடாது.

உடலுக்குத் தீமை செய்யும் பொருள்கள் எவை என்று எவ்வாறு அறிந்து கொள்வது? அதை உங்களுடைய உடலே உங்களுக்குத் தெரிவிக்கும். ஒரு பொருள் உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லையானால் சில உபாதைகளின் மூலம் உங்களது உடல் அதை உங்களுக்குத் தெரியப்படுத்தும். அதிலிருந்து எச்சரிக்கை பெற்று அம்மாதிரியான உணவு வகைகளை தவிர்ப்பது உங்களுடைய கடமை.

அதைப் போலவே உடலில் கழிவுப் பொருள்கள் சேர்ந்து விட்டதுடன் அவற்றை வெளியேற்ற வேண்டும் என்கிற உணர்ச்சி ஏற்படுகிறது. அந்தக் கழிவுப் பொருள் மேலும் உடலுக்குள் இருப்பது நல்லதல்ல என்கிற அறிவிப்பு அது. ஆகவே அவ்வாறு உணர்ச்சி ஏற்பட்டவுடன் காலதாமதமின்றி அந்தக் கழிவுப் பொருள்களை வெளியேற்றும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவற்றை அனுசரித்து நடக்க நாம் பழகிக் கொண்டால் என்றும் சுகதேகிகளாக புத்துணர்ச்சியுடன் வாழ இயலும். ★




## அழைப்புக்கள்!....

உன்
செல் நம்பரை சேமிப்பாக்கி
உன் மொழியை - என்
செவிகளுக்கு அடைக்கலமாக்கினேன்

சொல்ல
முடியாத என்
காதலை சொல்லி முத்தங்களை
அன்பளிப்பாக்கினேன் - என்
கையடக்கத் தொலைபேசிக்கு

இரவுகளில்
என் கனவுக்கு ஓய்வுகொடுத்து
உன் அருகில் இருந்து
விடியும்வரை கதைப்பேன்

உன்
வருகையை வெளியிடங்களில்
காணாத போதும் - உன்
வார்த்தைகளை - எப்பொழுதும்
அறிந்திருக்கிறேன்

நீ
போடும் 'மிஸ் கோலே' - எனக்கு
ஓராயிரம் மலர்களை தூவிவிடும்
என் மனத்துக்கும் சேர்த்து

ஆனாலும்
வறுமையாகிப்போனது - என்
வாழ்வு காதலுடன் இணைந்து...

ஜே.எஸ். ராஜ்.
யாழ். பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பல தசாப்தங்களாக உங்கள் நம்பிக்கையை பேணி வரும் மெலிபன் குடும்பத்தார் ஆகிய நாம், உங்களுடனான எம் உறவு வலுப்படுத்தப்பட நிச்சயித்துக் கொள்வதில் பெருமை கொள்கிறோம். உங்கள் தலைமுறைகள் உண்டு சுவைத்த எம் படைப்புகளை தொடரும் தலைமுறைகளும் நற்பண்புகளுடன் சுவைக்க திடசங்கட்பம் பூணுகிறோம்.

மெலிபன்
நற்பண்புகளுடன் நாளையை நோக்கி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களில் பங்குபற்றுதல் உங்கள் எதிர்காலத்தை அழிவடையச் செய்யும்

கீழே தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்பானது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவின்படி தடைசெய்யப்பட்ட திட்டங்களை பொதுமக்களும், சட்ட அமுலாக்கல் முகவர்களும் அடையாளங்கண்டு கொள்வதற்கான ஓர் தெளிவான விளக்கத்தை வழங்கும் முகமாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டதாகும்.

1. "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப்படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
   - (I) திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
   - (ii) பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.

இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

2. தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:
   - (I) திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
   - (ii) வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை – சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
   - (iii) உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
   - (iv) இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
   - (v) நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
   - (vi) மீண்டும் வாங்கும் கொள்கை – வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
   - (vii) பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
   - (viii) திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
   - (ix) நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
   - (x) இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்.'. சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
   - (xi) பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய.'. அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
   - (xii) திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பறறு பவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
   - (xiii) செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன் இல்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட் திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83ஊ பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம்.

**இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பவையும் சட்ட விரோத செயல்களாகும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.**

குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்படால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை
  அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம்
  அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடுழியச் சிறைத் தண்டனை, மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம

**உங்களின் பாதுகாப்பிற்காக, இலங்கையில் சட்ட விரோதமானதும் ஏமாற்றுத் தன்மை மற்றும் மோசடித் தன்மை என்பவற்றைக் கொண்டதுமான தடை செய்யப்பட்ட திட்டங்களில் இருந்து விலகி இருங்கள்.**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. தொலைபேசி: 0112477100 ; தொலைநகல்: 0112477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk



# பஞ்சாமிர்தம்



## கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?



ஓர் இளம் துறவி காட்டிற்குச் சென்று அங்கு தியானம், வழிபாடு, யோகப்பயிற்சி முதலியவற்றில் நெடுங்காலம் ஈடுபட்டிருந்தார். பல ஆண்டுகளின் கடினமான தவம் மற்றும் பயிற்சிகளுக்குப் பிறகு, ஒருநாள் அவர் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

அப்போது அவரது தலைமீது சில சருகுகள் வீழ்ந்தன . அவர் நிமிர்ந்து பார்த்தார். அங்கே உயர்ந்த மரக்கிளை ஒன்றில் ஒரு காகமும் கொக்கும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவருக்கு வந்ததே கோபம். உடனே ஆத்திரத்துடன், 'என்ன! எவ்வளவு துணிவிருந்தால் என் தலைமீது சருகுகளை உதிர்ப்பீர்கள்' என்று கூறியபடியே அந்தப்பறவைகளைக் கோபத்துடன் பார்த்தார்.

யோகி அல்லவா! அவரது தலையிலிருந்து ஒரு நெருப்பு மின்னல் போல் மேலெழுந்து சென்று, அந்தப்பறவைகளைச் சாம்பராக்கிவிட்டது.

அவருக்கு மகிழ்ச்சி தாளவில்லை . பார்வையாலேயே பறவைகளை எரிக்கும் தமது ஆற்றலைக் கண்டு தலைகால் புரியாத மகிழ்சி கொண்டார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அந்தத் துறவி வழக்கம் போல், உணவிற்காக அருகிலுள்ள ஊருக்குச் சென்றார். அங்கு ஒரு வீட்டின் முன் நின்று 'அம்மா' பிச்சை இடுங்கள் என்று கேட்டார்.

'மகனே கொஞ்சம் இரு' என்று வீட்டிற்குள்ளிருந்து ஒரு குரல் வந்தது.

இதைக் கேட்ட அந்தத்துறவி தனக்குள் 'பேதைப் பெண்ணே , என்னைக் காக்க வைப்பதற்கு உனக்கு என்ன தைரியம்! என் சக்தியை நீ அறியவில்லை' என்று நினைத்தார்.

இப்படி அவர் நினைத்ததுமே உள்ளிருந்து, 'மகனே, உன் னைப்பற்றி அவ்வளவு பெரிதாக நினைத்துக் கொள்ளாதே.இங்கே இருப்பது காக்கையும் அல்ல, கொக்கும் அல்ல' என்று குரல் வந்தது.

துறவி திகைத்து விட்டார் .எப்படியானாலும் அவர் காத்திருக்கத் தான் வேண்டியிருந்தது.

கடைசியாக அந்தப் பெண் வெளியில் வந்தாள். துறவி அவளது கால்களில் வீழ்ந்து,'தாயே! நான் மனதுக்குள் நினைத்ததை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு அவள், 'மகனே, எனக்கு உன்னைப் போல் யோகமோ தவமோ எதுவும் தெரியாது. அன்றாடம் என் கடமைகளைச் செய்து கொண்டி ருக்கின்ற ஒரு சாதாரணப் பெண் நான் . என் கணவர் நோயுற்றிருக்கிறார். நான் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன் . அதனால் தான் உன்னை க் காக்க வைக்க வேண்டியதாயிற்று. கடமைகளை வாழ் நாள் முழுவதும் மனப்பூர்வமாகச் செய்து வருகிறேன். திருமணத்திற்கு முன் பெற்றோருக்கு என் கடமையைச் செய்தேன். இப்போது திருமணம் முடிந்து விட்டது. எனவே கணவருக்கு என் கடமை களைச் செய்து வருகிறேன்.நான் செய்யும் யோகம் எல்லாம் இது தான். என் கடமைகளைச் செய்து வந்ததால் என் ஞானக் கண் திறந்து விட்டது . அதன் மூலம் தான் என்னால் உன் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முடிந்தது காட்டில் நடந்ததையும் தெரிந்து கொண்டேன்' என்றாள். நாம் உயர்வதற்குரிய ஒரே வழி நம் முன் இருக்கும் கடமைகளைச் செய்வதாகும் . அப்படிச் செய்வதன் மூலம் வலிமையைப் பெருக்கிக் கொண்டே சென்று, இறுதியில் உயர் நிலையை அடைந்து விடலாம்.

கண்ணன்.
உரும்பிராய்.

## பாட்டுப் பிறந்த கதையிது!



பாட்டு எவ்வாறு முதன்முதலில் தோன்றியது? காட்டுமிராண்டியொருவன் காட்டில் தனது பறையை அடித்து மகிழ்ந்த நிலையிலேயே முதன்முதலில் பாட்டுத் தோன்றியதாக டி.எஸ்.எலியட் என்ற ஆங்கிலக் கவிஞர் விளக்கியுள்ளார். அன்று அவனுடைய பறையின் ஒலியில் விளங்கிய ஒலிநயம், இன்று எழுதப்படும் பாட்டிலும் விளங்குதலைத் தமது இக் கருத்துக்கு ஆதாரமாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தையின் அசைவிலும் அழுகையிலும் ஆடலிலும் ஒரு வகை ஒழுங்கு இருப்பதைப் போலவே, பழங்காலக் காட்டுமிராண்டியின் நடையிலும் செயலிலும் பேச்சிலும் விளையாட்டிலும் ஒரு ஒழுங்கு காணப்பட்டது. அத்தகைய ஒழுங்கை வேறு எதனிடமாவது கண்ட போதும் கேட்ட போதும் அவன் மகிழ்ந்தான். தானே ஒரு நாள் அந்த ஒழுங்கு விளங்குமாறு பறையில் ஒலி எழுப்பிய போது அவன் பெரிதும் மகிழ்ச்சியுற்றான். தன் கையால் பறையைத் தட்டிஒழுங்குற எழுப்பிய ஒலியில் கேட்ட நயம் (Rhythm) அவனுடைய மனதில் ஆழமாகப் பதிந்தது. மீண்டும் மீண்டும் அந்த ஒலியை எழுப்பி அதன் நயத்தில் திளைத்தான் பின்னர் பறையொலியோடு சில சொற்களையும் ஒலிகளையும் சேர்ந்து ஒலித்து மகிழ்ந்தான். அவ்விதம் பிறந்தது தான் பாட்டு.

பின்னர் அந்தப்பாட்டை நினைவில் நிறுத்திப்பாடி, கையில் பறை இல்லாத வேளையிலும் கையால் தாளம் கொட்டி ஒலித்து மகிழந்தான். தனக்கு உள்ளக் கிளர்ச்சி ஏற்பட்ட வேளைகளில் அந்தப் பாட்டை ஒலி நயத்தோடு பாடி மகிழ்ந்தான். நாளடைவில் உள்ளக்கிளர்ச்சி ஏற்படுத்துவதற்காகவே அப்பாட்டைப் பயன்படுத்தத் தொடங்கினான். அதாவது கடின வேலை செய்யும் போதும், ஓடியாடும் போதும் களைப்பைப் போக்கி உள்ளக்கிளர்ச்சி ஏற்பட அப்பாட்டைப் பாடிப் பயன்படுத்திக் கொண்டான்.

எதிர்பாராது விளைந்த இதனை எதிர்பார்த்து ஒரு பயன் கருதிக் கருவியாகக் கையாண்டது அடுத்த நிலையாகியது. பின்னர் கூட்டமாகச் சிலர் கூடி உணர்ச்சி வசப்பட்டுப் பாடி மகிழும் நிலை உருவாயிற்று. அது வரையிலும் பாட்டுத் தனக்கென ஒரு வடிவம் பெற்றதில்லை.பின்னர் ஓய்வான வேளையில் தனியே இருந்து அப்பாடலைப்பாடி மகிழும் நிலை ஏற்பட்டது. அதன் போதே பாட்டு தனிக்கலையாக வளர்ச்சி பெற்றது. காலப்போக்கில் நாகரிகம் வளர வளர, சொற்கள் பெருகி மொழி பண்பட்ட பின்னர், உணர்ச்சியிலும் கற்பனையிலும் சிறந்த ஒரு சிலர் ஒலி நயமும் பொருளும் அமைய பாட்டுப் பாடி கேட்பவர்களை மகிழ்விக்கும் நிலை வந்தது.

பின்னர் பாடி மகிழ்விக்கும் நிலை குறைந்து எழுதி மகிழ்விக்கும் நிலை ஏற்பட்டது. ஒருவர் பாட்டை எழுதியுதவ, அதைக் கற்றவர் படித்தும் பாடியும் மகிழும் நிலை வரை உயர்வு கண்டது.இதுவே இன்றுள்ள பாட்டின் நிலையாகும்.

## நாய்களுக்கு நிற வேறுபாடு தெரியுமா?



நீங்கள் நாயொன்றை வளர்ப்பீர்களானால் உங்கள் நடவடிக்கைகளில் சிலவற்றை அதனுடன் செல்லப்பிராணி என்ற முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். அது உங்கள் வீட்டில் வாழும், உங்கள் தனிமையை போக்கியுதவும். நீங்கள் விரும்பினால் உங்களுடன் உலவுவதற்கு வரும். ஆனால் நீங்கள் பார்க்கும் உலகத்திற்கும் உங்கள் நாய் பார்க்கும் உலகத்திற்கும் வேறுபாடுண்டு என்பதை நம்புவது கடினம் தான். ஏனென்றால் நாய்களுக்கு நிறங்கள் தெரிவதில்லை.

நாய்கள் நிறங்களின் வித்தியாசத்தைப் புரிந்து கொள்கின்றனவா என்பதைக் கண்டறிய சோதனைக்கு மேல் சோதனை நடத்தப்பட்ட போதிலும் அது நிரூபிக்கப்படவில்லை.

நாய் தனது மோப்பத்தின் மூலமே தனக்குரிய உணவைக் கண்டு பிடிக்கின்றது. மணத்தைக்கொண்டே பொருள்களின் வேறுபாட்டை உணர்ந்து கொள்கின்றது.

பூனைகள் மத்தியிலும் இதே போல்தான் பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. நிறங்களை வைத்து அதனால் தன் உணவைக் கண்டு பிடிக்க முடியவில்லை. எல்லா நிறங்களுமே பூனைக்கு சாம்பல் வர்ணமாகவே தெரிவதாகக் கருதப்படுகின்றது.

வேறு எந்த மிருகமாவது தனது உணவை, நிறத்தைக் கொண்டு கண்டு பிடிக்கின்றதா என்று பார்த்தால் மனிதனுக்கு அடுத்தபடியாக குரங்குகளும் வாலில்லாக் குரங்குகளும் மட்டுமே நிறங்களின் வித்தியாசத்தைக் கண்டு பிடிப்பதாகத் தெரிகின்றது.

இதற்குக் காரணம் பெரும்பாலான மிருகங்கள் இரவிலேயே வேட்டையாடுகின்றன. அல்லது மாலை நேரங்களில் மேய்கின்றன. அவைக்கு உணவின் நிறம் பற்றிக் கவலை கிடையாது. உயிர் வாழ்வதற்கு நிறங்களை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்ற அவசியம் அவைகளுக்கு இல்லை.

என்றாலும் பெரும்பாலான மிருகங்கள் தமக்குள்ள ஏனைய உணர்வுகளை வளர்த்துக் கொண்டுள்ளன. அது அவைகளுக்கே உரிய உலகத்தில் திருப்தியாக வாழ்வதற்குப் போதுமானவையாய் உள்ளன.

## கண்ணே! என் கண்ணின் மணியே!



என்ன சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம், அதிலும் நமக்குப் பார்வையைத் தரும் கண்ணே முதன்மை பெறுகின்றது. கடவுளை நயப்பதாயினும் காதலனை நயப்பதாயினும் குழந்தையை நயப்பதாயினும் கண்ணே! மணியே! என்று தான் அழைக்கின்றோம். கடவுள் கண்ணை இமை காப்பது போல எம்மைக் காக்கின்றார். சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி நாச்சியாருக்கு அளித்த வாக்குறுதியை மீறியதால் அவர் கண்களின் பார்வையை இழந்தார். மீண்டும் கண்ணைப் பெறுவதற்காக அவர் அருளிய தோத்திரங்கள் அருமையானவை.

"நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம். நோய் செய்யார் நோயின்மை வேண்டுபவர்"

என்ற இத் திருக்குறள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு

இளைஞர்கள், முதியோரைக் கேலி செய்வார்கள். துன்புறுத்துவார்கள். அப்போது அந்த முதியோர் என்ன செய்வர்,– "நீ கண்கெட்டுப் போவாய்" என்று திட்டுவர். அல்லது மனம் நோவர். வாலிபர்களிற் பலர் இளம் வயதிலேயே கண்பார்வையிழந்து துன்பப்படுவதைக் காண்கின்றோம். ஒரு பெரியவர் மனம் நோக ஒருவன் நடந்தால் அது நிச்சயமாக அவனது கண் பார்வையைத் தாக்கும். இளம் வயதிலே கண் பார்வைக் குறைபாட்டால் பலர் "லென்ஸ்" மாற்றுச் சிகிச்சை செய்து கொள்கின்றனர். சில பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இக் கண்பார்வைக் குறைபாட்டால் மிக அதிக அளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

கண் பார்வைக் குறைபாடு ஒரு பரம்பரை வியாதி எனச் சிலர் நினைக்கலாம். ஆனால் அது பரம்பரை வியாதி அல்ல. ஆயினும் அது குறிப்பிட்ட ஒரு பரம்பரையினரை அதிகமாகப் பாதிக்கிறதே! அது ஏன்? குறிக்கப்பட்ட அப்பரம்பரையினரின் வழக்கமான நடத்தை, பழக்க வழக்கம், உணவுப் பழக்கம் என்பவை அனேகமாக மாற்றமடைவதில்லை.

நான் விரும்பியபடி தான் நான் நடப்பேன் அதைக் கேட்பதற்கு நீ யார்? என்று முகத்தில் அடித்தாற் போல் பேசும் வழக்கமே இன்றைய இளைய தலைமுறையினரின் போக்காக உள்ளது. இவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தும் இப்படியே பிறர் மனம் நோக நடக்கிறார்கள். கல்வியறிவில் குறைந்தவர்கள் மட்டுமன்றி, நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் பலர் கூடப் பிறருக்கு மதிப்பளிக்காது அலட்சியப் படுத்தும் போக்கில் செயற்படுகின்றனர். அத்தகையோரில் பெரும்பாலானோர் இளம் வயதிலேயே பார்வைக் கோளாறால் சிரமப்பட்டு அதற்கான சிகிச்சை பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

"அறிவினான் ஆகுவது உண்டோ
பிறிதின் நோய்- தம் நோய் போற் போற்றாக் கடை"

## ஆண்டவா! என் அறியாமை உனக்கு அர்ப்பணமடா?



ஆலயத்திற்கு வெறும் கையுடன் செல்லக்கூடாது என்பதற்கு ஆழ்ந்த தத்துவம் உள்ளது. கூப்பிய கரங்களுடன் செல்ல வேண்டும் என்பதையே இவ்விதம் சொல்லி வைத்தார்கள்.

கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டோ, கைகளை வீசிக் கொண்டோ, நிமிந்த நடையுடன் ஒரு பெரிய மனிதர் போன்று மற்றவர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டோ, ஆண்டவன் மீது லயிப்பின்றியோ செல்லக்கூடாது.

குவித்த கரங்களுடன், மனமுருகி, பக்தியுடன் இறைவன் நாமத்தைத் தியானித்துக் கொண்டே செல்ல வேண்டும். வெறும் கையுடன் செல்லக் கூடாது என்றால், நீங்கள் எதை எடுத்துக் கொண்டு போய் இறைவனுக்குக் கொடுப்பீர்கள்?இறைவனிடம் இல்லாதது எது? எல்லாம் உள்ளவனல்லவா இறைவன்!

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் வாழ்வில் ஒரு சம்பவம் நடந்ததாக் கூறுவார்கள். கையில் எதுவும் எடுத்துச் செல்லாமல் கோயிலுக்குச் சென்ற கம்பரிடம் இறைவனுக்கு அர்ப்பணிக்க எதுவும் கொண்டு வரவில்லையா என்று சிலர் கேட்டார்களாம்.

அதற்குக் கம்பர் "நம்மிடம் எது உள்ளதோ, இறைவனிடம் எது இல்லையோ அதையே நான் இறைவனுக்கு அர்ப்பணித்து ஆராதனை ஆக்குகின்றேன்" எனக் கூறினாராம்.

அதாவது "காராய மேனி கருணாகரனே, ஆராதனை உனக்கு என் அறியாமையே என்றாராம் கம்பர்.

தம் அஞ்ஞானத்தை அர்ப்பணித்து, இறைவனிடம் ஞானத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புவதாக அமைந்த பாடல் அது.

ரதி, சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோறு..

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டிருந்தார்கள். விருந்து தொடங்கி விட்டது! என்ன சாதாரண விருந்தா? பத்துப் பன்னிரெண்டு மூடை அரிசி வேகும் இடமல்லவா! ஏக தட புடல், பெரிய பெரிய மனிதர்கள் வந்திருக்கின்றனர். உணவு உண்ணத் தொடங்கி இரண்டு மணி நேரமாகிவிட்டது. பலவகைக் கறிகள், பலகாரங்கள், பழங்கள், பாயசம்..... இன்னும் எத்தனையோ வகையறாக்கள். முன்னொரு காலத்தில் ரோமாபுரியில் பெரிய பிரபுக்கள் வீட்டில் விருந்து நடக்கும் பொழுது அவர்களுடைய முற்றத்தில் ஒரு பெரிய பீப்பா வைக்கப்பட்டிருக்குமாம். விருந்துக்கு வந்தவர்கள் வயிறு நிறைய உண்ட பின் தங்கள் கைகளைத் தொண்டைக்குள் விட்டு தாங்கள் உண்ட உணவை வாயால் வாந்தி எடுத்துவிட்டு திரும்பவும் உண்ணுவார்களாம். அனேக முறை வாந்தி எடுத்து விட்டு திரும்பத் திரும்ப உண்ணுவார்களாம். அப்படிச் செய்தால் தான் விருந்து கொடுத்தவர் திருப்தியடைவார். அதேபோல அருணாலத் தினுடைய விருந்துக்கு வந்த பெரியவர்களும் பசியில்லாவிட்டாலும் 'வேண்டாம் வேண்டாம்' என்று கூறினாலும் 'சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள்' என்று வற்புறுத்தப்பட்டார்கள்.

கம்பன் புல மன்னர்கள்? அவர்கள் அருணாசலத்தின் வீட்டு முற்றத்தில் மாங்கன்றின் கீழ் இருக்கின்றார்கள். பசி அவர்களுடைய குடல்களை அரித்துக் கொண்டிருக்கின்றது.விருந்து உண்டு கொண்டிருக்கும் பெரிய மனிதர்களைப் பார்த்தபடியே தான் இருக்கின்றார்கள். அவர்களுடைய வாயில் சலம் ஊற்றெடுத்து ஓடுகிறது. கண்கள் விருந்தை உண்ணுகின்றன. விருந்து நடந்து கொண்டு தான் இருக்கின்[றது].

அவர்களும் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.

'சின்னான் ஏன் இன்னைக்கு இந்த விருந்து நடக்குது' கந்தன் கேட்டான்.

'அது .... இண்டைக்கு...... திவசம்.'

''என்னத்துக்கு?''

வேலன் கேட்டான். 'ஐய.... இவனுக்குத் தெரியல்லை! இது சின்ன ஐயா செத்ததுக்கு.'

''ஆர். மாணிக்கவாசக ஐயாவா?''

''ஆமாடா, ஆமா.''

''ஏன் செத்தார்?''

ஆவலுடன் கேட்டான் கட்டையன்.

''அது.... வந்து..... மருந்து குடிச்சுச் செத்தார்.''

''ஏன்?''

''கலியாணம் செய்ய விடலேன்னு''

மாணிக்கவாசகர் அருணாசலத்தின் ஒரே ஒரு பிள்ளை. படித்துப் பட்டம் பெற்று உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார்; கொழும்பில். வாலி பன், பிரமச்சாரி.

காதல் போட்டியில் தோல்வி யடைந்தார் மாணிக்கவாசகர். பொலி டோல்-புகையிலைக் கிருமிநாசினி அவருக்குத் தஞ்சம் கொடுத்தது. இந்த விவகாரம் கம்பன் புலத்தில் ஒரு சில சிறுவர்களுக்கு அரைகுறையாகத் தெரியத்தான் செய்தது.

கட்டையனுக்கு இது புரியாப் புதிர்!

''எங்களுடைய வீட்டிலும் இப்படித் திவசம் வந்தால்.... சோறு, பலகாரங்கள்,........ நான் வயிறு நிறையச் சோறு சாப்பிடலாம்..... கந்தன், சின்னான், வேலன், பெரியவர்கள் எல்லோரும் வந்து.....'' என்று எண்ணுகின்றான் கட்டையன்.

விருந்து நடந்துகொண்டே இருக்கின்றது.

கம்பன் புலத்தார் அதைப்பார்த்துக் கொண்டுதான் இருகின்றார்கள்.

''எங்க வீட்டிலை ஏன் திவசம் வரல்லை?'' கட்டையன் ஏக்கத்துடன் கேட்டான்.

உங்க வீட்டிலே ஒருத்தரும் சாக வில்லையே'' வளர்ந்த ஒருவன் கூறினான். எங்கடை வீட்டில் செத்தால் திவசம் வரும்....... சோறு தின்னலாம்..... எப்படிச் சாகிறது?...... மருந்துகுடிச்சு''.....

கட்டையனுடைய மூளை முருத்துக்களில் ஏதோ ஊர்ந்து செல்வது போல...... தலையைச் சொறிந்து கொண்டே அவன் எதையோ எண்ணுகின்றான்.

'ஒரு நீளமான புட்டி, சிவப்பு நிறப் படம்... ஒரு மண்டைஓடு, இரண்டு எலும்புத் துண்டுகள்'....... கட்டையன் மனக்கண்முன் தோன்றி மறைகின்றன.

கட்டையனுடைய கண்கள் பிரகாசிக்கின்றன. முகம் மலர்கிறது.

''டேய் வரிசையாய் இருங்கோ.'' அருணாசலம் அதட்டுகின்றார்.

''ஐயா, எனக்கு... எனக்கு''

''டேய் நான் தாண்டா முந்தி வந்தது.''

''இல்லையடா நான்''.

''சனியன், மூதேவி, தூ;''

சின்னான் வேலன் மீது துப்புகின்றான்.

வேலன் சின்னானுடைய தலைமயிரைப் பிடித்து இழுத்து......

''டே, டேய் சனியன்களே சத்தம் போடாம இருங்கோடா.'' தனது கையிலிருந்த கம்பைச் சுழற்றுகின்றார் அருணாசலம்.

''ஐயா, எனக்கு, நான் தான் முந்தி வந்தது.''

கட்டையன் அசைவற்று நிற்கின்றான். அவனுடைய கண்கள் சோற்றைப் பார்த்தபடியே இருக்கின்றன.

''டேய், சத்தம் போடாமல் இருங்கோடா'' என்று கூறிக் கொண்டே கையில்இருந்த கம்பால் இரண்டொருவரை அடிக்கின்றார் அருணாசலம்.

ஒவ்வொருவருடைய ஓலைப்பெட்டியிலும் கருக்கல் சோறும், பலாக்காய், வாழைக்காய்க் கறிகளும் விழுகின்றன.

கட்டையனுடைய கண்கள் சோற்றைப் பார்த்தபடியே இருக்கின்றன. அவன் உள்ளம் எதையோ தேடி எங்கோ சென்று கொண்டிருக்கின்றது.

அவர்கள் சோற்றை அள்ளி வாயில் போடுகின்றார்கள்.

எல்லோருடைய முகங்களும் மலர்ந்திருக்கின்றன. ஒரே ஆரவாரம்.

முத்தன் கட்டையனுடைய ஆசைத் தம்பி. என்ன கிடைத்தாலும் அவனுக்குக் கொடுக்காமல் சாப்பிடமாட்டான். முத்தனை அழவிடாமல் பார்த்துக்கொள்வது, நித்திரை செய்யப்பண்ணுவது, தான் செல்லும் இடமெல்லாம் முத்தனை இடுப்பில் கொண்டு செல்வது; முத்தனை அன்பாகக் கொஞ்சுவது, அவனுடன் விளையாடுவது;- முத்தனைப் பிரிந்து கட்டையன் ஒரு போதுமிருக்க மாட்டான்.

கம்பன் புல 'மன்னர்' களுடைய வயிறுகள் நிரவிக் கொண்டிருக்கின்றன.

பொழுது கருகிக் கொண்டிருந்தது.

* * *

புத்தாடை உடுத்துப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றாள் பொன்னி.

சின்னான், செல்லன், வேலன்,கந்தன் இன்னும் கட்டையனுடைய நண்பர்கள். சிறியவர்கள், பெரியவர்கள் எல்லோரும் கட்டையனுடைய வீட்டிற்கு வந்து விட்டார்கள்.

முத்தன் சிரித்தபடியே அங்குமிங்கும் ஓடி விளையாடுகின்றான்.

வீட்டு உயரத்தில் சோற்றுக் குவியல்கள், பலவகைக்கறிகள், பலகாரங்கள்.........

'கம கம' என்ற மணம் கட்டையனுடைய நாசித்துவாரங்களில் பாய்கின்றது.

அவனுடைய வாய் சப்புக் கொட்டுகின்றது.

புரோகிதர்களும் வந்து விட்டார்கள், போகின்றார்கள்.

விருந்து! ஒரே அமர்க்களம்! சோறு......! கட்டையனுடைய உதடுகளில் புன்னகை அரும்புகிறது.

எல்லாம் கனவு!

அவனுடைய முதுகிலே ஏதே கடித்தது. கட்டையன் முனகியபடியே முதுகைச் சொறிந்தான்.

''சோறு'' அவன் உணர்வின்றி அவனுடைய உதடுகள் அசைகின்றன.

எங்கேயோ கூலிப்பிழைப்புக்கு சென்ற பொன்னி வீட்டிற்கு வர இருட்டி விடுகின்றது. அவள் அவசர அவசரமாக தினைச்சாமைக் கஞ்சியை சமைத்துக்கொண்டிருக்கின்றாள்.

''குபுக் குபுக்'' என்று கஞ்சி கொதித்துக் கொண்டிருக்கின்றது. அதில் இருந்து எழுந்த வாசனை கட்டையனுடைய நாசித்துவாரங்களில் ஏறி.......

அவனுடைய வயிற்றிலே பசி;- அசுரப் பசி. நாவில் ஜலம் ஊறுகின்றது வாய் சப்புக் கொட்டுகின்றது.

முத்தனை இறுக அணைத்தபடியே சுருண்டு கிடக்கின்றான் கட்டையன். ''ராசா கட்டையா...... கட்டையா.......... என் ராசா ....... பொன்னி எழுப்புகின்றாள். கட்டை யன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக் கின்றான்.

''கட்டையா, எழும்பு இந்தக் கஞ்சியைக் குடி.''

அவன் அசையவில்லை,

அவனைத் தூக்கி நிறுத்தினாள்.

திரும்பவும் அவன் படுத்தான்.

''டே, சனியன், மூதேவி........ பகல்லே துள்ளி திரிஞ்சு போட்டு இப்ப.....''

''பளார்!''

கட்டையனுடைய முதுகிலேஒன்றுவிட்டாள். அவன் துடிதுடித்துக் கொண்டு எழுந்து திகைத்தபடியே நின்றான்.

அவள் அவனிடம் கஞ்சிக் கோப்பையைக் கொடுகின்றாள்.

முத்தன்?

அவன் தூங்கிக் கொண்டுதான் இருக்கின்றான்.

பொன்னியினுடைய தாய்மைக் கலசங்கள் கணத்து, வலித்து, சுரந்து, இள வேதனையைக் கொடுத்தன. அவளுடைய உடலிலே ஒரு வித உணர்ச்சி பாயத் தொடங்கியது. முத்தனைத் தூக்கி அணைத்தாள். தனது மார்பகச் சேலையை அவிழ்த்தாள். அது நனைந்திருந்தது. என் கண்ணே முத்து..... ராசா முத்து......''

முத்தன் கண்திறக்கவே இல்லை.

அவளுடைய ஸ்தனங்களில் இருந்து வெண்முத்துப் போன்ற பால் சுரந்து கசிந்தது.

பொன்னி தனது செல்வத்தைத் தூக்கி நிறுத்தினாள்.

முத்தன் வாடி, வதங்கிச் சோர்ந்து போன பயிற்றங்காய் போல துவண்டு குழைந்து, மடிந்தது........ ''முத்தா! என் ராசா முத்தா!........''

முத்தனுடைய வாயில் இருந்து குடலைப் பிடுங்கும் நெடில்! குப்பி விளக்கை எடுத்து முத்தனுடைய முகத்துக்கு எதிராகப் பிடித்தாள். முத்தனுடைய முகம் காய்ந்து நீலப் பசையேறி மரத்துப் போய்க் கிடந்தது!. கடைவாயில் இருந்து வெண்நுரை கக்கி கைகால்கள் விறைத்து, வாய் திறந்து கண்கள் பிதுங்கி........

முத்தனுடைய பிதுங்கிய கண்கள் அசையவே இல்லை!

''ஐயோ!....... என் ராசாவே.........!''

நிர்வாண வானம், பூமி, சடப் பொருட்கள் எல்லாவற்றையுமே இருள் விழுங்கிக் கொண்டிருந்தது. இரவில் அமைதியைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து சென்றது. பொன்னியின் சாக் குரல்!

கட்டையன்?

சோறு?

***

## சொற்சிலம்பம் - போட்டி இல: 80

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | | 6 |
| 7 | | | | | 8 | 9 | |
| | | | | 10 | | | |
| 11 | 12 | | 13 | | | | |
| 14 | | | 15 | | | 16 | |
| | | 17 | | | 18 | | |
| | 19 | | | | 20 | | 21 |
| 22 | | | | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1. ஆச்சரியம்தருவது;வழமைக்கு மாறானது.
2. வாதம் செய்பவன்.
3. குழப்பம், சண்டை, யுத்தம்.
4. மேல் நாட்டுக் குடிவகை.
5. துளை
6. தாமரை
9. தமது
10. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் நகரம்
12. நாவு உணரும் சுவை.
13. கூறல்
16. நீர் நிலை ஊடான நீண்ட பாலம்
17. பிழைத்துப் போனது.
18. இந்த யோகம் கிட்டினால் உயர்வும் தாழ்வும் மாறி மாறி வரும்.
19. ஒரு சிற்றுயிர்; வளைந்து நெளிந்து அசையும்
21. திக்கு.

### போட்டி விதிகள்

1. *வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
2. *ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
3. *உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
4. *போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
5. *வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
6. *பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 80**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 07.10.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

7. *சொற்சிலம்பம் போட்டி இல. 80 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 11.10.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### இடமிருந்து வலம்

1. திருமண பந்தம் நீக்கப்படுவதை இப்படி அழைப்பர்.
7. சேதமுற்று எஞ்சிக்கிடப்பது.
8. கை கால்களில் வரும் ஒருவித நோய். நோவும் கூட.
10. வயல் எல்லையில் அமைப்பர்.
11. மீண்டும்/ மீளவும்.
14. களிகொள்/ சுவை
15. பழம்
16. தாங்கள்.
17. முயற்சி
19. தானியங்கள் அளவிடும் ஓர் அலகு.
20. கண் தெரியாதவன்.
22. ஒரு பறவை. இதன் பார்வைக்குப் பெருமை உண்டு.
23. மேற்குத் திக்கு

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 78 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) ஆசாமி (4) தளபதி (7)தக்கவர் (9) ரதி(10) வகு (11)சிபார்சு(12)துயர்(13) ராசி (15)தவம்(16)குமரி (17)தகர் (18)சுவர் (19)பேரப்பிள்ளை (21)லாம்பு(22)வலி

**மேலிருந்து கீழ்**
(1)ஆதவன்(2)சாக்கு(3)மிக(4)தர்பார் (5)பரசுராமர் (6)திதி (8)வசியம் (12) துவர்ப்பு (14)சிரி (15) தகரம் (16)குவளை (17)தபேலா (18) சுள்ளி (20) எலி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 78இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **சி. கஜந்தினி**
ஆண்டு 11, யா/ இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** — **வே. குமாரசுவாமி,**
பரமானந்தர் வளவு, கரவெட்டி கிழக்கு கரவெட்டி.

**3 ஆம் பரிசு** — **சி. முத்துலிங்கநாதன்,**
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **இ. நிதீஸ்ராம்,**
தரம் 10ஏ,சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

(2) **வே. தபேந்திரன்,**
பிரதேசசெயலகம், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

(3) [illegible]
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.

(4) **செல்வம் அப்பாக்குட்டி,**
பன்னையம்பதி, பருத்தித்துறை.

(5) **ச. வசந்தராணி,**
நெடுங்காடு, காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்ச்சிமிக்க நிபுணத்துவம் யாழ்நகரில் காலடிபொதிக்கின்றது!

நாம் எமது தேர்ச்சிமிக்க சேவைகளை
உங்களது உலகின் பூரண புரிந்துணர்வின்
அடிப்படையில் வழங்குகின்றோம்.

## நீங்கள்.
## உங்கள் உலகம்.
## மேலும் பல.

www.asianalliance.lk

Asian Alliance Insurance
Rest Assured

Registration No. PQ31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் 60 வருட பூர்த்தி விழாவுக்கு அவர்களின் சம்பளத்திலேயே நிதி திரட்டுவதா?

## அரசு மீது ஜே.வி.பி. சீற்றம்

கொழும்பு, செப். 27

இராணுவத்தின் 60 வருடப் பூர்த்தியை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிகழ்ச் சிக்காக இராணுவத்தினர் ஒவ்வொருவரின் சம்பளத்தில் இருந்தும் தலா ஆயிரத்து 800 ரூபா அரசால் வெட்டி யெடுக்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி யின் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இலங்கை இராணுவம் உருவாக்கப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியாவதை யொட்டி நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராணுவத்தினரைக் கௌரவிக்கும் இந்நிகழ்ச்சிக்கு இராணுவத்தினரின் பணமே பயன்படுத்தப்படுகின்றது. அவர்களின் சம்பளத்தில் இருந்து ஆயிரத்து 800 ரூபா வெட்டியெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு உண்மையிலேயே அநீதியானது. இந்நிகழ்ச்சிக்கு அரசு பணம் செலவிடுவதே சரியானது. அதைவிட்டு விட்டு இராணுவத்தினரின் பணத்தைக் கொண்டே இராணுவத்தின் இந்த நிகழ்ச்சியை நடத்து வது நியாயமா? படையினரின் வாழ்க்கையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று அமைச்சர்கள் மேடைகளில் மாத்திரம் கூச்சல் போடுவதில் அர்த்தமில்லை. அதைச் சாத்தியப்படுத்தவேண்டும்'' என்றார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த் தன இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து இந்த விடயம், சம்பந்தப்பட்ட அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்று கூறினார். (சி)

# ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 . 12 . 1967



இறப்பு 08 . 10 . 2008

அமரர் **தியாகராஜா சுரேந்திரன்** (சுரேன்)

(ஆசிரியர், ஹைலண்ட்ஸ் கல்லூரி, ஹட்டன்)

திதி: நவமி (27.09.2009)

எமது அன்புச் செல்வமே சுரேன்!
நீர் எமை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று ஆனது ஐயா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாதையா உம் நினைவு!
உமது புன்முறுவல் பூத்த முகம், கனிவான பேச்சு என்றும் எம் நினைவில்!
சாந்தமே உருவான சற்குணனே!

உமது ஆத்மா இறைவன் திருவடியில் சாந்திபெற என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

இல.28, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**


Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

**WANTED HOUSE FOR RENT**

SDC – Swiss Agency for Development and Cooperation is a government organization of the Ministry of Foreign Affairs, Switzerland.

We are looking for a suitable house for rent around Jaffna Municipality area for our second office with the following terms and conditions:

The house should
- contain at least seven rooms, a kitchen, two or more toilets and with a spacious parking area to be able to park about seven vehicles.
- With proper water and electricity facilities
- With fans and availability of Air conditioners are preferred

House should be in good condition.

Rent is negotiable.

Interested parties may call us between 8 am to 5 pm from Monday to Friday on 021-222 3928 or 021 222 6280.

Head of Field Office
SDC Field Office, Jaffna
521/11, Point Pedro Road, Nallur, Jaffna

(89233)



# CITY LINK MOBILES



புதுக் கடைத் திறப்பு விழா

உங்களுக்காக யாழ் மண்ணில் கால் பதிக்கின்றோம்

சகல விதமான தொலைபேசிகளும் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் kit* Mobital* Slt Net* Slt Passport* அனைத்து வகையான காட் வகைகளையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்று RELOAD செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் 50/= பெறுமதியான RELOAD FREE

LANKA BELL Dialog TELIKOM Sri Lanka Telecom Mobitel SMART

370, POINT PEDRO ROAD ANAI PANTHY



## 2009/2010 பெரும்போக பயிர் செய்கைக்கான

# விதேசிய விதை உருளைக் கிழங்கு

அறியாத கிழங்கினங்களை நட்டு அல்லல் படுவதை விடுத்து விவசாய திணைக்களம் சிபார்சு செய்துள்ள யாழ் கமக்காரர் நன்கு அறிந்த **ஆனோவாவை** நட்டு நயம் பெறுங்கள்

**அதிகூடிய விளைச்சலுக்கு – நம்பிக்கையான**




எங்களின் சேவை
- வங்கி மூலம் விவசாய கடன் பெற உதவி செய்தல்
- நிறுவனத்தின் மூலம் விதை உருளைக் கிழங்கு பயிர்செய்கைக்கு விசேட குருணி உரம், விவசாய இரசாயன பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்
- 50 பெட்டிகளுக்கு மேலதிகமான கேள்விகள் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படும்
- மட்டுப்படுத்திய அளவில் ஆனோவா இறக்குமதி செய்யப்படுவதால் உங்கள் தேவைகளை முன் கூட்டியே ஒதுக்கீடு செய்து கொள்ளுங்கள்
- ஒக்ரோபர் 20 ஆம் திகதி அளவில் விதை உருளைக் கிழங்கினை பெற்றுக்கொள்ளலாம்
- எங்கள் தொழில் நுட்ப குழுவினர் 21-09-2009 திகதியிலிருந்து 30-09-2009 திகதி வரை யாழ் நகரில் தங்கியிருப்பர். இவர்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்
- தொலைபேசி இலக்கங்கள்

**சமின்த: 077 3082398, செல்வகுமார்: 077 3082399**
**ஆதில்: 071 4391537**

விதை கிழங்கு இறக்குமதியில் 38 வருட அனுபவமிக்க எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்


**வ/ப ரொபிக்கள் சீட் (தனி) நிறுவனம்**
127, ராமநாயக்க மாவத கொழும்பு 02
தொ.பே.: 011 4707500 பெக்ஸ்: 011 2303642



# HERO CYCLES

- உலகில் அதிகூடிய விற்பனையாகும் துவிச்சக்கரவண்டிகள்
- பல தசாப்தகாலம் யாழ் மக்களின் நம்பிக்கையை கொண்டது
- 8 வருட உத்தரவாதம்

யாழில் எமது முகவர்களிடம் துவிச்சக்கர வண்டிகள் உள்ளன



Dealers Available in Jaffna

**FAIZAL HARDWARE STORES**
No. 74, Dam Street, Colombo 12.
Tel: 011-2433727, 2325571 Fax: 011-2446088 E-mail: faisto@sltnet.lk


## பிரதேச செயலகம்- தென்மராட்சி

# கேள்வி அறிவித்தல்

1. சமூக சேவைகள் திணைக்களம்- வடமாகாணத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின் வரும் வேலைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

| வேலை விவரம் | மீளளிக்கத்தக்க கேள்விப் பணம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| மதில் அமைத்தல்- யாழ். விழிப்புலனற்றோர் சங்க தொழில் பயிற்சி நிலையம், கைதடி. | 7000.00 | 200.00 |

2. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.
   (I) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின் ICTAD M-07 தரத்தில் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
   (II) கேள்விப் படிவங்களைப் பெறும்போது புதுப்பிக்கப்பட்ட (2009) ICTAD M-07 புத்தகம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. கேள்விப் படிவங்களை 28.09.2009 இலிருந்து 02.10.2009 மு.ப.10 மணிவரை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விப் படிவங்களை மீளளிக்கக் கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணத்தைப் பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விப் படிவங்கள் 06.10.2009 நண்பகல் 12 வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 07.10.2009 பி.ப.2 மணிக்குத் திறக்கப்படும்.
6. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் கேள்விப் படிவங்கள் மூலப்பிரதி/ இணைப்பிரதி எனக் குறிப்பிட்டுப் பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி என்ற முகவரியிட்டு உரிய திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

(சி/561161)

செ.ஸ்ரீநிவாசன்,
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



## கன்னி
(நட்சத்திரங்கள் : உத்திரம் 2, 3, 4, அஸ்தம், சித்திரை 1,2)

கன்னி ராசி அன்பர்களின் குணமே தனிதான். பிறரின் மனம் அறிந்து செயற்படுவதும், பிறரின் மணம் புண்படாமல் ஆராய்ந்து செயற்படுவதும், அவருக்கு நிகர் அவரே. கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த முறை ஏனோ, கொஞ்சம் சறுக்கல்தான். இதுநாள் வரைக்கும் 12 இல் சஞ்சரித்த சனிபகவான் வரும் 10.09.2009 தொடக்கம் 15.11.2011 வரை ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். இது விரும்பத்தக்க சூழ்நிலை என்றாலும், சனியின் 3 ஆம் பார்வையில் ஒருசில நன்மைகளே பெற முடியும். 3,7 மற்றும் 10 ஆம் இடங்கள் சனியால் பார்க்கப்படுகிறது. அதாவது, 25.09.2009 முதல் 19.09.2010 வரை இந்த காலகட்டத்தில் சனி பகவான் இந்த நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறார். இதனால், உடல் ரீதியாக பாதிப்பு உண்டாகும். தொழில் செய்பவர்களுக்கு நெருக்கடி உண்டாகும். 19.12.2009 முதல் 5 ஆம் வீட்டிலும், 02.05.2010 முதல் 08.05.2011 முடிய 7 இல் இருப்பதால் சனியில் ஏற்படும் கெடுதிகளை குரு பகவான் அருளால் சமாளித்து வருவீர்கள். சிலருக்கு அசையா சொத்துகளால் வீண்வம்பு வரும். ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்கள் பலமுறை யோசித்து செயற்படவும். கலைஞர்களின் திறமை பளிச்சிட அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டிய வரும். சனியின் வக்ர கால மான ஜனவரி 10.01.2010 முதல் இடத்திற்கும், கேது 9 ஆம் இடத்திற்கும் மாறுகிறார்கள். 2011 மே மாதம் 9 ஆம் திகதி குரு அட்டமத்திற்கு வருகிறார். கணவன், மனைவிக்கும் சிறு சிறு ஊடல்கள் இருக்கும். கொடுக்கல் - வாங்கல் சரளமாக இருக்க வாய்ப்பில்லை. திருநள்ளாறு சென்று சனீஸ்வரனைத் தரிசித்து வருவது உத்தமம். எல்லாம் அவன் செயல் என்று - பாரத்தை இறக்கிவைத்துவிட்டு விடுங்கள்.

**குடும்பம் :** குடும்பத்தில் குதூகலம் குறையும். பல குழப்பமான சூழ்நிலை உருவாகும். உற்றார், உறவினர்கள் இடையே சலசலப்பு உண்டாகும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் தடைப்படும். கொடுக்கல் - வாங்கல் சரிவர இருக்காது. புதிய வீட்டிற்கு தற்சமயம் போக வேண்டாம். புதிய தொழில்களில் இறங்கவேண்டாம். கடன்கள் தொல்லை தந்தாலும், கையிருப்பால் சமாளிக்கப்படுவீர். குழந்தைகளின் தேக ஆரோக்கியத்தில் முழுக் கவனம் செலுத்துவது நலம். மருத்துவ செலவுகள் இழுபறியில் இருக்கும். ஒருசிலர் இருக்கும் வீட்டை விற்றுவிட்டு, வாடகைக்கு செல்வர். இவையெல்லாம் கொஞ்ச காலம்தான். பின் நல்லநிலை அடைவர். உடன் பிறந்தவர்களால் உதவிகரம் இயலாது. வயிறு சம்பந்தப்பட்ட அறுவைச் சிகிச்சை இருக்கும். புதிய கடன்கள் வாங்கவேண்டி இருக்கும். குல தெய்வ வழி பாட்டால் வர இருக்கும் கெடுதல் நீங்கி மன அமைதி ஏற்படும். தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது. ஆடை, ஆபரணங்கள் சேரும். பெரிய மனிதர்களின் ஆதரவு இருக்கும், இல்லாமலும் இருக்கும். பெண்க ளால் மனக் கசப்பு ஏற்படும். திருமணங்கள் தடைப்பட்டு பின் நடைபெறும். புதிதாக திருமணம் ஆனவர்களுக்கு புத்திர பாக்கியம் கொஞ்சம் நாள் தள்ளித்தான் உருவாகும். வேலை வாய்ப்புத் தேடிச் செல்வோர் ஆணாக, பெண்ணாக இருந்தாலும் கடினம்.

**உத்தியோகம் :** அரசாங்க ஊழியர்களின் வேலையில் டென்ஷன் அதிகமாகும். மனக்கசப்பு கூடும். உடன் பணி புரிபவர்களின் ஒத்துழைப்புக் குறையும். வேலையில் உள்ள பெண்களுக்கு மனச் சஞ்சலம் உண்டாகும். ஒருசில பெண்கள் வேலையை ராஜினாமா செய்வர். கொடுக்கல் - வாங்கலில் சலசலப்பு இருக்கும். கடன்கள் அப்படியே இருக்கும் புதிய முதலீட்டால் பெருத்த நஷ்டம் ஏற்படும். புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவார்கள். டென்ஷன் அதிகமாகுமே தவிர குறையாது. புதிய அரசு வங்கிக் கடன் கிடைத்தாலும் கொஞ்சமாகத்தான் மனம் சாந்தி அடையும். ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்படுவதால் மனம் குளிரும். வாகனத்தில் செல்வோர் கவனமாக செல்லவும்.

**தொழில் :** இருக்கும் தொழிலை அகலப் படுத்தாமல் - இருப்பதை வைத்துப் பிழைத்துக் கொள்ளலாம். அதிக லாபம் எதிர்பார்க்கமுடியாது. கொடுக்கல் வாங்கலில் அதிக லாபம் கிடைக்காது. போட்ட முதலீடு குறையாமல் பார்த்துக்கொள்வது நலம். கூட்டணி தொழில் கூடாது. சீட்டு, கமிஷன், கான்ட்ராக்ட், கந்து வட்டி, ஏலம், சீட்டு, ஏஜெண்ட் முதலியவையெல்லாம் கடினமாகத்தான் இருக்கும். ஆடை, ஆபரணங்கள், பித்தளை, செம்பு, பிளாஷ்டிக் காரியங்களில் கவனம் தேவை. புதிய வாகனங்கள் வாங்குவதில் சிக்கல்வரும். பழைய, புதிய வீடுகளில் செலவு வரும். மின்சாரம் சம்பந்தப்பட்ட பொருள்களில் கவனம் தேவை. ஜாமீன், கையெழுத்து இவையெல்லாம் நெருங்கக் கூடாது. வழக்கு இழுபறியில் இருக்கும். புதிய இடம் பார்ப்பதும், புதிய கட்டடங்கள் கட்டுவதும் தற்போது நிறுத்தி வைப்பது நலம்.



## துலாம்
(நட்சத்திரங்கள் : சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3)

தர்மம் தவறாமல் நடக்க விரும்பும் துலாம் ராசி அன்பர்களே!

உங்க ராசிக்கு 11ம் இடமான சிம்மராசிக்கு சனி பெயர்ச்சியாகி இருக்கார். தனது 3, 7, 10 என்கிற பார்வையாலே ராசி 5, 8 ஆகிய இடங்களை பார்க்கிறார். இந்த நிலைமை ரொம்ப நல்லது. கடந்த காலங்களிலே தொழில் வகை யிலே பட்ட சிரமம் எல்லாம் தீர்ந்து போகும். நியாய தர்மத்தை பின்பற்றி நல்ல மனநிலையை உருவாக்குவீர்கள். கண்டிப்பாகப் பேசினாலும் கடமை உணர்வு அதில் இருக்குங்கிறதாலே சனி பகவானுக்கு உங்களை ரொம்பவும் பிடிச்சு போகும். பணவரவு நல்லா இருக்கும். சமூகத்திலே மதிக்கப்படாம இருந்தநிலை மாறி உயரிய அந்தஸ்து பெறுவீர்கள்.

வீடு, மனையிலே மாற்றம் செய்ய நினைத்தால் திட்டமிட்டபடி முடித்துவிடுங்கள். அதிக ஆசைப்பட்டா பணம் வேகமா கரைந்து கடன் தலைக்கு மேலே வரும். கவனமா இருங்கள்! புத்திரர்கள் படிப்பு, வேலை விடயத்துலே ஆர்வக்குறைவா இருக்கிற வாய்ப்பு தெரிகிறது. காரணம் சேர்க்கை சகவாசம் தான்! நல்ல பிள்ளைகள் கூட பழகுறார்களா என்று கண் காணித்து அன்போடு எடுத்துச் சொன்னா திருந்திவிடுவார்கள். எதிரிகள் உங்களைப் பல வீனப்படுத்த பல வகையிலும் முயற்சி செய் வார்கள். ஜாக்கிரதையா இருங்கள். உடல் நலம் படிப்படியாக முன்னேறிடும். கணவன், மனைவி சந்தோஷமா இருப்பீர்கள். மனைவி வழி உறவுக்காரர்கள் ஆதரவாக இருப்பார்கள். புதிய நண்பர்களோடு அறிமுகம் கிடைக்கும். யாரிடமாவது வாகனம் கடன் வாங்கிக் கொண்டு பயணம் போகிற எண்ணம் இருந்தால்அது வேண்டாம். வாழ்க்கை வசதி திருப்திகரமாக இருக்கும்.



முருகானந்தா சுவாமி

தொழில், உத்தியோகம், வியாபாரம் இதிலே எல்லாம் இனிமேல் வளர்ச்சிதான்! இந்த வகையிலே கணிசமாக பணம் சேரும். நிலுவைப் பணம், ஆதாய பணவரவு இது கிடைப்பதற்குத் தாமதமானாலும், பொறுமையாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேசினால் கிடைச்சிடும். மூத்த சகோதரர்கள் உங்களிடம் உதவி எதிர்பார்ப்பார்கள். முடிந்த வரைக்கும் கொடுத்து உதவுங்கள். வெளிநாடு வேலை வாய்ப்பு தாராளமாகக் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடக்கும். அந்த சந்தோஷத்திலே அதிகமாக செலவழிச்சு கடன் படவும் வாய்ப்பிருக்கும் நிதானமாக இருக்கவும்.

**பணியாளர்கள்:** அரசு, தனியார் துறையிலே இருக்கிறவர்கள் திறமையாக செயல்படுவார்கள். நிர்வாகத்தின் பாராட்டு மட்டுமல்ல! ஊக்கத் தொகையும் கிடைக்கிற வாய்ப்பிருக்கிறது. சலுகைகள் தாராளமா கிடைக்கும். தண்ணீர் சார்ந்த தொழிலில் இருக்கிறவங்களுக்கு ரொம்பவே சலுகை கிடைக்கும் யோகம் வந்திருக்கிறது. சக பணியாளர்களின் ஒத்துழைப்பு நிறையவே இருக்கும். நிறுவனத்தில் உரிய மதிப்புக் கிடைக்கும். சுபமங்கல செலவுதான் அதிகம் வரும்.

**வியாபாரிகள்:** பால் பொருள், பழம், நகை, தண்ணீர் சார்ந்த பொருள்கள், உப்பு, ஆடை, வாசனை திரவியம், வியாபாரம் செய்பவர்களுக்கு சரியான லாபகாலம். மற்றவர்கள் நஷ்டத்திலே இருந்து மீண்டும் லாபப் பாதைக்கு போயிடுவார்கள். கொஞ்சம் தாமதமாக இது நடக்கும். சமூக அந்தஸ்து நல்லாயிருக்கும். குடும்பம் ஒற்றுமையாக இருப்பதால் வியாபாரத்திலே கவனம் அதிகமா இருக்கும். வசதியான வாழ்வுக்குரிய பொருள்களை வாங்கிவிடுவீர்கள். அறப்பணிக்கு நிறையவே செலவிடுவீர்கள். • (வளரும்)

## சித்திரப் பயிற்சி வித்தியாரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.29

கந்தர்மடம், ஆத்திசூடி வீதியில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் விஜய தசமி தினத்தன்று வழமைபோல சித்திர பயிற்சி வித்தியாரம்பம் நடைபெறவுள்ளதால் நான்காம்தரத்திற்கு மேற்பட்ட மாணவர்களை அன்றைய தினம் வருகை தருமாறு நிலைய இயக்குநர் கேட்டுள்ளார். (201)


தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH CORSE
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* துரித காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
அழகிய பேக் ஒன்றும் Tigo Sim (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ / மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0817 918 981 / 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.



After A/L
விஜயதசமி நன்நாளில் ஏசியனுடன் இணையுங்கள்
New Batches on 28th & 30th September
Honours Diploma in Computer Application — Duration: 1 Year, Fast track: 6 Months
Advanced Diploma in Software Engineering
Tally Financial Accounting Program
Advanced Diploma in Java Programming
Diploma in Macromedia Application
Diploma in PC Professional
Diploma in Digital Video Production
Advanced Diploma in Digital Pre - Press
விஜயதசமியை முன்னிட்டு விசேட வகுப்புக்கள் செப்டெம்பர் 28ம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.
ASIAN COMPUTERS
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 0213734088



CANADA LONDON USA EU
அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில பாடநெறிகள்
7th Anniversary
சிறார்களுக்கு...
PRE FOUNDATION — படிப்படியாக ஆங்கில
FOUNDATION — அறிவை விருத்தி செய்யும்
LEVEL 1,2,3,4 — 6 மாத கால பாடநெறிகள்
G.C.E. (O/L), G.C.E. (A/L) கற்றோருக்கு...
IELTS — வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
DIPLOMA IN ENGLISH — வெளிநாடு/உள்நாடு தொழில் வாய்ப்புகளுக்கு
CERTIFICATE IN ENGLISH — சரளமாகஆங்கிலம் பேசுவதற்கு
BRITISH BUSINESS SCHOOL
140, TEMPLE ROAD, JAFFNA. Tel: 021 222 5796



விஜயதசமி வித்தியாரம்பம், புதிய அனுமதிகள்
விரைவில் புதிய கிளைகள் ஆரம்பம்
பாலர் பாடசாலை
சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
கற்பித்தல் முறை
• சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
• ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
• தமிழ்மொழி கட்டாய பாடம்
Play Group - 2 - 3 years
Montessori - 3 - 4 years
Pre-school - 4 - 5 years
விசேட நிகழ்ச்சிகள்
•English Concert •முத்தமிழ் விழா •ஒளி விழா •பட்டமளிப்பு விழா •மாணவர் சித்திரம்/கைவேலை கண்காட்சி •Sports Meet
பாடசாலைகள் BRITISH BUSINESS SCHOOL
நல்லூர் — 140, Temple Road, Jaffna.
சுன்னாகம் — Lakshmi Cottage, K.K.S. Road, Mallakam.
மானிப்பாய் — 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay.
புலோலி — Sri Pathmanathan Illam, Manthikai.
Tel : 021-222-5796


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
18 ★ 06 ★ 1930



மறைவு
28 ★ 08 ★ 2009

### கந்தையா பாக்கியம்

கண்களிலே நீர்க்கோலம்
காணாமல் எமை வளர்த்த
அன்னை உந்தன் நினைவு
ஆழ் மனதைக்
கிள்ளுதம்மா!
நானிலத்தில் நன்றாக
நாம் வாழும் வழிவகைகள்
நீயிருந்து கூறியவை
நெஞ்சில் நிழலாடுதம்மா!
உன்போல ஒரு தாயை
உத்தமியை
நாங்கள் அடைய என்
தவம் செய்தோமோ!
எங்கள் அருமை
அம்மாவை
என்றென்றும் எங்கள்
நெஞ்சில்
வாழும் நாள் உள்ளவரை
உன்னை இருத்தி வைத்து
உள்ளத்தால்
பூசித்து வாழ்த்தி
வணங்கிடுவோம்!

அன்னாரது மறைவுச் செய்தி கேட்டு உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குச் சமுகம் தந்து உதவி புரிந்த வங்கி ஊழியர்கள், உறவினர், நண்பர்கள் மற்றும் மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலமும் மற்றும் பலவழிகளிலும் அனுதாபச்செய்தி அனுப்பிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகவரி:
ஆயிலி, காரைநகர். (89265)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானப்பூ இராமநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, நெடுந்தீவு)



நெடுந்தீவைப் பிறப்பிடமாவும், யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானப்பூ இராமநாதன் 23.09.2009 புதன் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவேரிமுத்து-ஜெற்றூட் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொலிஸ் அதிகாரி கந்தையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் இராமநாதன் (அதிபர், மரணவிசாரணை அதிகாரி) அவர்க ளின் அன்பு மனைவியும், அமரர் சின்னப்பு நாயகம் (அதிபர்), செவாலியர் அடைக்கலமுத்து (ஓய்வுபெற்ற அதிபர்), அமரர் செபரட்ணம் (தபால் தந்தி திணைக்களப் பரிசோதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் மயில்வாகனம் (கிராமசபை உறுப்பினர்) அவரின் மைத்துனியும், புஸ்பவதி (முன்னாள் அதிபர்), சீவரட்ணம் (முன்னாள் தபாலதிபர்), பாக்கிய லீலா (விரிவுரையாளர்), அமரர் ஜெயசிங்கம் (சட்டத்தரணி), ஜெயராசா (முன்னாள் ஆசிரியர்), அமரர் ஜெயபாலன் (P.M.B நிர்வாக அதிகாரி) மற்றும் ஜெயசீலன் (முன்னாள் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்), அமரர் பத்மராணி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் அன்ரனி (உதவிக் கல்விப் பணிப்பாளர்), அரியமலர், செரூபிம் (பரிஸ்ரர், சட்டத்தரணி), இராஜேஸ்வரி, நிர்மலா (ஆசிரியை), இரத்தினேஸ்வரி (பிரதேச செயலகம், உடுவில்), சர்வதாரணி, குணாளன் ஆகியோரின் அன்பு மாமியும் பிறாங்கோ-ஷீமா, நாளினி-கிசோக்குமார், நிரஞ்சன்-நிலாணி, கறோளினி-பாலசிறிகரன், யூட்சன்-சசிகா, பட்சன், சஜிகவி, அஞ்சலி-ஷாண், துஷ்யந்தன்-வதனா, அஞ்சனா-நித்தியானந்தன், கீர்த்தனா-ஜெயகாந்தன், நிரஞ்சனி-டானியல், நிரஞ்ஜீவன், றஜீவன், சாந்திபூஷண்-சகிலா, மேனகா-சுதாசன், ஜெனித்தா-மணிபல்லவன், துஷ்யந்தினி, மன்மதன், சோபனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை (28.09.2009) பி.ப.3.30 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி நடைபெற்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/9, விபுலானந்தர் வீதி,
புங்கன்குளம், அரியாலை.
தொ.பே: 0776621935 (89271)
தகவல்:
குடும்பத்தினர்.

## ராஜீ திருமண சேவை

மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 41 வயது பரணி நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமுள்ள கனடா பிரஜாவுரிமையுள்ள மணமக னிற்கு அழகிய மணமகள் தேவை.

இந்து கௌரவ குடும்பம் 30 வயது திருவாதிரை நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமுள்ள கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனிற்கு அழகிய மணமகள் தேவை.

தொடர்பு: பி.எம். ஜெயரத்தினம்,
158/3, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0213735980, 0774745647 (சி/561196)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிட்லாண்ட் (BORILER)குஞ்சுகள் 02.10.2009 ஆம் திகதி விநியோகிக்கப் படும். விலை 100/=. வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்.

ஏ.இந்திரன்
திகிலி ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.
T.P: 0775250996 (89207)

## வீடு விற்பனைக்குண்டு

நீர்வேலி மேற்கு, கரந்தன் சந்திக்கு அருகில் 6பரப்புக் காணியுடன் சகல வசதிகள் உடைய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : ச.பார்த்திபன்,
(89216) 0777 238275

## புறொயிலர் குஞ்சு விநியோகம்

No.1 பகீரா இன புறொயிலர் குஞ்சுகள் (35 நாள்களில் 2Kg மேல் வளரக் கூடியது. 30.09.2009 அன்று விநியோகிக்கப்படவுள்ளது. தேவையானவர்கள் முற்பதிவு மேற்கொள்ளலாம்.

தொடர்பு:- கலீபா பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி.
T.P:- 0773001763, 0217912783 (89260)

## வாடகை

பலாலி வீதி BioTec (உயிர்நுட்பு) நிறுவனத்தில் வாடகைக்கு சிறிய குடும்பம் இருப்பதற்கு இடமுண்டு.

தொடர்புகளுக்கு: நேரில்-BioTec
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P:- 021 4590907 (89261)

## வீடு வாடகைக்கு உண்டு

சண்டிலிப்பாய் சந்திக்கருகாமையில் பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777048181 (89261)

## வயல் காணி தேவை

தென்மராட்சிப் பகுதியில் வயல் காணி விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல: 077 4839890


## விற்பனைக்கு

'கூடிய கிரகநிலை ஆராய்வுகளுடன் குடும்பப் பிரச்சினை ஏற்படாமல் பொருத்தம் பார்த்து திருமணம் புரிவது எப்படி' என்ற சோதிட ஆய்வு நூல் விற்பனையாகிறது. பிரபல சோதிடர் எஸ்.சிதம்பரநாதன் எழுதியது. கிடைக்கும் இடங்கள்;

* பூபாலசிங்கம் புத்தகசாலை -யாழ்ப்பாணம்
* சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை -நெல்லியடி


## நீர் இறைக்கும் இயந்திர தொழில் நிபுணர்

அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், கண்டி, கொழும்பு, பதுளை, மாத்தறை, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்ட நீர் இறைக்கும் இயந்திர தொழில் நிபுணர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.



- 2 தொடக்கம் 3 வருட தொழில் அனுபவம்
- தொழிற்பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பது மேலதிகத் தகைமையாகும்.

நீங்கள் மோட்டார் சைக்கிளுடன் கையடக்கத் தொலைபேசியையும் வைத்திருப்பது கட்டாயமாகும்.

கடமைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் போது குறித்த பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வாரநாட்களில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு தம்மிடமுள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதியுடன் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு வருகைதரவும்.

மனித வள பிரிவு
வரையறுக்கப்பட்ட த டிரேட்ஸ்மேன் எஸ் எல் (தனியார்) நிறுவனம்
இல.40, பொறுப்பன பேரி வீதி, இரத்மலானை
தொலைபேசி 011 5565637
hrd@tradesmann.com

The TRADESMANN


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



எமது பிரதேச வைத்தியசாலை மானிப்பாயில் மருந்துக் கலவையாளராகக் கடமையாற்றும் செல்வி தெ.கோபிகாவின் தந்தை அமரர் தம்பியப்பா தெட்சணாமூர்த்தியின் 31ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானிப்பாய். (89263)
மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை,
அபிவிருத்திச் சபையினர்.

## மரண அறிவித்தல்கள்

### நடராசா ஞானசம்பந்தன்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நடராசா ஞானசம்பந்தன் 14.09.2009 திங்கட்கிழமை லண்டனில் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த பவளம்மா நடராசா தம்பதிகளின் புதல்வரும், மதியின் அன்புக் கணவரும், பூர்ணிமாவின் தந்தையும், சாராவின் பேரனும், டரன்பெஸ்றின் மாமனாரும் காலஞ்சென்ற மாணிக்க நடராசா மற்றும் ஞானசுந்தரம் (பிரேம்ஜி), கருணாதேவி ஆகியோரின் சகோதரரும், கமலி, சிவகுருநாதன், ஆனந்தசங்கரி, சகாதேவசங்கரி, பரதசங்கரி, லோகநாயகி, திருநல்நாயகி காலஞ்சென்றவர்களாகிய ஜெகசோதி, தர்மசங்கரி, கணேசசங்கரி, இராசசங்கரி, ஞானசங்கரி, துருவசங்கரி, மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.09.2009 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/561202)
தகவல்:
வி.ஆனந்தசங்கரி.

### ஏரம்பு பேராயிரம்

(ஓய்வுபெற்ற பிரதேசசபைச் செயலாளர் - புதுக்குடியிருப்பு, பிரதம லிகிதர் - யாழ். மாநகர சபை)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு பேராயிரம் 25.09.2009 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 33, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (89272)
தகவல்
குடும்பத்தினர்.

நயினாதீவு

### திருவாட்டி கமலாம்பிகை பரமனாதி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட கமலாம்பிகை பரமனாதி (25.09.2009) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் - வள்ளியம்மை தம்பதியினரின் தலைமகளும், காலஞ்சென்ற சரவணமுத்து- சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகளும், யோகராசா (பணிஓய்வு - பிரதம தபாலதிபர்), ஜெயராசா (பணிஓய்வு- வரிமதிப்பீட்டாளர்), வரதராசா (கனடா), இராசேஸ்வரி,ரதீஸ்வரி(ஜேர்மனி),இந்திரேஸ்வரி (பணிஓய்வு-ஆசிரியை),சோதீஸ்வரி (ஜேர்மனி),சுதாகரராசா (கனடா), கேசவராசா (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், இரஞ் சிதா (பணி ஓய்வு- ஆசிரியை), சரஸ்வதி (பணிஓய்வு- அதிபர்), கிரிஜாலினி (கனடா) , சிவநாதன் (பணிஓய்வு- பொலிஸ் சார்ஜன்),பரமநாதன் (பணிஓய்வு- உள்ளூராட்சி மன்றம்- ஜேர்மனி), முத்துராசா (பணி ஓய்வு - உடற்கல்விப் பணிப்பாளர்), சந்திரசீலன் (ஜேர்மனி), சுசி (கனடா), மதிவதனி (பணி ஓய்வு-ஆசிரியை) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ், கொழும்பு), கற்பகம் (கனடா),காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (பணிஓய்வு-தொழிலதிகாரி), நாகரத்தினம் (கனடா), பாக்கியரத்தினம் (பணிஓய்வு- ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற கதிரேசு மற்றும் தங்கம்மாள் (பணிஓய்வு- ஆசிரியை), இரத்தினசபாபதி (பணி ஓய்வு ஆசிரியர், கனடா), சிவபாதசேகரம் (பணிஓய்வு-அதிபர்), காலஞ்சென்றவர்களான செல்லம்மா,பொன்னம்மா, சதாசிவம், விஸ்வலிங்கம் வள்ளியம்மை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.09.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

ப.யோகராசா,
73/2, ரீற்ரேஸ் லேன்,தெகிவளை,
0114936825
ப. ஜெயராசா,
0112 722 442 (89273)

திருமதி பாக்கியரத்தினம்
சிவபாதசேகரம் (சகோதரி),
115, தொடருந்து நிலைய வீதி,
கொக்குவில்.
0213218793

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் தமிழகத் தலைவர்களின் கவலையும்

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்றால் சர்ச்சை என்று தான் அர்த்தம் போலும்.

ஒவ்வொரு தடவையும் உலகத் தமிழர் ஆராய்ச்சி மாநாடு பற்றிய அறிவிப்பு வந்ததும் அது பற்றிய சர்ச்சையும் கூடவே ஒட்டிக்கொண்டு வந்துவிடும்.

1974இல் இங்கு-யாழ்ப்பாணத்தில்-நடந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் அது விட்டுச் சென்ற அதிர்வுகளும் மறந்துவிடக் கூடியவை அல்ல. அந்த மாநாட்டை எழுச்சிகரமான நிகழ்வாக இலங்கைத் தமிழர்களை நடத்த விடாமல் கொழும்பு போட்ட முட்டுக்கட்டைகளும் கடைசி யாக இறுதிநாள் பொதுநிகழ்வில் சீருடைத் தரப்பினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட களேபரத்தில் ஒன்பது அப்பாவித் தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டமையும் ஈழத்தமிழர்களின் ஆன்மாவை ஆழமாகப் பதிந்த ரணங்கள். இலங்கைத் தமிழர்களின் உரிமைக்குரல் தீவிரம் பெற்று ஆயுதப் போராட்டத்தின் பால் திரும்புவதற்குக் காரணமாக அமைந்த அம்சங்களில் இந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளும் அடங்கும்.

1981இல் அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் மதுரை நகரிலே உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்திய போது, இப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதியும் அவரது தி.மு.கவினரும் அந்நிகழ்வைப் பகிஷ்கரித்துப் புறக் கணித்தனர். அதேபோன்று கலைஞர் கருணாநிதி இப்போது முதல்வராக இருந்துகொண்டு நடத்தத் திட்டமிடும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை எம்.ஜி.ஆரின் அ.தி.மு.கவுக்கு தலைமை வகிக்கும் செல்வி ஜெயலலிதா தாமும் தமது கழகத்தவர்களும் பகிஷ்கரிக்கப் போகின்றார்கள் என்று அறிவித்திருக்கின்றார். தமிழாராய்ச்சி மாநாட்டைக் கருணாநிதி தலைமை யிலான தமிழக அரசு நடத்தக்கூடாது என்பதற்கு ஜெயலலிதா காட்டும் காரணங் கள் கவனிக்கத்தக்கவை.

1966இல் கோலாலம்பூரிலும், 1968இல் சென்னையிலும், 1971இல் பரிஸிலும், 1974 இல் யாழ்ப்பாணத்திலும், 1981இல் மதுரையிலும், 1987இல் கோலாலம்பூரிலும், 1989இல் மொறிஸியசிலும், 1995இல் தஞ்சாவூரிலும் உலகத் தமிழர் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றன.

இதற்கு முந்திய எட்டுத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் சர்வதேச தமிழாராய்ச்சிச் சங்கத்தினாலேயே நடத்தப்பட்டன. அவை [illegible]பெற்ற நாடுகளின் அரசுகளும், மாநில அரசுகளும், அவ்வப்பகுதி மக்களும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்தனர். தமிழகத்தில் ஆட்சியிலிருந்த எம்.ஜி.ஆர், ஜெயலலிதா அரசுகளும் அப்படித்தான் நடந்துகொண்டன.

எனவே 2010இல் கலைஞர் கருணாநிதியின் மாநில அரசு தன்னிச்சைப்படி ஒரு தமிழ் மாநாட்டை நடத்திக்கொண்டு, அதைத் தமிழாராய்ச்சி மாநாடு என்றோ, முன்னர் நடைபெற்ற மாநாடுகளின் வரிசையில் ஒன்பதாவது உலகத் தமிழராய்ச்சி மாநாடு என்றோ அறிவிக்கமுடியாது என்பது ஜெயலலிதாவின் வாதம்.

அதில் நியாயம் உண்டு. ஆனால் சர்வதேச தமிழாராய்ச்சிச் சங்கத்தின் அல்லது மன்றத்தின் ஒழுங்கமைப்போடுதான் இத்தகைய மாநாட்டைக் கலைஞரின் அரசு முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த மன்றத்தைப் புறக்கணித்து அல்லது கவனத்தில் எடுக்காது இத்தகைய மாநாட்டை முன்னெடுக்கத் தமிழக முதல்வர் முயலமாட்டார் என்றே பலரும் எதிர்பார்க்கின்றனர்; எனவே இது விடயத்தில் தமிழக அரசின் திட்டம்-உத்தேசம் என்னவென்பதை முதலில் அறிவதே நல்லது.

அடுத்தது, 1966ஆம் ஆண்டு முதலாவது உலகத்தமிழ் மாநாட்டை நடத்திய மலேசியத் தமிழர்கள் இன்று அந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில் -

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்திய இலங்கைத் தமிழர்கள் இன்று தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிமுகாம்களில் அவலப்பட்டுக் கொண்டிருக்கையில்-

இந்த மாநாட்டை நடத்தும் தகுதி - தகைமை - கலைஞர் கருணாநிதிக்கு உண்டா என்று கேள்வி எழுப்புகின்றார் ஜெயலலிதா. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலை நடந்துகொண்டிருந்தபோது அதை எதிர்த்துக் குரல் கொடுக்காதவர் கருணாநிதி, அவருக்கு இந்த மாநாட்டை நடத்த என்ன யோக்கியதை உண்டு என்ற தோரணையில் வினா எழுப்புகின்றார் ஜெயலலிதா அம்மணி.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று - ஜெய லலிதா சுட்டிக்காட்டிய விடயம். மற்றது - அப்படிச் சுட்டிக்காட்டும் தகுதி ஜெயலலிதாவுக்கு உண்டா என்பது.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தபோது, தமது பதவியை அதிகாரத்தையும் தலைமையையும் பயன்படுத்தி அக்கொடூரங்களைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்காதவர் கருணாநிதி. தமி ழுக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்ததன்மூலம், மற்றைய தவறை மறைத்து விடலாம் என்பதுதான் அவர் எண்ணம்.

அதுபோலவே, இப்போது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்ற ஆரவாரத் தடல்புடல்கள் மூலம் இலங்கைத் தமிழர் விடயத்தில் தாம் இழைத்த வரலாற்றுத் தவறுகளை - இமாலயப் பிழைகளை - மூடி மறைத்துவிடலாம் என்று இந்தக் கிழட்டுத் தந்திரோபாயக்காரர் திட்டமிடக்கூடும்.

செம்மொழி அந்தஸ்து, உலகத் தமிழாராய்ச்சி மாநாடு போன்ற அலங்காரங்கள் மூலம் தம்மை உலகத் தமிழர் களின் தலைவராக நிலைநிறுத்திக் கொள்ளலாம் எனத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கனவு கண்டாலும் கூட, இலங்கைத் தமிழர்களுக்கும் பேரழிவு நடத்தப்பட்ட சமயம், பதவியாசை கருதி உறுதியான, உகந்த நடவடிக்கைகளை எடுக்கத் தவறி, புதுடில்லியின் புறமொதுக்கல் போக்குக்கு உடந்தை யாகி, சரித்திரத் தவறிழைத்த கலைஞர் கருணாநிதி 'உலகத் தமிழர்களின் தலைவிதி' என்றுதான் வரலாற்றில் குறைகூறி ஒதுக்கப்படுவாரே அன்றி, எச்சமயத்திலும் உலகத் தமிழர் களின் தலைவராக உயரவேமாட்டார்.

அடுத்தது, ஜெயலலிதாவின் போக்குப் பற்றியது. இன்று இலங்கையில் தமிழர்கள் படும் பேரவலத்துக்குப் பிரதான காரணகர்த்தாக்களுள் ஒருவர் ஜெயலலிதா என்பது மறைக்கக் கூடியதல்ல. இலங்கைத் தமிழர்களையும், அவர்களது போராட்ட உணர்வுகளையும், தலைவர்களையும் கிள்ளுக் கீரையாகக் கருதி, தூக்கிப்போட்டு ஒதுக்கி, அரசியல் திமிர்த்தனத்துடன் ஜெயலலிதா செயற்பட்டமையும் இலங்கைத் தமிழர்களை இந்த இழிநிலைக்கு இன்று கொண்டு சென்றுள்ளமைக்குக் காரணம்.

கடைசியாக தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கையிலிருந்து சென்ற தமிழ் புத்திஜீவிகள் மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்காது திருப்பி அனுப்பியமையும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

அதிகாரத்தில் இருந்தபோது ஆணவத்தோடு இலங்கைத் தமிழர்களைத் துச்சமாக மதித்த அம்மையார், இப்போது தாம் அதிகாரத்தில் மிதிக்கப்படும் போது நலிவுற்ற இலங்கைத் தமிழர்களுக்காக முதலைக் கண்ணீர் - நீலிக் கண்ணீர் - வடிக்கின்றார். கலைஞர் மீதான காழ்ப்புணர்ச்சியைக் காட்ட இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலேசியத் தமிழர்களின் அவலம் குறித்து கரிசனை உள்ளவர்போல நடிக்கின்றார். அவ்வளவே.

# யாழ்.மாநகர மேயர் பதவியேற்போது புத்திஜீவிகள் - ஜனாதிபதி சந்திப்பிற்கு ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸ் தகவல்



யாழ்ப்பாணம், செப். 27

யாழ். மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது. யாழ். மாநகர சபை மேயர் மற்றும் மாநாகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் கொழும்பில் நடைபெறும் போது இந்தச் சந்திப்பையும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத் தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் துறையினர், விவசாயத்துறையினர், கடற்றொழிலாளர்கள், பல்கலைக் கழக சமூகத்தினர் , நீதித்துறையினர் உட்பட அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி சுமார் 100 பேரை ஜனாதிபதியைச் சந்தித்து பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறுவதற்கு அழைத்துச் செல்லவுள்ளேன். விரைவில் இந்தச் சந்திப்பு நடைபெறும்.

யாழ்.நகர மேயரின் பதயேற்பு வைபவத்தின் போது இந்தச் சந்திப்பை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களின் சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் - என்றார். (1-50)

## தென்மராட்சி, அரியாலைப் பகுதிகளில் இன்று விதை நெல் விநியோகம்

யாழ்ப்பாணம் . செப்-27

மறவன்புலவு, தனங்கிளப்பு, அரியாலை கிழக்கு, சாவகச்சேரி நகரப் பகுதி, நுணாவில் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் நெற்செய்கை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு 2ஆம் கட்ட விதை நெல் விநியோகம் இன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நுணாவில் கிழக்கு, அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள வீட்டில் இடம்பெறவுள்ளது.

அரியாலை கிழக்கு பிரதேச விவசாயிகளுக்கு அரியாலை தபால் கட்டைச் சந்திக்கு அருகில் உள்ள விவசாய சம்மேளன மண்டபத்தில் வைத்து விதை நெல் விநியோகிக்கப்படும். (1)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.27

ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளையும் கலந்து கொள்வர். இன்றைய ஆட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு:

* 3 ஆம் இடம்- ஊரெழு றோயல் வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க.
* பெண்கள்- கரவெட்டி பொம்மேர்ஸ் வி.க. எதிர் அளவெட்டி பாரதிதாசன் வி.க.

இறுதியாட்டம் - ஞானமுருகன் வி.க. எதிர் பாடுமீன் வி.க. (203-201)

* * *

யாழ்ப்பாணம், செப்.27

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தி வரும் 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவப் பீட பேராசிரியர் என்.நடராஜசுந்தரம் கலந்துகொள்வார். (1-7)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 12 | 28.09.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | தசமி |
| | பி.இ. 05.16 வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | பி.இ. 02.10 வரை |
| சுபநேரம்: | 12.02 - 01.32 |
| ராகுகாலம்: | 07.32 - 09.02 |
| | விஜயதசமி |

## நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், செப். 27

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு த.பிரதீஸ்வரன் தலைமையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

* * *

நவாலி - ஹேமலதா செல்வராஜா சிறுவர் நிதிய சிறுவர் சங்கம் நடத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் செல்வி. செ. டஸ்ரிக்கா தலைமையில் இடம்பெறும். (204-302)

* * *

யாழ்ப்பாணம், செப். 27

தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மாகா வித்தியாலயத்தின் வாணி விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், செப். 27

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய மானம்பூ உற்சவம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று காலை 10 மணி முதல் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து கன்னி வாழை வெட்டு உற்சவம் இடம்பெறும். (1-250)

* * *

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் நவராத்திரி விழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மகிடாசூரன் போர் நடைபெறவுள்ளது. நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மானம்பூத் திருவிழாவும் இடம்பெறும். (204)

## தபால் சேவையை நடத்துவதற்கு லேடி கோர்டன் கப்பல் கொழும்பு வந்து சேர்ந்தது

**1889 செப்29**

இலங்கையில் தபால் சேவையை நடத்துவதற்கென எஸ்.எஸ்.லேடி கோர்டன் (S.S.Lady Gordon) என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. 1889ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29ஆம் திகதி கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பல், ஒக்ரோபர் மாதம் இலங்கையைச் சுற்றி தனது முதலாவது சேவையை ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் குதிரை வண்டியிலேயே தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டன. குதிரை வண்டியில் தபால்கள் எடுத்துச் செல்லப்பட்ட போது, குதிரைகள் களைப்படைந்து விடும் என்ற காரணத்தால் ஆங்காங்கே குதிரைகள் மாற்றப்பட்டன. ஆசைப்பிள்ளை வன்னியனார் என்பவர் யாழ்ப்பாணம் - கொழும்பு குதிரை வண்டி தபால் சேவையை (Mail Coach) நடத்திய விடயம் ஏற்கனவே பார்த்துள் ளோம்.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே......!**

*குறிப்பு:* இந்தப்பத்தியைத் தொடர்ச்சியாக வாசித்து வரும் சிலர் வாராவாரம் இங்கு எழுதப்படும் விடயங்களை பற்றிய பின்னணி மற்றும் மேலதிக தகவல்களை அவ்வப்போது வழங்கி வருகின்றனர். ஏற்கனவே நான் எழுதிய ஆசைப்பிள்ளை வன்னியனாரின் தபால் சேவையைப்பற்றி வாசித்த சிவா என்பவர் ஆசைப்பிள்ளை வன்னியனாரிடம் குதிரை செலுத்துபவராகக் கடமையாற்றிய ஒருவர் இரண்டாம் குறுக்குத்தெரு வில் வசித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், பிறீமன் பத்திரிகையில் கடமையாற்றிய செல்வி ஒன்டற்ஜியின் தந்தை மட்டக்களப்பில் அரசாங்க அதிபராகப் பணியாற்றியவர் எனவும் இவர், இளைப்பாறு மடங்கள் பலவற்றைக் கட்டியவர் என்றும் மட்டக்களப்பிலுள்ள ஒந்தாச்சிமடம் இவரது பெயரையே குறிப்பதாகவும் சரித்திரபாட ஆசிரியர் ஆ.சபாரத் தினம் கடிதம் எழுதியுள்ளார். அத்துடன், உலகிலேயே முதல் பெண் பத்திரிகையாளராக செல்வி ஒன்டற்ஜி இருக்கலாமெனவும் குறிப்பிட்டுள்ளார். இருவருக்கும் நன்றிகள்.

\- தாண்டவன்.

உங்கள் உயிரைக் காப்பாற்றும் பொறுப்பு எவரையும் விட உங்களுக்கே அதிகம்

அதனால் கையடக்கத் தொலைபேசி குறித்து கீழே உள்ளவற்றை தவறாது கவனமாகப் படியுங்கள்

நீங்கள் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளரா?
அப்படியாயின், நீங்கள் உயிராபத்தினை எதிர்கொண்டுள்ள நிலையில்..... உங்கள் அருகில் உள்ளவர் உங்களில் அதிக அக்கறை உள்ள நபரை தொடர்பு கொள்வது எப்படி? உங்களது கையடக்கத் தொலைபேசியில் 100க்கு மேற்பட்டவர்களின் தொலைபேசி இலக்கங்களும் பெயர்களும் பதிவு செய்யப்பட்டிருக்கும். அதில் உங்களில் அதிக அக்கறை செலுத்தக்கூடியவரின் எண் எது ? அவ்வெண்ணை எவ்வாறு அறிந்துகொள்வது ?
உங்களது ஆபத்து நிலையை உடனடியாக அறிவிக்கவேண்டிய நபர் அல்லது நபர்களை இலகுவாகக் கண்டறிவதற்கு....
"ICE" உங்களுக்கு உதவும். "ICE" என்றால் என்ன ?
IN CASE OF EMERGENCY
உங்களது கைத்தொலைபேசியில் அந்த நபரின் இலக்கத்தினை பின்வருமாறு பதிவுசெய்யவும்
Example: ICE - 07xx xxxxxx / 021 222 xxxx
ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களாக இருப்பின்
ICE 1- 07xx xxxxxx / 021 222 xxxx
ICE 2- 07xx xxxxxx / 021 222 xxxx
ICE நீங்கள் பேசமுடியாதபோது உங்களுக்காகப் பேசும்.
Will speak for you when you are not able to.
MEDICAL TEAMS INTERNATIONAL Hope is on the way
World Health Organization COUNTRY OFFICE FOR Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



## வவுனியா அகதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது, முகாமிலிருந்தவர்கள் பாதுகாப்புப் படையினர் மீது கற்களை எறிந்ததாகவும், அதையடுத்து தற்பாதுகாப்புக்காகப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இந்த மாதம் 17 ஆம் திகதி முதல் இலங்கை அரசு அகதி முகாம் மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதை நிறுத்திவிட்டதால், உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படும் உலர் உணவுகளை சமைக்கத் தேவைப்படும் விறகுகளை எடுத்து வருவதற்காகவே மக்கள் ஒரு முகாமிலிருந்து மற்ற முகாம்களுக்குச் செல்ல வேண்டிய தேவை எழுந்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இச்சம்பம் குறித்து உதயனுக்குத் தெரிவித்ததாவது :

அகதி முகாம்களில் உள்ள மக்கள் தமக்கு உணவு சமைப்பதற்கென விறகு எடுப்பதற்காக அருவிலுள்ள முகாமுக்கு சென்ற வேளை படையினர் அவர்களைத் தடுத்தமையால், படையினருக்கும் முகாம் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. மோதலினால் முகாம் மக்களில் மூவர் காயமடைந்ததனர்.

வவுனியா முகாம்களிலுள்ள மக்களுக்கு இது வரை காலமும் சமைத்த உணவு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த மாதம் 17 ஆம் திகதியிலிருந்து சமைத்த உணவு வழங்காது இனிமேல் மக்கள் தாங்களாகவே உணவு சமைத்துச் சாப்பிட வேண்டும் எனக்கூறி அரிசி, மா, சீனி, பருப்பு உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்படுகின்றன. அங்குள்ள முகாம்களில் சுமார் 2 லட்சத்து ஐம்பத்தினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கியிருக் கின்றனர். அவர்கள் உணவு சமைப்பதற்கு விறகு தேவையாகவுள்ளது. அதைவிட மரக்கறி, உப்பு, புளி போன்ற பொருள்களை வாங்குவதற்கு அங்குள்ள 80 வீதத்திற்கும் மேற்பட்டோரிடம் கையில் பணம் இல்லை. இதனால் உணவு சமைக்க முடியாத நிலையும் காணப்படுகிறது.

தற்பொழுது மழையின்மையால் கூடாரங்களுக்கு வெளியே அடுப்பு மூட்டி சமைக்கிறார்கள். மழைகாலத்தில் முகாமுக்குள் அடுப்பு மூட்டவும் முடியாது, சமைக்கவும் முடியாது இதனால் சமைப்பதற்கு விறகு தேவைப்படுவதால் தான் அவர்கள் விறகு உள்ள முகாமை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. அப்படிச் சென்றவேளையிலேயே கைகலப்பு ஏற்பட்டு இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தற்பொழுது இராமநாதன் முகாமுக்கும் ஆனந்தகுமாரசாமி முகாமுக்குமிடையே இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். மக்கள் அந்த இடத்தில் கூடியுள்ளனர்; கூடியிருக்கிறார்கள்.

ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் இந்தச் சம்பவத்தால் அச்சத்துடனும் பயப்பீதியுடனும் இருக்கிறார்கள் - என்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார பி.பி.ஸிக்குத் தெரிவித்ததாவது:-

அகதி முகாம் பகுதியில் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை, சிலபேர் முதலாவது முகாமிலிருந்து இரண்டாவது முகாமுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட போது படையினர் அவர்களைத் தடுத்தனர். இதனால் அங்கு மக்கள் ஒன்று திரண்டனர். பின்னர் படையினரை நோக்கிக் கற்களை வீசினர். எனவே படையினர் தற்காப்புக்காக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் இருவர் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக தற்பொழுது செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். படையினரைத் தாக்குவதற்கு வந்த 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் அவர்கள் தற்பொழுது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளர் அங்கு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது - என்றார். (அ-1-7)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses... 28.09.2009 முன் பதிபவர்களுக்கு விசேட கட்டணசலுகை

*MS Office *English*Computerised Accounting
*DTP,Hardware * Web Development
* Video Editing *AutoCAD * VB.net,LINUX

International Courses...
MCP_Microsoft..Professional,Cisco-CCNA,
MCSE_Microsoft...Engineer,ICDL,CIMA
Java programmer(SCJP)

Free Courses ICDL,DHT Sun Java 50%Off

MCS Degree Course
Supported By UNDP/JRRP * BIT *FIT Semester 1,3 & 5,Project

மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாணம், 0772395895


## 334 பேர்...

வரப்பட்டுள்ளனர்.

தோப்புக்காடு இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்கள் இன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-250)

## வங்கிகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மில்லியன் ரூபா நகையாகவும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளதாக தற்போது தெரியவந்துள்ளது. இந்தத் தொகையை உறுதிப்படுத்துமாறு நான் வடமாகாண ஆளுநரிடம் கேட்டுள்ளேன். இந்த வைப்புக்களை வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளேன். வடக்கில் சிறு கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு இலகு கடன்களை வழங்குவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த முடியும். அத்துடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அந்த நிதி மூலம் முன்னெடுக்க முடியும். எனவே இந்தநிதியை பயன்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதியிடம் விரிவாகப் பேச்சு நடத்தவுள்ளேன் - என்றார். (அ-50)

## யாலப் பகுதியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்டை ஒன்றை இராணுவத்தினரும் பொலிஸாரும் ஆரம்பித்துள்ளனர்-என்று பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

முகமூடி அணிந்த சிலர் ரி- 56 ரகத் துப்பாக்கிகளுடன் இந்தக் காட்டுப்பகுதியில் நடமாடுவதைக் கண்டதாக அந்தப் பிரதேச விவசாயிகள் பொலிஸாருக்குத் தக வல் கொடுத்துள்ளனர்.

அவர்களின் நடமாட்டத்தால் அச்ச நிலை ஏற்பட்டிருப்ப தாகவும் மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். இதையடுத்து இந்தத்தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ-1)


விஜயதசமியை முன்னிட்டு
சிறார்களுக்கான
கணனிப்பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
28/09/2009
30/09/2009
Time at 4.00 p.m
மேலதிக விபரங்களுக்கு
DMI COMPUTER EDUCATION
No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
Tel. 021-222 4403


## போரினால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதரக அதிகாரிகளுடன் நேற்றுக் காலை வவுனி யாவுக்கு வருகைதந்த அலோக் பிரசாத், வவு னியா அரச அதிபர் திருமதி சாள்ஸ், வடக்கு இடம்பெயர்ந்த மக்களின் பணிகளுக்கான தகுதி வாய்ந்த அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்தின ஆகியோருடன் கலந்துரையாடினார். அதன் பின்னர் மனிக் முகாம் பிரதேசத்துக்குச் சென்று மக்களின் நிலைமையைக் கேட்டறிந்தார்.

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னார் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவரும் வடிகால் அமைப்பு வேலைகளைப் பார்வையிட்டார். கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் உள்ள ஆலயத்துக்கு சென்று வழிபட்ட தூதர், பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு கல்விசார் உபகரணங்களை வழங்கினார்.

இந்திய வைத்தியர் குழுவை அனுப்பி அகதிகளுக்கு ஆறுமாதகாலம் வைத்திய சேவையை வழங்கியதாகத் தெரிவித்த தூதர் அலோக் பிரசாத், போரினால் கை, கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்த ஜெய்ப்பூர் காலணி நிறுவனத்தில் இருந்து குழு ஒன்றை அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான முன் மொழிவு இலங்கை அரசிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. அந்த முன்மொழிவை இலங்கை அரசு உறுதிப்படுத்தியதும் ஆரம்பப் பணிகளை ஆரம்பிப்போம் - என்று அவர் கூறினார். (அ-1)

## தயா மாஸ்டர்,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் நடைபெற்றபோதே புலனாய்வுப் பிரிவினர் இப்படித் தெரிவித்தனர்.

வேலாயுதம் தயாநிதி எனப்படும் தயா மாஸ்டர் மற்றும் குமரன் பஞ்சரட்ணம் எனப்படும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். தயா மாஸ்டரின் பிணைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட எஸ்.அரசரட்ணம், தனது பொறுப்பை வாபஸ் பெற்றுக் கொண்ட தாகவும், அவருக்கு பதிலாக தயா மாஸ்டரின் சகோதரி பிணைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

அகதி முகாமில் அடைக்கலம் பெற்றிருந்த காலப்பகுதியில் குறித்த இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார்களா, அகதிகளை அரசாங்கத்திற்கு எதிராக தூண்டினார்களா என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது. இவர்கள் இருவரும் இரகசியமான முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டார்களா என்பது குறித்தும் ஆராயப்பட உள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் அகதி முகாமொன்றில் அடைக்கலம் பெற்றிருந்த போது இவ்விருவரும் கைது செய்யப்பட்டு, பின்னர் 2.5 மில்லியன் ரூபா தனிப்பட்ட பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். (அ-1)


SOND நிறுவன நிகழ்வு இடமாற்றம்

SOND நிறுவனத்தால் 27.09.2009 அன்று நடத்தப்பட இருந்த ''ஒற்றுமை காண்போம்'' நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.
(02 ஆம் பக்கம் பார்க்கவும்) SOND

ELATE Computer System
யாழ் குடா நாட்டில் மிக குறைந்த விலையில் தரமான
Dell Branded Pc (Recondition)
. 2.8 Intel Processor
. 512 mb Ram
. 40 GB HD
. "17" Flat Monitor
. DVD Reador, CD Writer
26000/=
Sam Sung Laptop
. 2.0 Dual Core
. 160 GB HD
. DVD R/W
. Web Cam,BlueTooth
95000/=
Cam Coder
JVC (Japan)
With 30GB Hard Disk
Tuch Screen
45000/=
Computer repairing mobile Service T.P 0779235804
T.P no 0217451085
Hot line 0779235804 , 0715355059
E-mail Address-johnsonjmp@gmail.com
Elate Computer System
360/8 Catholic Press Complex
Main Street, Jaffna.

BRANDED
ASSEMBLED

HP PAVILION: 1.6 Dual Core Pro, G31 Intel Mother board, 512 MB Ram, 80 GB Hard Disk Sata, DVD Writer Light Scribe, Keyboard, Mouse, 17" LCD HP WI707 — 58 000/=
LENOVA M57: 2.2 Core 2 Duo Pro, G35 Intel Mother board, 1 GB Ram, 250 GB Hard Disk, DVD Writer, KeyBoard, Mouse, UPS - DCP / East — 56 000/=
NIT - 1: 2.5 Dual Core Pro, Asrock Mother board, 320 GB Samsung Hard Disk, 1 GB Kingston Ram, DVD Writer Sony, Power Logic Casing, Keyboard, Mouse, 15' LCD Monitor, UPS - DCP / East — 43 900/=
HP PAVILION: 2.5 Dual Core Pro, G31 Intel Mother board, 1 GB Ram, 320 GB Hard Disk, DVD Writer Light Scribe, Key board, Mouse, 17' LCD HP WI707, UPS — 69 000/=
NIT 2: 2.5 Dual Core Pro, ASUS (P5KPL-AM)Mother board, 1 GB Ram Kingston, 320 GB Hard Disk, DVD Writer Sony, Power Logic Casing, Keyboard, Mouse, 17' LCD HP, UPS - DCP / East, Printer - 1560 — 49 600/=
NIT 3: 2.5 Dual Core Pro, ASUS Mother board, 1 GB Ram Kingston, 320 GB Hard Disk, DVD Writer ASUS, Power Logic Casing, 17" LCD HP, UPS - DCP / East, Printer 1560, Vista O / Stater — 59 950/=

NALIN Information Technologies Pvt Ltd
அனைத்து கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
Tel: 0212221166 0777667274
FREE Hifi Head Phone or Bluetooth dongle
44/3 A மணல்தரை லேன், கந்தர்மடம் யாழ்ப்பாணம் (சுந்தரம் மருந்தகம்) அருகாமையில்)


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை குமாரசாமி (சாமி)

கல்வயலைப் பிறப்பிடமாகவும், இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குமாரசாமி நேற்று (26.09.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்: குமாரசாமி இந்திராணி (மனைவி).

### சுப்பையா நாகராஜா

(ஓய்வுபெற்ற எழுதுநர், சீமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S)



மஞ்சவனப்பதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நாகராஜா 24.09.2009 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2009) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.484, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். T.P. 021 321 8565

தகவல்: குடும்பத்தினர்.

### சிவசுப்பிரமணியம் கிருஸ்ணதாஸ்



நல்லூர், செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் (வல்லிபுரம்) - நாகலச்சுமி தம்பதியினரின் மூத்த புதல்வர் கிருஸ்ணதாஸ் கனடாவில் நேற்று (26.09.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சியாமா (குட்டி) வின் அன்புக் கணவரும் மிதுன், மிதுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமதாஸ் (கனடா), விஜிதா (ஜேர்மனி), குகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

50/18, செட்டித் தெரு, நல்லூர்.
T.P.0213008761, கனடா:- 0014162698855

தகவல்: ந.சந்திரதாசன் (சகலன்).

### சின்னத்துரை பரமராசா



ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரமராசா நேற்று (26.09.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- சௌபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், கோவிந்தபிள்ளை - பரமேஸ்வரி தம்பதியினரின் பெறாமகனும் பூரணத்தின் (கிளி) அன்புக் கணவரும், பிறேமாவதி, சசிகலா,பிரதாப் ஆகியோரின் அன்புத்தந்தையும், கமலநாதன், செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ணுப்பிரியா, பிரித்திகா, லோசன், சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3 மணிக்கு யாழ்.கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்பாணம்.

தகவல்: கமலநாதன் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27 .09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஊடகங்களின் இருண்ட காலம்

**தமிழக ஊடகவியலாளர் கவிதா என்பவர் சில மாதங்களுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஊடகங்களின் நிலைமை, மனித உரிமைகள் போன்றவற்றைக் கண்டறிந்திருந்தார். அவர் இப்போது தமிழகத்தின் 'காலச்சுவடு' இணையச் சஞ்சிகைக்கு இலங்கையின் நிலை குறித்தும், இலங்கை நிலைப்பாட்டில் இந்திய ஊடகங்களின் பங்களிப்புக் குறித்தும் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வரைந்திருக்கிறார். அது இங்கு மீள் பிரசுரமாகின்றது.**

ஓர் ஊடகவியலாளராக, குறிப்பாக ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் பணிபுரியும் ஊடகவியலாளராக, இங்கு நின்று பேசுவதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று தெரியவில்லை. இருந்தாலும் எனக்கும் சொல்ல சில விடயங்கள் இருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை இந்திய ஊடகங்களின் மொழி - குறிப்பாகத் தமிழகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஊடகங்களின் மொழி - சில வார்த்தைகளுக்குள் சுருங்கிவிட்டது. புலி எதிர்ப்பு அல்லது புலி ஆதரவு என்று சுருங்கிவிட்ட மொழியைக் கொண்டு, அதனடிப்படையிலும் அந்தப் பின்னணியிலும் பெரும்பாலான ஊடகங்கள் செயற்படுகின்றன.

பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகளுக்குப் புலி ஆதரவுநிலை என்பது ஒரு வியாபார உத்தி. பிரபாகரனின் மரணத்தைச் இலங்கை அரசு அறிவித்த பிறகு வந்த ஒரு தமிழ்ப் பத்திரிகை தனது மரணம் குறித்த செய்தியைப் பிரபாகரன் பார்த்துக்கொண்டிருப்பது போல ஒரு புகைப்படத்தை அட்டையில் வெளியிட்டது. அந்தப் பத்திரிகை விற்பனை செய்யப்பட்டது; மக்கள் முண்டியடித்துக்கொண்டு வாங்கினார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு இலங்கையைப் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் என்னுடன் கலந்துகொண்ட தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் பிரபாகரனின் படத்தை அட்டையில் போட்டால் அந்த இதழ் குறைந்தபட்சம் 50 ஆயிரம் பிரதிகள் கூடுதலாக விற்பனையாகின்றது என அந்த அரங்கில் சொன்னார். அப்போது போர் முடிந்திருக்கவில்லை. பிரபாகரன் இறந்திருக்கவில்லை. யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது இன்றைய சூழலில் பிரபாகரனுக்கே அதிகம் பொருந்தும். இதனால் என்ன பிரச்சினை என்று நீங்கள் கேட்கலாம். பிரபாகரன் குறித்த செய்திக்குப் பின்னால் இருக்கும் வணிக சாத்தியங்கள் இத்தகைய செய்திகளை ஊக்குவிக்கும் சக்தியாக மாறக்கூடிய அவலம்தான் இதில் பிரச்சினை.

வணிக நிலை ஒரு புறம் இருக்க, தமிழ்ப் பத்திரிகைகளின் பொதுவான புலி ஆதரவு நிலையும் சரி, ஆங்கில ஊடகங்களின் பொதுவான புலி எதிர்ப்பு நிலையும் சரி ஈழத்தின் உண்மைகளிடமிருந்து, மக்களிடமிருந்து வெகுவாக விலகியிருந்தன என்பது மேலும் தீவிரமான பிரச்சினை. பல வருடங்களுக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்காக எழும்பிய தன்னெழுச்சியான ஆதரவை இப்படிப்பட்ட எதிரெதிர் நிலைகள் கலைத்துப் போட்டுவிட்டன என எனக்குத் தோன்றுகிறது.

இலங்கையில் இருந்த தமிழர்கள் படும் அசலான துயரங்களை - சொல்லப்போனால் இலங்கையில் தமிழனாக இருப்பதே துயரம் என்று இன்றும் தொடரும் நிலையை - பெரும்பாலான ஊடகங்கள் கணக்கிலெடுக்கவில்லை - கவனப்படுத்தவுமில்லை. அவர்களுக்குத் தேவை ஒரு பிரதிநிதி. அவர்களது அரசியல் மற்றும் வியாபார உத்திகளுக்கு ஏற்றாற்போல அந்தப் பிரதிநிதியை கதாநாயகனாகவோ வில்லனாகவோ முன்னிறுத்திக்கொள்கிறார்கள்.

இதற்கான எதிர்வினையை நான் தமிழகத் தேர்தல் குறித்த செய்தி சேகரிப்புக்காகச் சென்ற பல கிராமங்களில் பார்க்க முடிந்தது. பல இடங்களில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு இருந்தது. ஆனால் அதை வைத்து வாக்குகளைத் தீர்மானிப்பதில் மக்களுக்குச் சிக்கல் இருந்தது. அது வேறு, இது வேறு என்பதே அவர்களது மனோபாவமாக இருந்தது. சிதம்பரத்தை அவர் தொகுதிக்குள் செய்யாமல் விட்ட விடயங்களுக்காகத் தோற்கடிப்போம், மற்றபடி அவரது ஈழ நிலைப்பாடு பற்றி எங்களுக்குப் பெரிய அக்கறை இல்லை - என்று சிவகங்கையில் நான் பேட்டி கண்ட மக்கள் சொன்னார்கள்.

ஈழத் தமிழரின் துயரங்களைச் சரியான மொழியில், சரியான முறையில் மக்களிடம் எடுத்துச் செல்லாதது ஊடகங்கள் செய்த மிகப் பெரிய தவறு. ஒரு பத்திரிகையாளர் என்ற காரணத்தால் பெரும்பாலான பத்திரிகைகளைப் படித்துவிடுவேன். ஆனால் கடந்த நவம்பரில் இலங்கைக்குச் செல்லும்வரை அங்கு வெள்ளை வான் கடத்தல்கள் நடப்பது எனக்குத் தெரியாது. புலிகளாக இருக்கக்கூடும் என்று கருதப்படும் அப்பாவி இளைஞர்கள் இலங்கை அரசாலும் துணை இராணுவத்தினராலும் வெள்ளை வான்கள் மூலமாகக் கடத்தப்படுகிறார்கள். வெள்ளை வான் என்பதற்கு இலங்கை அதிகார வர்க்கத்தின் அகராதியில் பல அர்த்தங்கள் உண்டு. சக்கரங்களின் மீது பயணிக்கும் பயங்கரவாதம், மரணம், காணாமல் போவது என்று பல அர்த்தங்கள்.

போர் புலிகளுக்கு மட்டும் எதிரானது அல்ல

2005ஆம் ஆண்டிலிருந்து கடந்த நவம்பர் வரை இலங்கை முழுவதும் கிட்டத்தட்ட 3 ஆயிரம் இளைஞர்கள் அப்படிக் காணாமல் போயிருக்கிறார்கள். கொழும்பில் மட்டும் 300 இளைஞர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள். இங்கு நமது ஆங்கில ஊடகங்கள் கட்டமைத்துக்கொண்டிருப்பது போல இலங்கையில் நடந்தது புலிகளுக்கு எதிரான போர் மட்டுமல்ல, தமிழர்களுக்கு எதிரான போர். அதிலும் அந்தப் போரில் பாதிக்கப்பட்டது, வடக்கிலிருந்த தமிழர்கள் மட்டுமல்ல, கிழக்கிலும் கொழும்பிலும் இருந்த தமிழர்களுக்கும் எதிராகவும் அந்தப் போர் நடந்தது. இந்த விடயத்தைக் கொழும்புக்கு நேரில் செல்லும்வரை என்னால் உணர முடியவில்லை.

தமிழ்நாட்டிலிருந்து வரும் எந்த ஊடகமும் இது பற்றி எழுதவில்லை. கொழும்பிலேயே தன் செய்தியாளரை வைத்திருக்கும் 'த இந்து' உட்பட எந்த இந்திய ஆங்கில ஊடகத்திற்கும் அரச பயங்கரவாதத்தின் இத்தகைய முகம் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. அதை அவர்கள் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்தார்கள். இராணுவம் தந்த செய்திகளை மீள்பிரசுரம் செய்துகொண்டிருப்பவர்களிடம் வேறு எதையும் எதிர்பார்க்கவும் முடியாது.

நடந்து முடிந்த போரில் வெற்றி அல்லது தோல்வி குறித்த மயக்கங்களில் அவரவர் அரசியலுக்கு ஏற்பப் பத்திரிகையாளர்களும் சிக்கிக் கொண்டுவிட்டார்கள். இந்தப் போரின் அவலங்களை மனித உரிமைப் பிரச்சினைகளாகப் பார்க்கவும் சொல்லவும் இந்தியப் பத்திரிகைகள் தவறிவிட்டன. குறிப்பாக மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதாகச் சொல்லிக்கொள்ளும் 'த இந்து' போன்ற ஆங்கிலப் பத்திரிகைகள் செய்த இமாலயத் தவறு அதுவாகும்.

'த இந்து'வைப் பொறுத்தவரை போர் நடந்து கொண்டிருந்தால் அரசு Zero Civilian Casuality (பொதுமக்களில் யாருக்கும் உயிர்ச் சேதம் நிகழாத) கொள்கையைக் கடைபிடிக்கிறது என்று அர்த்தம். பொதுமக்கள் சிறிதும் பாதிப்படையாத ஒரு போர் என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிடுகிறது. போர் முடிந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்திருக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டாலும் அது பத்திரிகை ஆசிரியர் ராமைப் பொறுத்தவரை Low intensity conflict (தீவிரம் மட்டாக இருக்கும் போர்).

சமீபத்தில் வவுனியா முகாம் சென்று மூன்று மணிநேரம் இருந்து திரும்பிவந்துவிட்டு அது ஒரு மேன்மையான அனுபவம் என்று எழுதியிருந்த ராம், அந்தச் சமயத்தில் இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒரு பேட்டி எடுத்திருந்தார். மூன்று பகுதிகளாக அந்தப் பேட்டி வெளியானது. அந்தப் பேட்டியில் குறிப்பிட்ட சில விடயங்களை மட்டும் இங்கு உதாரணம் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, கடந்த ஜனவரி மாதம் இலங்கையில் கொல்லப்பட்ட 'த சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவைப் பற்றி ராம் எழுப்பிய கேள்விகள்.


லசந்த விக்கிரமதுங்க

*ராம்: இலங்கையில் பத்திரிகையாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்தும் நெருக்கடிகள் பற்றியும் சர்வதேச அளவில் கவலை எழுப்பப்பட்டது. இவர்களில் சிலர் உங்களுடைய நண்பர்கள். குறிப்பாக லசந்த விக்ரமதுங்க. அவர் 2009 ஜனவரியில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜூன் மாதம் பெண் பத்திரிகையாளரான கிருஷ்ணி இஃபான் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு, பல மணிநேரம் விசாரிக்கப்பட்டு, பிறகு கண்டியில் விடுவிக்கப்பட்டார்.*

*ஜனாதிபதி மஹிந்த: இவையெல்லாம் வேண்டுமென்றே உருவாக்கப்படுகின்றன. நீங்கள் தெருவில் யாருடனாவது சண்டைபோடுகிறீர்கள்; அந்த மனிதர் உங்களை அடித்துவிட்டால், அதற்கு அரசு பொறுப்பேற்க முடியுமா? பத்திரிகையாளர்கள் எங்களுக்கு எதிராக இருந்தால்கூட நாங்கள் அவர்களுக்கு எதிராக எதையும் செய்யவில்லை. உதாரணமாக, ஒரு தமிழ் நாளிதழின் உரிமையாளரும் ஆசிரியரும் புலிகளை ஆதரிப்பதற்கான சாட்சியங்கள் எங்களுக்குக் கிடைத்தன. ஆனாலும் நாங்கள் அவர்களைப் பத்திரிகையாளர்களாகத்தான் நடத்தினோம். லசந்த என் நண்பர்தான். அவ்வப்போது வந்து என்னைச் சந்திப்பார். நிறைய விடயங்களைப் பற்றிச் சொல்வார். என் கட்சியில் நடக்கும் விடயங்களையெல்லாம் கூடச் சொல்வார். அதிகாலை இரண்டு மணிக்குக்கூட வருவார். பிறகு என் வண்டியில் அவரைக் கொண்டுவிடச் சொல்வேன்.*

*ராம்: கடைசியாக அவர் உங்களுக்குத்தான் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டாரா?*

*ஜனாதிபதி மஹிந்த: ஆமாம். ஆனால் நான் அந்த நேரத்தில் பிரார்த்தனையில் இருந்தேன். நான் வெளியில் இருந்திருந்தால் தொலைபேசியை என்னிடம் கொடுத்திருப்பார்கள். பிறகு, என் பாதுகாவலர்களிடம் மிகவும் கோபித்துக்கொண்டேன்.*


'த இந்து' ஆசிரியர் என்.ராம்

லசந்த விக்ரமதுங்க இறப்பதற்கு முன்பு எழுதிய ஒரு தலையங்கம் அவர் இறந்த பிறகு 'த சண்டே லீடரில்' வெளியானது. பரபரப்பைக் கிளப்பிய அந்த தலையங்கத்தை ராமும் படித்திருப்பார். அதன் பிறகும் இப்படிப்பட்ட தட்டையான கேள்விகளை அவரால் எப்படிக் கேட்க முடிந்தது என்று புரியவில்லை. அந்த தலையங்கத்திலிருந்து சில வரிகளை மட்டும் இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

*''தனது சொந்த மக்களைத் தொடர்ந்து குண்டுவீசிக் கொல்லும் ஒரே நாடு இலங்கைதான் என்ற எங்களது அதிர்ச்சியை நாங்கள் ஒருபோதும் மறைத்ததில்லை. நான் இரண்டுமுறை கொடுமையாகத் தாக்கப்பட்டேன் என்பது பரவலாக அறியப்பட்ட செய்தி. ஒருமுறை எனது வீட்டின் மீது எந்திரத் துப்பாக்கி குண்டு மழை பொழிந்தது. அரசின் உத்தரவாதங்கள் இருந்தாலும் இந்தத் தாக்குதல்களை நடத்தியவர்கள் பற்றி எந்த விசாரணையும் நடக்கவில்லை; அவர்கள் பிடிக்கப்படவும் இல்லை. இந்தத் தாக்குதல்களில் அரசின் கை இருக்கும் என்று நம்புவதற்கு எனக்குக் காரணம் இருக்கிறது. இறுதியாக நான் கொல்லப்படும்போது, அரசுதான் அந்தக் கொலையை நிகழ்த்தியிருக்கும்.*

*''ஜனாதிபதி மஹிந்த, என்னுடைய மரணத்தைத் தொடர்ந்து நீங்கள் பொருத்தமான தார்மீகச் சொற்களை உதிர்ப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். பொலிஸ்துறை உடனடி விசாரணை செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவீர்கள். ஆனால் நீங்கள் இதற்கு முன்பு உத்தரவிட்ட விசாரணைகளைப் போல இதிலிருந்தும் எந்த உண்மையும் வெளிவரப்போவதில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் எனது மரணத்துக்குப் பின்னால் யார் இருப்பார்கள் என்று நம் இருவருக்குமே தெரியும். ஆனால் அவரது பெயரைச் சொல்லும் தைரியம் இருக்காது. என் உயிர் மட்டுமல்ல உங்கள் பாதுகாப்பும் அந்த மௌனத்தில்தான் இருக்கிறது.''*

லசந்த விக்ரமதுங்க இலங்கையில் மிகவும் மதிக்கப்பட்ட மிக முக்கியமான பத்திரிகையாசிரியர்களில் ஒருவர். இங்கு என். ராம் போல (இப்படிச் சொல்வதற்கு என்னை லசந்தவின் ஆன்மா மன்னிக்கட்டும்). அவர் கொல்லப்பட்டபோது இங்கிருந்த ஊடகவியலாளர்கள் சிலர் இலங்கை அரசுக்கு எதிராக ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பத்திரிகை சுதந்திரத்துக்கான முன்னோடியாகப் பல சமயங்களில் தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்ட 'த இந்து'விலிருந்து ஒரு பத்திரிகையாளர்கூட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆச்சரியப்படும் விதத்தில் 'த இந்து' நடத்திக்கொண்டிருக்கும் 'ஏசியன் காலேஜ் ஒவ் ஜேர்னலிஸம்' என்கிற ஊடகவியல் கல்லூரியிலிருந்து 60 மாணவர்கள் வந்திருந்தார்கள். உரத்த குரல்களில் கோஷங்கள் எழுப்பினார்கள். அவர்களுடன் வந்த ஒரு பேராசிரியரிடம் எனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினேன். அவர் சொன்னார்: அவர்கள் இன்னும் ஊடகவியலாளராக மாறவில்லை - என்று நான் மிகவும் அவமானமாக உணர்ந்த தருணங்களில் ஒன்று அது.

மக்களை விடுங்கள், இலங்கையில் ஊடகங்கள் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வருவது பரவலாக அறியப்பட்ட விடயம். அங்கு போர் முடிந்த பிறகு புலம்பெயர்ந்த பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை பத்துக்கும் மேல். காரணம், அவர்களது புகைப்படங்கள் அரசு சார்புத் தொலைக்காட்சிகளிலும் செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டன - போர்க் காலத்தில் துரோகச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என்கிற குறிப்புகளுடன். இப்படியொரு செய்தி வெளியான பிறகு அந்தப் பட்டியலில் இருந்தவர்களில் ஒருவரான போத்தல ஜயந்த என்கிற சிங்களப் பத்திரிகையாளர் மீது கொலைவெறித் தாக்குதல் நடந்திருக்கிறது.

### இலங்கையில் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதை இந்திய ஊடகங்கள் கணக்கில் எடுக்கவில்லை

இலங்கையில் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவது, இந்தியாவில் குறிப்பாக தமிழக ஊடகத் துறையில் எத்தகைய எதிர்வினைகளை ஏற்படுத்திருக்கிறது என்று பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சுகிறது. லசந்த விக்ரமதுங்க மரணத்துக்குப் பிறகு ஒரு போராட்டம், வித்தியாதரன் கைதுக்குப் பிறகு ஒரு போராட்டம் என்று இங்கொன்றும் அங்கொன்றுமாகப் போராட்டங்கள் நடந்தன. ஆனால் இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் மீது மிகத் தீவிரமாக நடந்துவரும் தாக்குதல்கள் இங்குள்ள ஊடகங்களால், குறிப்பாக ஆங்கில ஊடகங்களால் பெரிய அளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இலங்கை ஊடகங்களுக்குத்தான் உயிர்ப் பயம். சர்வதேச ஊடகங்களும் இந்திய ஊடகங்களும் இலங்கைப் பிரச்சினையில் ஏன் மௌனம் காக்க வேண்டும்?

இந்த விடயத்தில் 'த இந்து'வின் இரட்டை நிலைப்பாடு பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். 'த இந்து' குழுமத்திலிருந்து வரும் 'ஃபிரண்ட் லைன்' என்ற மாதமிருமுறை இதழ் சற்றே ஆழமான செய்திக் கட்டுரைகளை வெளியிட்டு வரும் ஓர் இதழ். மிகவும் குறைவாகவே இது விற்பனையாகிறது. இராணுவம் தந்த செய்திகளை 'த இந்து'வில் அப்படியே எழுதும் அப்பத்திரிகையின் இலங்கைச் செய்தியாளர் முரளிதர ரெட்டி, ஃபிரண்ட் லைனில் எழுதுவதை எந்த ரகத்தில் சேர்ப்பதென்று தெரியவில்லை. எந்த முகாமுக்குச் சென்று வந்தது மேன்மையான அனுபவம் என்று ராம் சொன்னாரோ அந்த முகாம் நாஜிகளுக்கான வதை முகாம் போல இருக்கிறது என்று முஸ்லிம் தகவல் மையத்தை மேற்கோள் காட்டி ஃபிரண்ட் லைனில் சொல்கிறார் முரளிதர ரெட்டி. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதைப் பற்றியும் அதில் அவர் பேசுகிறார்.

'த இந்து'வைத் தவிர இங்கு வெளிவரும் ஏனைய ஆங்கிலப் பத்திரிகைகள் 'த இந்து'வைப் போலத் தீவிரமாகப் புலிகளை எதிர்ப்பதில்லை, இலங்கை அரசின் குரலைப் பிரதிபலிப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால் தமிழ் ஈழம், அதன் மக்கள், அவர்களது துயரங்கள் குறித்து ஒருவிதமான மௌனத்தையே இவை கடைப்பிடித்தன. சமீபத்தில் 'ரைம்ஸ் ஒஃப் இந்தியா' இல் வெளிவந்த வவுனியா முகாம் பற்றிய கட்டுரைகளை விதிவிலக்காகவே பார்க்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட ஊடகங்களைப் பொறுத்தவரை இலங்கையின் மனித உரிமை என்பது பூசாவில் உள்ள சிறுவர் போராளிகளுக்கான முகாமில் தொடங்கி புத்தளத்திலுள்ள விடுதலைப்புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான முகாமில் முடிவடைந்துவிடும்.

போருக்குப் பிந்திய காலகட்டத்தில் சிறுவர் போராளிகளைப் பற்றிய செய்திகளையும் கட்டுரைகளையும் கிட்டத்தட்ட எல்லா ஆங்கிலப் பத்திரிகைகளும் வெளியிட்டன. சிறுவர் போராளிகளின் பிரச்சினைகள், இஸ்லாமியர்களின் துயரங்களைப் பற்றி எழுதுவது அவசியம்தான். ஆனால் அப்படிப்பட்ட கட்டுரைகளை வெளியிடுவதற்குப் புலிகள் ஒடுக்கப்படும் வரை அவர்கள் காத்திருந்ததன் மர்மம்தான் விளங்கிக்கொள்ளும்படி இல்லை.

போர் முடிந்த பின்னர் தமிழகத்தில் உரக்க ஒலிக்கத் தொடங்கியிருக்கும் புலி எதிர்ப்புக் குரலையும் நாம் இந்தச் சூழலில் பொருத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இலங்கை அரசின் வெற்றிக் கொண்டாட்டங்களில் உளவியல் ரீதியாக ஒடுங்கிப் போயிருக்கிறார்கள் தமிழர்கள். முடிந்தால் புலம்பெயர்வது; முடியாவிட்டால் அடிமை வாழ்க்கைக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வது என்று வாழ்ந்துகொண்டிருக்கும் அவர்களுக்குத் தீவிரப் புலி ஆதரவு, வலுக்கும் புலி எதிர்ப்பு ஆகிய குரல்களின் பின்னணியிலிருக்கும் அரசியல் எந்த விதத்திலும் உதவாது. மாறாக, அவர்களது பிரச்சினைகளை அதிகமாக்கவே செய்யும்.

வட இந்திய ஆங்கிலத் தொலைக்காட்சிகள் பற்றியும் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஈழத்தமிழர்கள் பற்றிய பெரிய அக்கறை எதையும் இந்த ஊடகங்கள் இதுவரை வெளிப்படுத்தியதில்லை. ஆனால் பிரபாகரனின் மரணச் செய்தியைக் கொண்டாட்ட மனநிலையோடு அணுகினார்கள். பிரபாகரனின் மரணத்துக்கு முன்னும் பின்னும் தமிழர் வாழும் பகுதிகள் பற்றியும் அங்கு துயருறும் மக்கள் பற்றியும் சுருக்கமாகவேனும் செய்திகளைத் தர இந்த 24 மணி நேர செய்தி அலை வரிசைகளுக்கு முடியவில்லை.

என் பார்வையில், இலங்கையில் போர் நடந்த காலம் இந்திய ஊடகத் துறையின் இருண்ட காலம். இனிமேல் அவர்கள் எப்படிச் செயற்படுவார்கள் என்பது குறித்து எந்த நம்பிக்கையும் எனக்கு இல்லை. இரு பக்கத்து உண்மைகள் பற்றியும் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட மனிதர்களின் துயரம் பற்றியும் மொழி மற்றும் தேச எல்லைகளைக் கடந்து இனிமேலாவது இந்த ஊடகங்கள் பேசும் என்பதற்கான உத்தரவாதங்களோ அறிகுறிகளோ காணப்படவில்லை. புலி ஆதரவு அல்லது புலி எதிர்ப்பு என்கிற பெயரில் இலங்கை மக்கள் மீது குண்டுகளைப் போல வீசப்பட்ட இந்திய ஊடகங்களின் கள்ளத்தனமான மௌனங்கள் தொடரும் என்பதற்கான சாட்சியங்களாக உங்களைப் போலவே நானும் இருப்பேன், தெரிந்தோ தெரியாமலோ எனக்கும் அதில் பங்கு இருக்கிறது என்கின்ற கூடுதல் குற்றவுணர்ச்சியுடன். *

-கவிதா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

தோற்றம் 25 04 1928



மறைவு 28 08 2009

**அமரர் சிட்டனர் இரத்தினம்**

கடந்த 28.08.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீதிமன்ற வீதி, மல்லாகம். | சித்ரசுந்தரராசா (முதல் மகன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 10.03.1943



உதிர்வு 28.08.2009

அமரர் **தம்பியப்பா தெட்சணாமூர்த்தி**

(இளைப்பாறிய திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், பிரதேச செயலகம், வேலணை)

அகவை அறுபத்தாறினிலே ஆண்டவனைச் சென்றடைந்தீர்
அவன் சித்தம் அதுவானால் அதைத் தடுக்க யார் இங்கே?
இறகொடிந்த பறவைகளாக நாங்கள் ஏங்குகின்றோம் இங்கே
உறக்கமில்லை உம் நினைவால் உவப்புமில்லை இனி எமக்கு
உள்ளமொன்று உள்ளவரை உம்மை நாம் எம் நினைவினிலே ஏந்தி நிற்போம்
உம் ஆத்மா அமைதியுற அந்த ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி

19/2 பெருமாள் கோயில் தெற்கு வீதி, யாழ்ப்பாணம். | **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### சதாசிவம் சிவநாதன் (சிவம்)

**(முன்னாள் உரிமையாளர், கணேஸ்வரன் அன்சன்ஸ்)**



நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சரவணையில் வசித்தவரும் தற்போது பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவருமான சதாசிவம் சிவநாதன் 22.09.2009 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - புஸ்பவதியின் மகனும் காலஞ்சென்ற சீவரெத்தினம் மற்றும் இரத்தினத்தின் மருமகனும் காலஞ்சென்ற சத்தியரூபவதியின் அன்புக் கணவரும் சதாரூபன் (பிரான்ஸ்), யாழினி, சிவஜா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகிர்ஜா (பிரான்ஸ்), சுதாகரன் (சவுதி), பிரபாலன் (U.K) ஆகியோரின் அன்பு மாமனும் கிருத்திகா (U.K) கிருஷன் (U.K), சயானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் தனலெட்சுமி (பிரான்ஸ்), நாகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கணேஸ்வரன் (கணேஸ்வரன் அன்சன்ஸ் - ஊர்காவற்றுறை), ஜெயலெட்சுமி (கொழும்பு), மல்லிகா (சுவிஸ்), சாந்தா (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜமூர்த்தி (பிரான்ஸ்), சந்திராவதி (பிரான்ஸ்), தேவிகா, சிவசுப்பிரமணியம் (கொழும்பு), விக்கினராஜா (சுவிஸ்), ஜெயராஜசிங்கம் (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வி (பிரான்ஸ்), சுகந்தி (U.K), கனகரூபவதி, திருமகள், தவக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் வண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.192/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (89252) | *சதாரூபன் (ரூபன் - மகன்), த.இராசலிங்கம்.*

## சனிமாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. விலை 30/=
கணிப்பு: Prof. த.சத்தியதாஸன், ஆனைக்கோட்டை.
T.P.: 077 5009485 (89238)

## திருமண சேவை

48 வருட அனுபவம் மிக்க "புலவர்" திருமண சேவையுடன் தொடர்பு கொண்டு, உங்கள் திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.
**'மதுரகானம்',**
238, அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 7147
15A, 32வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு - 6.
T.P. 011 2500380 (89221)

## உயர்ந்த இன புறாக்களும் கூடுகளும் விற்பனைக்குண்டு

சைனா, ஜயிப்சன், அவுள், நண்ஸ், பாண்ரல், யக் அப்பின், (மோல்ட், சுறணம்)
தொடர்புகளுக்கு:- K.இராஜசேகரன்
சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
T.P: 0777792584
(ஜங்கரன் தொலைத்தொடர்பகம்)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில், டாக்டரின் பாவனையில் உள்ள Yamaha Mate 50 w விற்பனைக்கு உண்டு. ஞாயிறு (27.09.2009) பகல் நேரத்தில் பார்வையிடலாம்.
**சென்றல் நேசிங்ஹோம்**
**350, பலாலி வீதி, திருநெல்வேலி.**

## வீடு வாடகைக்கு

இல.35, வளாக ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் - 4 அறைகள், குசினி, விறாந்தை, தொலைபேசி வசதி, தண்ணீர் வசதி என்பவற்றுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: M. சிவானந்தராஜா
021 222 7577 (89244)

## விற்பனைக்கு

எங்களிடம் பின்வருவன விற்பனைக்கு உண்டு.
1. தரமான கறுப்பு, வெள்ளை எள்ளு
2. Empty 5 play காட்போட் பெட்டி
3. DELPI Lockheed Brack and Clutch oil (Fluid)

தொடர்பு :- **சிவா பிறதேர்ஸ்,**
**205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
T.P.: 021 2225497 (89226)

## விற்பனைக்கு

**இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட கொங்றீட்கற்கள் (12"x 6" x 4"), பூக்கல், வேலித் தூண்கள் என்பன விற்பனைக்குண்டு.**

தொடர்புகளுக்கு:
*021 222 8193,*
*0778695321*
(சி/ 561165)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.27

அரியாலை தென் கிழக்கு (ஜே/89), அரியாலை கிழக்கு (ஜே/90) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக்கலந்துரையாடல்அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதால் மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களைக் கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்திலநந்தனன் அறிவித்துள்ளார்.

(203-201)

## 32ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர் தம்பர்
**கணபதிப்பிள்ளை**

**தோற்றம்: 18.08.1925**
**மறைவு : 27.08.2009**

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்து துயரிலும் இறுதிக் கிரியை நிகழ்விலும் கலந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் ஏனைய வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறப்பிடம்: கேசரி வீதி, தையிட்டி
வதிவிடம்: வதிரி வீதி, (யூனியனடி)
இமையாணன், உடுப்பிட்டி. (சி/561151) | தகவல்: **குடும்பத்தினர்.**

## தாலாட்டும் உம் குரல் கேட்டு தவழ்ந்து சென்றது ஓராண்டு



திருமதி
**அருட்சோதி சிவனேஸ்வரி**

அன்னையின் மடியில்
04★10★1963

ஆண்டவன் அடியில்
27★09★2008

மாதங்கள் பத்து மடி சுமந்து பெற்ற தாயே
மண் உலகில் நீர் இல்லை மகிழ்ந்து உறவாட
மண்ணோடு மடிந்து விண்ணோடு அனுப்பி
இன்றோடு முடிந்ததம்மா ஓராண்டு
மடிந்து போனது நீரம்மா
மாசு கதை கட்டியது ஊரம்மா
இழந்து போனது உலகின் பொறுமையம்மா
உணர்த்திக் காட்டியது உன் இழப்பினையம்மா
கொஞ்சி வளர்த்த தாயே உனைக் கெஞ்சிக் கேட்கிறோம்
பிஞ்சு நெஞ்சங்களின் பதறல் தான் புரியவில்லையா
கதறியழும் கணவனின் கண்ணீருக்கும் இளகவில்லையோ!
உடன் பிறந்த சகோதரிகளின்
உள்ளக் குமுறல்களும் உணரவில்லையா
ஓடிப்போனது ஓராண்டு தான் அம்மா
ஓய்ந்து போகாது என்றும் உம் நினைவம்மா
கலைந்து போகாது நீர் கண்ட கனவம்மா
கடைசி வரை சென்று அடைவோம் உன் இலக்கினையம்மா
விதி வரைந்த பாதையில் சதி செய்த விளையாட்டில்,
மடிந்த எம் குலதெய்வமே உன் ஆத்மா
ஈசன் அடிசேர என்றும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதான வீதி,
வட்டு.தென்மேற்கு, வுட்டுக்கோட்டை. | தகவல்: குடும்பத்தினர். (89243)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர் சிவகடாட்சம்பிள்ளை
**சத்தியகுமாரன்** (மாவை வரோதயன்)
(பொதுச் சுகாதார பரிசோதகர் - கொழும்பு)

மகனாக: 12★09★1965
மகானாக: 28★08★2009

பனைப்பதி தந்த பேறே மாவை
பற்பல கலைகள் கற்றும் உன்
பலமதில் நிலையா நின்று பின்
வைத்தியத்துறையிலூன்றி நீயும்

வையகமே வளர வைத்தாய் இன்று
வைத்தியம் பொய்த்ததென்ன நின்
வாழ்வது போனதென்ன நாமும்
வாழ்வினில் யாரை நோவோம்

D-Block, 55/23, மாளிகாவத்தை தொடர்மாடியை நிரந்தர வதிவிடமாகவும் உடுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்து அமரத்துவமடைந்த எங்கள் தலைவன் சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்று (27.09.2009) ஞாயிற்றுக்கிழமை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"[illegible] இல்லம்"*
*உடுவில் தெற்கு, சுன்னாகம்.*
*021459110, 0777714556.* (89240)

**பெற்றோர், மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வந்திட்டாரய்யா... வந்திட்டார்!

தமிழ்த் திரையுலகில் 'நவரச நாயகன்' என்ற பட்டத்தோடு உலா வந்து பல வெற்றிப்படங்களில் நடித்தவர் காத்திக். இவரிடம் நடிப்புத் திறமை இருந்தாலும் அதனையும் மிஞ்சக்கூடிய வகையில் தனிப்பட்ட ரீதியில் படத்தயாரிப்பாளர்களுடன் ஒத்துழைக்காத தன்மை இருந்ததால் திரையுலகில் இருந்தே காணாமல் போனார். எனினும் சிறிது காலம் அரசியலிலும் தலைகாட்டிப் பார்த்தார் கார்த்திக். அவரது கெட்ட காலம் அங்கும் தொடர்ந்தது. இதனால் மீண்டும் அரிதாரம் பூச கார்த்திக் ஆயத்தமாகி விட்டார். அருண்விஜய் நடிப்பில் உருவாகும் 'மாஞ்சா வேலு' என்ற படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் கார்த்திக் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளார்.




# திரைவிமர்சனம்

உலக நாயகன் கமலஹாசன், மலையாள சுப்பர்ஸ்ரார் மோகன்லால், லட்சுமி, ஸ்ரீமன், சந்தான பாரதி, அனுஜா,பூனம் ஆகியோரின் நடிப்பில் சக்ரி இயக்கத்தில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் திரைப்படம் 'உன்னைப் போல் ஒருவன்'.

ஒருநாள் காய்கறி வாங்கச் செல்லும் கமல் அரைகுறையாகக் கட்டப்பட்டுள்ள கட்டடம் ஒன்றின் உச்சிக்குச் செல்கின்றார். அங்கு சில நவீன சாதனங்களைப் பொருத்தி அதன் மூலம் பொலீஸ் அதிகாரியான மோகன்லாலுக்கு நகரத்தில் பல இடங்களில் தான் குண்டு வைத்திருப்பதாக போனில் தகவல் சொல்கின்றார். அதன் பின் நகரத்தில் வைக்கப்பட்டிருக்கும் குண்டுகளைத் தேடி களைத்துப் போகின்றது பொலீஸ். இதேவேளை பொலீஸின் பிடியில் உள்ள நான்கு தீவிர வாதிகளை விடுவித்தால் குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதாகக் கமல் கூறுகின்றார். வேறு வழியின்றி அவர் நிபந்தனையை ஏற்றுத் தீவிரவாதிகளை விடுவிக்கின்றார்கள். ஆனால் விடுவிக்கப்பட்ட மறு நொடியே வெடி குண்டில் தீவிரவாதிகள் பலியாகின்றார்கள். கமல் ஏன் குண்டுகளை வைத்தார்? தீவிரவாதிகள் ஏன் பலியானார்கள்? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைதருகின்றது 'உன்னைப்போல் ஒருவன்'.

மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த சராசரி மனிதனாக கமலும் நேர்மையான பொலீஸ் அதிகாரியாக மோகன்லாலும் தத்தம் பாத்திரங்களில் நடித்திருக்கின்றார்கள் என்பதை விடஷம் வாழ்ந்திருக்கிறார்கள் என்று சொல்வதே பொருத்தமாகும். அந்தளவு தூரம் தாம் ஏற்றுள்ள பாத்திரங்களை இரத்தமும் சதையுமாக இருவரும் பார்வையாளர் முன் நிறுத்துகின்றார்கள்.

ஸ்ருதி கமலஹாசனின் இசையும் வித்தியாசமானதாகவும் படத்தின் கதையோட்டத்திற்குத் துணை செய்வதாகவும் அமைந்துள்ளது. படத்தின் வசனங்களும் அற்புதமாக அமைந்துள்ளன.

காதல் காட்சிகளும் குத்துப் பாட்டுகளும் இரத்த ஆறு ஓடும் சண்டைக்காட்சிகளும் நிரம்பிய தமிழ்த் திரைப்படங்களின் நடுவே வித்தியாசமானதாகவும் சமூகக் கருத்துகளை முன் நிறுத்துவதாகவும் அமைந்துள்ளது 'உன்னைப்போல் ஒருவன்'.

# கூட்டணி



நடன இயக்குனராக அறிமுகமாகி, பின்னர் நடிகர், இயக்குனர் என்று பல அவதாரங்களை எடுத்தவர் லாரன்ஸ். தெலுங்கில் இவர் வெற்றிகரமான இயக்குனராகவும் நடிகராகவும் உலா வருகின்றார். ஆயினும் அது போல தமிழில் வெற்றிப் படம் ஒன்றைக் கொடுக்க முடியாதவராகவே லாரன்ஸ் இருக்கின்றார். லாரன்சின் இயக்கித்தில் ராஜ்கிரண் நடித்த 'முனி' என்ற படம் வெற்றி பெறா விட்டாலும் முதலுக்கு மோசம் செய்யாமல் ஓடியது. இதனால் லாரன்ஸ் மீது நம்பிக்கை வைத்து புதிய படமொன்றை ராஜ்கிரண் தயாரிக்கவுள்ளார். இதிலும் ராஜ்கிரண், லாரன்ஸ் கூட்டணியே இணைந்து நடிக்கும் என்று தெரியவருகின்றது.






## நீச்சல் உடைக்குத் தயார்

அண்மைக்காலமாக நீச்சல் உடையில் நடிக்கும் பழக்கம் நடிகைகளிடையே வெகு வேகமாகப் பரவிவருகின்றது. பிரியாமணி, ஸ்ரேயா, நமீதா, நயன்தாரா என்று தமிழில் முன்னணி நிலையில் உள்ள நடிகைகள் எல்லோருமே நீச்சல் உடையில் தோன்றிவிட்டார்கள். இவர்களின் வரிசையில் இணைவதற்குத் தானும் தயார் என்று அதிரடி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார் நடிகை கீர்த்தி சாவ்லா. தற்போது இவர் 'ஸ்வேதா' என்ற படத்தில் நடித்து வருகின்றார். இப்படத்திலேயே நீச்சல் உடையில் தோன்ற இருப்பதாகக் கூறியுள்ளார். இந்தப் படத்தில் நாயகியை அடைய வேண்டும் என்ற வெறியோடு அலையும் வில்லனிடம் இருந்து தப்பித் தோடும் பெண்ணாக கீர்த்தி சாவ்லா நடித்து வருகின்றார்.



# நெருப்புச் சண்டை

சுப்பர்ஸ்ரார் ரஜினி காந்தின் நடிப்பில் ஷங்கரின் இயக்கத்தில் வேகமாக உருவாகிவருகின்றது 'எந்திரன்' திரைப் படம். விஞ்ஞானம் சார்ந்த கதை என்பதால் அதிகளவு எதிர்பார்ப்பை படம் உண்டு பண்ணியிருக்கின்றது. படத்தின் படப்பிடிப்புகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. அண்மையில் விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றில் பற்றி எரியும் நெருப்பின் நடுவே வில்லன்களுடன் ரஜினி மோதும் காட்சி படமாக்கப்பட்டுள்ளது. இந்த நெருப்புச் சண்டை படத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடித் தேவை
## காணி/கட்டட நிலையம்

இலங்கையின் முன்னணி கூட்டு வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு, அதன் வடமாகாண வர்த்தகத்திற்கு உகந்த காட்சியறை மற்றும் களஞ்சியத் தேவைகளுக்கு ஏற்ற இடம் தேவை.

நீண்ட வருடக் குத்தகையின் அடிப்படையில் சுமார் 1000 தொடக்கம் 3000 சதுர அடி பரப்புடைய யாழ்.நகர எல்லைக்குள் நகர மத்தியில் பிரதான வீதியில் அமைந்த இடமாக இருத்தல் வேண்டும்.

**உடனடிப் பார்வைக்கு அழையுங்கள்**

T.P: 0115448833 (Office)

0772539466 (Mobile)    (சி/561114)

## கோழிக்குஞ்சு விநியோகம்

* புறொயிலர் குஞ்சுகள் * பேட்டுக் குஞ்சுகள்
* முட்டைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

விநியோகம்: புதன்கிழமை (30.09.2009)

தொடர்புகளுக்கு: அபிசா ரேடர்ஸ்

K.K.S றோட், யாழ்ப்பாணம்.

(மீட்டாக்கடை சந்தி, முஸ்லிம் றோட்டல் அருகில்)

T.P: 0772487500, 021 7210816


## தவறிவிட்டது

கரணவாய் வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த வேலாயுதம் குணபாஸ்கரசிங்கம் என்பரவது தே.அ.அ.(740501968V) யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து தவவும்.    (89253)

USHA
it's a better life

உஷா தையல் மெசின்
உஷா மின் விசிறி

யாழ்பாண விநியோகஸ்தர்
ஜப்னா இலக்ரிக்கல்ஸ்
இல-94(6) ஸ்டென்லி றோட்
யாழ்ப்பாணம்
Tel : 021 - 2222353



இலங்கைக்கு இறக்குமதி செய்பவர்
நெல்சன்ஸ் என்டபிரைசஸ்
124, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. Tel : 2343586

விநியோகஸ்தர்
K. I. R. ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்
186-C, அநகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவல. Tel : 2713580
Dickson Ad

## Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna

**Apply for following course immediately**

**01.Radio, TV & Electronic Servicing Practice**
(தமிழ் மொழி மூலம்)
முழு அளவிலான செயல்முறைப் பயிற்சிநெறி-6 மாதங்கள் (முழுநேரம்)
விசேட பயிற்சிகள்:UPS, Computer Power Supply, Monitor, CD Player, DVD & Cell Phone பழுது பார்த்தல்.
கல்வித் தகைமை: G.C.E (O/L) வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

02. Fundamentals of Information and Computer Technology
General Information Technology (GIT) & Information and Communication Technology (ICT)
மாணவர்களுக்கான விசேட மாலை நேரப் பயிற்சிநெறி புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது.
(Information Technology Tools, Ms Office, Logic Gates, Number System, Pascal/VB, System development modules, Networking, and Interent & e-mail ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன)

03. Electrical Wiring
(வீட்டு மின் இணைப்பு)
Duration: 1 year

04. Electrical and Electronics
(மின்னியலும் இலத்திரனியலும்)
Duration:6 months

05. Refrigeration & Air Condition Mechanic
குளிர்சாதனப் பெட்டி (fridge),வளி சீராக்கி (Air-Conditioner)திருத்துதலும்,பொருத்துதலும்)
Duration: 1 Year

மேலதிக விவரங்களுக்கு:-
**Director, Jaffna College Institute of Technology, Vaddukoddai, Jaffna, Sri Lanka.**
**Tel NO: 0213213139/0212228275**    E-mail: jcit @ sltnet.lk

(இ/ 561113)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம்
அரியாலை
முள்ளி வீதியில்
வீட்டுடன்
4 1/4 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு
தொடர்பு
075 7136191
021 3001997


### இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.27

குருநகர் தூய பியோ விளையாட்டுக் கழகத்தின் 16 ஆவது வருட நிறைவை முன்னிட்டு கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட் திரு.ஆர்.எச். நேசராஜா தலைமையில் இடம்பெறும்.    (201)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 - 05 - 1936



ஆண்டவன் அரவணைப்பில் 08 - 10 - 2008

**அமரர் செல்வி உமா மகேஸ்வரி பொன்னையா**
(திதி: புரட்டாதி மாத பூர்வபக்க நவமி)

நட நட என நடந்தாள் நல்லூரான் அடி
விடுவிடு என விரைந்தாள் விடைதேடி விநாயகர் அடி
கடகட எனக் கடந்தாள் பிறவிப் பெருங்கடல்
அடைந்தாள் சிவயோகீஸ்வரத்து அம்பாள் பாதத்தை
மகா நவமித்திதி தனிலே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிருபாகரன் பொன்னையா
(அவுஸ்திரேலியா).
வரதலட்சுமி வைற்றஸ்,
இல.198, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.    (89186)

அன்புடன் நினைவு கூரும்:
உடன்பிறப்புக்கள், மைத்துனர், மைத்துனிமார், பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்.

# சொல்பவர்கள் சொல்லட்டும்
# எம்மவர்கள் நிரூபித்துள்ளார்கள்
# நாமே NO.1 என்பதை.

**BIT**
University of Colombo School of Computing

மாணவர்களின் நன்மை கருதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் பதிவுகள் எமது யாழ்க்கிளையில் மேற்கொள்ளும் வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

Total Course Fee for 3years 148,125/=

Free...
Pentium 4 System,
8GB Flash Drive & T-Shirt

**HND** edexcel
in Computing



Total Course Fee 181,440/=

*O/L* தகைமையுடன்
கொழும்பு பல்கலைக்கழகத்தின்
BIT பட்டப்படிப்பை
மேற்கொள்ள முடியுமா???

**FIT** Foundation in Information Technology
University of Colombo School of Computing

CCNA CISCO CERTIFIED™
**CCNA**
CICSO Certified Network Associate

கொழும்பின் பிரபல விரிவுரையாளர்களின்
ஒருங்கிணைந்த சேவையில்
முந்திலும் செய்முறையுடன் கூடிய விரிவுரைகள்

யாழ் மண்ணில் ஆரம்பம் 05.10.2009

**BCS**
British Computer Society

Total Course Fee for All Levels
82,800/=



2008ஆம் ஆண்டு நிகழ்ந்த **BCS** பட்டமளிப்பு விழாவில் இலங்கை மாணவர்கட்கு 11 விருதுகள் வழங்கப்பட்டன அவற்றுள் 10 விருதுகளை ESOFT மாணவர்கள் வென்றார்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

**ESOFT**

**Jaffna Branch:**
**114, Navalar Road, Jaffna**
**T.P- 0212224142**

**Nelliady Branch:**
**153,Jaffna Road, Nelliady**
**T.P- 0212264940**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org